
அவள்
ஒரு
மோகனம்
பூவை.எஸ்.ஆறுமுகம்

# அவள் ஒரு மோகனம்!

பூவை எஸ். ஆறுமுகம்

மணிவாசகர் பதிப்பகம்
55, லிங்கி தெரு, சென்னை-600 001.

முதற்பதிப்பு : டிசம்பர், 1988

உரிமை : திருமதி அகிலாண்டம்
பூவை எஸ். ஆறுமுகம்
பூவைமாநகர் - 614624

பக்கங்கள் : 104+12

விலை ரூ. 9-00

பூவை எஸ். ஆறுமுகம் மணிவிழா வெளியீடு

கிடைக்குமிடம்
மணிவாசகர் நூலகம்
12-B, மேல சன்னதி, சிதம்பரம்-608001
14, சுங்குராம் தெரு, பாரிமுனை, சென்னை-600001
55, லிங்கிச் செட்டித் தெரு, சென்னை-600001
28-A, வடக்கு ஆவணி மூல வீதி, மதுரை-625001
3/4 ராஜா வீதி கோயமுத்தூர்-641001
20, நந்தி கோயில் தெரு, திருச்சி-620002
சென்னை போன் : 512996, சிதம்பரம் போன் : 2799

அச்சிட்டோர் : கற்பகம் அச்சகம், நல்லதம்பி தெரு,
சென்னை -600 002.

# எழுத்தை மட்டும் நம்பி!

ச. மெய்யப்பன், எம். ஏ.,
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்

ஐம்பது ஆண்டுகளாகத் தமிழில் நாவல் இலக்கியம் நலமுடன் வளர்ந்து வருகிறது. சமூக நாவல்கள், பிரச்சினை நாவல்களுடன், தனித்தன்மை சான்ற வட்டார நாவல்களும் வெளிவருகின்றன. பல்கலைக்கழகங்களில் நாவல்கள் பாடநூல் ஆகின்றன. தமிழ் நாவல்களைப் பற்றி நூற்றுக்கும் மேற்பட்ட ஆய்வேடுகள் தமிழ் வழங்கும் இந்தியப் பல்கலைக்கழகங்களில் ஆய்வேடுகளாக அளிக்கப் பெற்றுள்ளன. அவற்றில் பல அச்சாகி உள்ளன. நாவல் இலக்கியம் பற்றிய திறனாய்வுகள் ஐம்பதுக்கு மேல் வெளி வந்துள்ளன. நாவலாசிரியர்கள் சமூகப் பிரச்சினைகளை அலசி ஆராய்வதாலும் கருத்துக்களைப் பிரச்சாரம் செய்வதாலும் தீர்வுகள் கூறுவதாலும் சமூகத்தில் இந்நாளில் மதிப்புப்பெற்று வருகின்றனர். காப்பியங்கள் போன்ற பெருநாவல்களும் இப்பொழுது தமிழில் வெளி வருகின்றன. தலைகீழ் விகிதமாக மாத நாவல்களாகிய புற்றீசல்களும் பலவாகத் தோன்றி மறைகின்றன. வெறும் பொழுதுபோக்குக்காக எழுதப்படும் மாத நாவல் கள் மிகுந்த பரபரப்புடன் விற்பனையாகி, வந்த சுவடு தெரியாமல் மறைந்துவிடுகின்றன. ராணிமுத்து, இருபது

ஆண்டுகளாக 240 நாவல்களையும் மாலைமதி திங்கள் இதழாய், மாதமிருமுறையாய், வாரஇதழாய் நூற்றுக் கணக்கான நாவல்களையும் வெளியிட்டுள்ளது. மாத நாவல் என்னும் நோய் நாவல் இலக்கிய வளர்ச்சியை எந்த அளவு பாதித்துள்ளது என்பதை ஆராயவேண்டிய காலம் இது.

குறுநாவல்களுக்குக் குறுநாவல்களின் வடிவம் சிதைந்தும் சீர்குலைந்தும் வருகிறது. எவ்வாறாயினும் இருபதாம் நூற்றாண்டுத் தமிழ் இலக்கியத்தில்—தமிழ் இலக்கிய வரலாற்றில்—நாவல் இலக்கியத்திற்கு ஒரு நல்ல இடமுண்டு.

முப்பது ஆண்டுகளாக பூவை எஸ். ஆறுமுகம் அவர்கள் நல்ல பல நாவல்களை எழுதியுள்ளார்கள். பலநூறு சிறுகதைகளையும் படைத்தவர். முதற் காளாஞ்சி என்னும் சிறுகதைக்கு முதற்பரிசு பெற்றவர். நாவலுக்காகத் தமிழ்வளர்ச்சிக் கழகத்தின் பரிசு பெற்ற வர். சிறுகதை, புதினம், கட்டுரை, வாழ்க்கை வரலாறு, திறனாய்வு எனப் பல வடிவங்களிலும் நூல் படைத்தவர். உலகம் புகழும் அன்னை தெரசா அம்மையாரின் வாழ்க்கை வரலாற்றை மிகச் சிறப்பாக எழுதியுள்ளார். ஏலக்காய்பற்றி இவர் எழுதிய நூல் வேளாண்மைத் துறைக்குப் புதிய வரவாகும், நல்வரவும் ஆகும். 'கல்கி முதல் அகிலன் வரை' என்னும் நூல் திறனாய்வுத்துறைக்கு இவர்கள் அளித்த கொடை ஆகும். 'அகிலன் முதல் சுஜாதா வரை' என்னும் நூலிலும் சிவசங்கரி உள்ளிட்ட படைப்பிலக்கிய ஆசிரியர்கள் பற்றிச் சிறந்த முறையில் திறனாய்வு செய்துள்ளார்.

முப்பது ஆண்டுகளுக்கு முன்பு உமா இதழின் ஆசிரிய ராக அமைந்து சிறந்த இலக்கிய இதழை நடத்திய பெருமை இவர்களைச் சேரும். துறைதொறும் சிறந்து விளங்கும் தமிழ்ப் பெருமக்கள் பலரைப் பேட்டி கண்டு,

மிகச்சிறப்பாக வெளியிட்டவர்கள். 'புனைபெயரும் முதகதையும்' என்னும் நூல் இவர்களது திறனாய்வுத் திறனுக்கு ஒரு சான்றாக அமைகிறது.

எளிய வாழ்க்கையும், உயர்ந்த நோக்கமும் கொண்ட இவர்கள் எழுத்தையே நம்பி வாழ்கிறார்கள். ஆனால் தமிழ்நாட்டில் எழுத்தை மட்டுமே நம்பி வாழமுடியாத நிலைமையில் தவிக்கிறார்கள். எல்லா இலக்கிய வடிவங்களில் எழுதியும் எவ்வளவோ எழுதியும் வசதியான வாழ்வும் சமூக அந்தஸ்தும் பெற தமிழகத்தில் வாய்ப்பு இல்லாமல் இருக்கிறது. பிரபலமான பத்திரிகைகளில் இடைவிடாது தொடர்ந்து எழுதினால்தான் ஓரளவு பிழைப்பு நடத்தமுடிகிறது. வாழ்க்கைப் போராட்டத்தில் எழுத்துத் தவம் செய்யும் பூவை ஆறுமுகனாருக்கு இது மணிவிழா ஆண்டு. அவருடைய மணிவிழாச் சிறப்பு வெளியீடாக மணிவாசகர் பதிப்பகம் இந்த நாவலை வெளியிடுகிறது. பூவை ஆறுமுகம் என்னும் பெயர் பலரறிந்த பெயர்; நல்ல பெயர்; நாடறியவேண்டிய பெயர். நல்லவருக்கு மணிவிழா ஆண்டில் எல்லா நலன்களும் நிரம்ப தமிழன்னை அருள்புரிவாளாக.

## உங்கள் 'பூவை' பேசுகிறேன்:

நடைமுறைப் பூர்வமான வேடிக்கை ஒன்று! இந்த வேடிக்கை, மண்ணுலக வாழ்க்கைக்கு மட்டுமல்லாமல், விண்ணுலகத்தின் வாழ்விற்கும் ஒரு விதியாகவும்—விதியின் விதியாகவும் அமைந்தது!

உண்மைதான்!

கவிச்சக்கரவர்த்திக்கு விதியின் நாயகியாக மிதிலைச் செல்வியாம் சீதை கிடைத்தாள்.

எனக்கோ, விதிக்கு ஒரு நாயகியாக ரேவதி கிடைத்தாள்! அவள் வெறும் ரேவதி அல்லள்; டாக்டர் ரேவதி எம். எஸ், எம். பி. பி. எஸ், டி. ஜி. ஓ, ஃஎப். ஆர். ஸி. எஸ், ஃஎம். ஐ. ஸி. எஸ், ஃஎப். ஏ. ஸி. எஸ்! பட்டங்கள் ஆள்கின்றவள்; சட்டங்கள் செய்கின்றவளும் அவளே!—அதனால்தான், "நானே ஒரு விதிதான்!... ஆமாம்; எனக்கு நானேதான் விதி!" என்பதாகப் பெண்மை சிறக்கவும் நிறக்கவும் தமிழச்சியாக முழக்கம் செய்தாளோ?

அவள் வேடிக்கையானவள்!—அவள் எனில், டாக்டர் ரேவதி!

வாழ்க்கை மட்டிலும், மட்டில்லா வேடிக்கை இல்லையா, என்ன?

பாரதி, அமரகவி!— ஆகவேதான், இன்றைய ஜன நாயக மரபு துலங்கிட, அன்றைக்கே அவனால் பாட்டுக் கட்ட முடிந்தது! எங்கெங்கும் சக்தியைக் கண்டவன்!—அதனால்தான், பெண்மை வாழ்கவென்றும், பெண்மை வெல்கவென்றும் கூத்திட்டான்; கூத்து ஆடினான்!

அலகிலா விளையாட்டுடைய அப்பனே அம்மையப்பன் ஆகிப் பெண்மைக்கு வாழ்த்துரைத்து அனைத்து உலகிற்கும் முன் உரிமை பெற்ற முன் உதாரணம் ஆனான்!

அந்த அறநெறிமுறை மரபினில் உதித்த பாரதி, பாரதத் தமிழ்ச் சமுதாயத்தில், உயிரினைக் காத்து உயிரினைச் சேர்த்து உயிரினுக்கு உயிராய் இன்பமாகி, உயிரினும் 'பெண்மை' இனிக்கக் கண்டதில் வியப்பில்லை தான்!

அந்தப் பெண்மைக்குச் சத்தியத்தின் தருமமாகவும் தருமத்தின் உண்மையாகவும், உண்மையின் சத்தியமாகவும் விளங்குகிறாள் ரேவதி—டாக்டர் ரேவதி! அவள் சுந்தரக்கிளி மாத்திரமல்லள்; சுதந்திரக்குயிலும் கூட!

ஓர் அதிசயம்!

டாக்டர் ரேவதிக்கு மணமகன் தேவையாம்!

செய்தித்தாள்களில் விளம்பரங்கள் பேசின!

ரேவதியின் மருத்துவமனையில் தோழிமார்கள் இருவர் ரேவதியை—ஊகூம், டாக்டர் ரேவதியை விமரிசனம் செய்கின்றனர்.

மஞ்சுளாவுக்கு டாக்டர் ரேவதியைப் பிடிக்காது.

ஆனால், பிருந்தாவுக்கு டாக்டர் ரேவதியென்றால், நிரம்பியதோர் ஈடுபாடு! அவள் சொல்லுவாள்: "டாக்டர் ரேவதின்னா எனக்கு ரொம்பவும் பிடிக்கும்; எப்படியாவது அவங்க திருமணம் நடக்கட்டும்! ரேவதி அம்மாவோட மனப்போக்கே தனி; தனித்தன்மையானது. அதைப் புரிஞ்சுக்கிடாதவங்க, 'டாக்டர் ரேவதி அகம்பாவம் பிடிச்சவங்க' அப்படின்னு சொல்லுவாங்க! நான் அறிஞ்சவரை, ரேவதி—டாக்டர் ரேவதி அன்புக்கு ரொம்ப ரொம்பக் கட்டுப்படுறவங்க! எதிலேயும் எப்பவுமே ஒரு நியாயம் வேணும்னு நினைக்கிறதும் நம்புறதும் எதிர்பார்க்கிறதும் தப்பா?"

தோழி பிருந்தாவின் இதய ஒலிக்கு இதய ஒளி ஆனவள்தான் ரேவதி—டாக்டர் ரேவதி!

அதிநவீனமானதும், அநீதமானதுமான இன்றையக் கம்ப்யூட்டர் யுக'த்திலே பெண் ஒருத்தி 'மணமகன் தேவை' என்பதாக நாளேடுகளிலே விளம்பரப்படுத்துவது கொச்சையான செய்தி அல்ல! — கொச்சைப்படுத்த வேண்டிய தகவலும் இல்லை!—கொச்சைப்படுத்தப்பட வேண்டிய விஷயமும் அல்லதானே?

டாக்டர் ரேவதி செய்த விளம்பரங்களுக்கு இணங்கிப் புகைப்படங்கள் சகிதம் வந்த விண்ணப்பங்கள்—மனுக்கள் எத்தனை தெரியுமோ?—680.

ஆனால், அவளுக்கு ஒரேயொரு மணமகன்தான் தேவை! — அவள் தமிழ்ச்சாதிப் பாவை! அவள் எட்டுப் பேர்களைத் தேர்வு செய்து தாக்கல் அனுப்புகிறாள்! 'எனக்கு நான்தான் விதி! அதனாலேதான், இப்படிச் செஞ்சேன். சோதனையோட நல்லதும் கெட்டதும் எனக்குப் புரிஞ்ச புதிர்தான். அதுவேதான் இந்த ரேவதி யோட ஜாதக விசேஷம்!...அதுவேதான் ரேவதி... டாக்டர் ரேவதி! விதின்னு ஒண்ணு இருந்தால்கூட, அதோட வறட்டு ஜம்பம் என் கையிலே சாயவே சாயாது!...' அவள் எண்ணுகிறாள் இப்படி: எக்காளச் சிரிப்பு சீறுகிறது; சிதறுகிறது. சிரித்தது அவள்தான்!— விதி அல்ல! விதி சிரிப்பதாகச் சொல்வதெல்லாம் அசல் பொய்!

உணர்வுகள், மன உணர்வுகள் மண உணர்வுகளாகித் தாயம் ஆடுகின்றன.

டாக்டர் ரேவதியின் மனவோட்டம் உள்வட்டம் சுழித்து மேலும் ஓடுகிறது; மென்மேலும் ஆடுகிறது!— 'எல்லாவகையிலும் என் மனத்துக்குப் பிடித்தமான ஒருவரை—எனக்கு எல்லா வழியிலும் பொருத்தமான ஒருவரை—எனக்குக் கணவராகத் தேர்ந்தெடுப்பேன், நான்! என்னால் அப்படித் தேர்ந்தெடுக்கப்படுகிற அம் மனிதர், ஊரறிந்த என்னுடைய உயர்வு மனப்பான்மையை உணர்ந்தும் மதித்தும் போற்றியும் நடக்கத் தெரிந்தவர் தான் என்று நான் நம்பினால்தான், அந்த மனிதர் என் நம்பிக்கைக்குப் பாத்திரமாகி எனக்கு நாயகனாகவும் ஆக முடியும்! ஆமாம்; இது என் வாழ்க்கைப் பிரச்னை!— மற்றப்படி, ஊர் உலகத்தைப் பற்றி எனக்குக் கவலை கிடையாது! தவிரவும், சுதந்திரப் பறவையான இந்த

டாக்டர் ரேவதியின் சொந்த உரிமையாக்கும் இது!... இந்த உரிமைக்கு, உயிரால் உறவு சொல்லத் தெரிந்த, உறவுகாட்டத் துணிந்த, அசலான உண்மை மனிதர் ஒருவர் கிடைத்தால்தான் எனக்குப் புதிய வாழ்க்கை கிடைக்கும்!—இதுவேதான் சத்தியமான, தர்மமான, உண்மையான என் முடிவு ஆகும்! ஏன், தெரியுமா? எனக்கு நான்தான் விதி! அந்த விதிதான் டாக்டர் ரேவதி! நான் விதியின் நாயகியாக்கும்!' அவள் சுயப் பிரக்ஞையை மீட்டுக்கொள்கிறாள்.

விடிகிறது, பொழுது; அது ஊர்கிறது; தவழ்கிறது; நடக்கிறது; ஓடுகிறது.

செயலாளர் செயலிழந்து வருகிறார். ''டாக்டரம்மா! நீங்க நடத்தப்போற மாப்பிள்ளைப் போட்டிக்காக மணி ஐந்தாகியும் பொறுமையோட காத்துக்கிணு இருந்தாங்க அந்த எட்டுப்பேரும். அந்நேரம் பார்த்து யாரோ சிதம்பரம்னு ஒருத்தர் வந்து அவங்களோட காதிலே என்னமோ சிதம்பர ரகசியத்தை ஓதினார். என்னமோ 'எச்சில்பழம், எச்சில் பழம்' என்கிற வார்த்தைங்க மட்டிலுந்தான் எனக்குக் கேட்டுச்சுங்க. டாக்டர் அம்மா! அவ்வளவுதான்; மறு நிமிஷம், வந்தவங்க எட்டுப்பேரும் பேய் பிசாசைக் கண்டதாட்டம் விழுந்தடிச்சுக்கிட்டு ஓடிப் போயிட்டாங்களே!'' என்றார்.

அவள் சிரிக்கிறாள்!—விதி சிரிக்கவில்லை; டாக்டர் ரேவதியேதான் சிரிக்கிறாள்! சிரித்துக் கொண்டே தன்னுடைய அந்தரங்கமான அறைக்கு அந்தரங்கசுத்தியுடன் ஓடுகிறாள். தாழ் இடுகிறாள். அன்புக்கு அடைக்குந்தாழ் வேண்டியதில்லைதான்! அறைக்கு — தனி அறைக்கு—தனிப் பெண் ஒருத்தியின் அந்தரங்க அறைக்கு அடைக்குந்தாழ் வேண்டும்தானே? அவளுடைய பெண் மனம் என்னவெல்லாமோ நினைக்கிறது; அவளது பெண்மையின் மனச்சாட்சி என்னென்னவோ எண்ணுகிறது! மனச்சுமை இறங்கவேண்டாமோ? 'ராயல் சாலஞ்ச்' துணை வருகிறது!—புதுமைப் பெண்ணான டாக்டர் ரேவதி, புரட்சிப் பெண்ணும் அல்லவா?'

ஓ!...ஆமாம்!

ஆகவேதான், அவளே அவளுக்கு விதியாகி, அவளே அவளுடைய விதியும் ஆகி, தன் வழியே—தன்னுடைய

தனி வழியே தனக்குச் சதமென்று உணர்ந்து, கைத்துப் பாக்கியைச் சரண் அடைகின்றாள்! எச்சில் பழமாமே? சே! என்ன உலகம் இது!... என்ன வாழ்க்கை இது? என்ன மாயச் சோதனை இது? 'வாழ்க்கையோட எல்லா நிலைகளிலேயும் நானே உசத்தியாய் நின்னு, முன் உரிமை பெற்று விளங்கவேணும் என்கிற லட்சியத்துக்காகப் போராடி, என் மானம் மரியாதையைப் பத்திரமாகவே காப்பாற்றிக்கிட அல்லும் பகலும் அரும்பாடு பட்டுக்கிட்டிருந்த எனக்குக் கடைசியிலே வெகுமதி இப்படிப்பட்ட மிருகத்தனமான கேலிப்பேச்சும் மனிதாபிமானம் இல்லாத அவமானமும் தானா?' நிதர்சனமான யதார்த்த வாழ்க்கையிலே தோற்றுப்போன அவளுக்கு—ரேவதிக்கு—டாக்டர் ரேவதிக்கு அழவும் தெரிந்தது; தெரிந்திருந்தது! —அந்த உருவம் மீண்டும் மீண்டும் நெஞ்சிலும் நினைவிலும் நிழலாடியது!...

அதோ, துப்பாக்கி தயார்!

ஒன்று...

இரண்டு...

'மூன்று' என்று அவள்—டாக்டர் ரேவதி—உச்சரிக்க ஆயத்தமாகிறாள். மங்கலத்தாலி ஊசலாடியது!

அப்போது—

கதவு தட்டப்பட்டது.

'தட்டுங்கள்; திறக்கப்படும்' என்னும்படியான வேதம் பொய்த்துவிடுமா?—பொய்த்து விடலாமா?

திறந்தாள் ரேவதி!

அங்கே—

மிஸ்டர் ஞானசீலன் அதோ, டாக்டர் ரேவதியின் 'மணமகன் தேவை' போட்டிக்கெனத் தயாராகத் தோன்றுகிறார்!

ஞானசீலன் யார், தெரியுமோ?

டாக்டர் ரேவதியின் மனக்கணக்கின் கணிப்புப் பிரகாரம் குற்றவாளியான அந்த ஞானசீலன், யாராம்?

அது 'சஸ்பென்ஸ்'!

அந்த 'சஸ்பென்ஸ்' தான் டாக்டர் ரேவதியின் கதைக்கு முன் உரையும் பின் உரையும் ஆனது; ஆகிறது!

பிரிந்தவர் கூடினால், பேசவும் வேண்டிய தில்லை யாமே?

அப்பால், ஞானசீலன் ஏன் அலறிக் கதறுகிறார்?— "என்னோட கண் திறந்தநேரம், நீ கண்ணை மூடிக் கிட்டியே, ரேவதி...!"

மூச்!...

ஞானசீலனின் ரேவதியும் ரேவதியின் ஞானசீலனும் பளிங்குத் தரையிலே ஆனந்தமாகவும் ஜோடியாகவும் பள்ளி கொண்டிருக்கிறார்கள்!—அதோ...அதோ!

தயவு செய்து அந்த அதிசயத் தம்பதியை—விசித்திர மான அந்தத் தம்பதியை யாரும் எழுப்பி விடாதீர்கள்!...

வாழ்க்கை என்பது சத்திய சோதனை!

சத்தியம் சோதிக்கும்போது—சத்தியம் சோதிக்கப் படும்போதுதான் வாழ்க்கை வாழ்க்கையாக அமையும்; அமைய முடியும்; அமையவும் வேண்டும்.

ஆம்; தமிழ்ப்படைப்பு இலக்கியத்தின் விதியும் இதுவே தான்!—விதியின் விதியும் இவ்வாறுதான் அமைந்திட வேண்டும்!

பெண் ஒரு புதிரல்லள்; அவள் ஒரு புதுமை!...

தெய்வம் ஒரு புதுமையன்று: அது ஒரு புதிர்!—மாயப் புதிர்!

குழந்தை ஒரு கனவு அல்ல; அது ஒரு வாழ்க்கை!

அன்பு ஒரு சோதனையன்று; அது ஓர் உண்மை!

சத்தியம் ஓர் ஆணையல்ல; அது ஒரு தருமம்!

இலட்சியம் ஓர் எல்லையல்ல; அது ஓர் ஆன்மா!

காதல் ஒரு விளையாட்டு இல்லை; அது ஒரு தவம்!

வாழ்வு ஒரு பிரச்னை யன்று; அது ஒரு சாதனை!...

அண்மை நாட்களில் மனமார்ந்த இலக்கிய மரபு போற்றி நான் படைத்திட்ட 'கன்னித் தொழுவம்' புதினத்தின் கதை நாயகியான பார்வதியை நான் என்றென்றுமே நன்றியறிவுடன் நினைவுகூர்வது உண்டு.

இப்போது, நான் நினைத்து மகிழவும், மகிழ்ந்து பெருமைப்படவும், பெருமைப்பட்டுப் பெருமிதம் அடையவும் டாக்டர் ரேவதி கிடைத்தாள்!

ஒரு செய்தி:

'அவள் ஒரு மோகனம்' என்ற இந் நவீனம் 'தினத்தந்தி' நாள் இதழில் அண்மையில் தொடரும் கதையாக வெளிப்படுத்தப்பட்டு அமோகமான பாராட்டுதல்களைப் பெற்றது. பேரன்புக்கும் பெருமதிப்புக்கும் உரிய அதிபர் திருமிகு செவந்தி ஆதித்தன் அவர்களுக்கும் 'ராணி' ஆசிரியர் திருமிகு அ. மா. சாமி அவர்களுக்கும் நான் நிரம்பவும் கடமைப்பட்டவன் ஆவேன்.

அண்மையில் புத்தாண்டிலே நடைபெறவிருக்கும் என்னுடைய மணிவிழாவுக்கு ஆறுதலான ஒரு முன் அடையாளமாக வெளியிடப்படும் இந்த நவீனத்தை நல்ல முறையிலே சிறப்பாக வெளியிடும் மணிவாசகர் பதிப்பகத்தின் பதிப்பாசிரியர் வெற்றிச் செல்வர் — தமிழ்ப் பேராசிரியர் ச. மெ. அவர்களைத் தலைவணங்கிக் கை வணங்குகின்றேன்.

தமிழ்ப்படைப்பு இலக்கியத் துறையிலே கடந்த சில பல ஆண்டுகளாகப் பரவி வருகின்ற நச்சு நோய்க்கு ஆளாகாமல் தப்பிப் பிழைத்து ஆரோக்கியமான எழுத்துக்களை ஆர்வத்தோடும் அக்கறையோடும் ஆரோக்கியமாகப் போற்றி வருகின்ற உண்மையான இலக்கிய ஆர்வலர்களாகிய உங்களை நான் மறப்பேனா?

வணக்கம்

சென்னை-600 045 பூவை எஸ். ஆறுமுகம்

● ● ●

# 1. மணமகன் தேவை!

தயவு செய்து யாரும் சத்தம் போடாதீர்கள்!...

உள்ளே:

டாக்டர் ரேவதி இருக்கிறார்கள்! ..

''ரேவதி நர்ஸிங் ஹோம்'' கழிந்த ஏழு ஆண்டுகளாக நித்தநித்தம் சட்டம் படித்துக் கொண்டிருக்கும் புது விதி, இது. அந்த விதியையும் மீறி—

''ஹாய் பிருந்தா! உனக்கு ஒரு நல்ல சமாசாரம் தெரியுமா? நம்ம டாக்டரம்மாவுக்கு சீக்கிரம் கல்யாணம் நடக்கப் போகுதாம்!''

''மகிழ்ச்சியான சங்கதிதான்; மாப்பிள்ளை யாராம்?''

''மாப்பிள்ளை யார்னு ரேவதி அம்மாளுக்கே இன்னம் தெரியாதாக்கும்!''

''என்ன சொல்றீங்க, மஞ்சு அக்கா?''

''மாப்பிள்ளை தேடிப் பிடிக்கத்தான் 'மணமகன் தேவை' அப்படின்னு பத்திரிகையில் விளம்பரம் கொடுத்திருக்காங்க, ரேவதி டாக்டர்!''

''அப்படியாவது அவங்க திருமணம் நடக்கட்டும். டாக்டர் ரேவதின்னா எனக்கு வெகுவாகப் பிடிக்கும். அவங்களோட மனப்போக்கு தனி; தனித்தன்மை ஆனது.

அதைப் புரிஞ்சிக்கிடாதவங்க 'டாக்டர் ரேவதி அகம்பாவம் பிடிச்சவங்க' என்று சொல்லுவாங்க. நான் அறிஞ்சவரை, ரேவதி அம்மா அன்புக்கு ரொம்ப ரொம்பக் கட்டுப்படுறவங்க; எதிலேயும் ஒரு நியாயம் வேணும்னு நினைக்கிறதும் நம்புறதும் தப்பா?'' என்று கேட்டாள், பிருந்தா. அவள் கழுத்தில் தங்கச் சங்கிலி மின்னியது.

''பெரிய இடத்து விஷயம் இதெல்லாம்; நமக்கேன் வம்பு? ஆனா, ஒரு சின்னச் சந்தேகம், பிருந்தா!''

''சந்தேகப்படுறதுதான் படுறீங்க; பெரிசாகவே சந்தேகப்படுறது தானே, மஞ்சு?''

''டாக்டரம்மாவுக்கு எப்படியும் முப்பது, முப்பத்திரண்டு வயசு இருக்காதா? இன்னமும் அவங்க ஏன் திருமணம் செய்து கொள்ளவில்லை?''

''டாக்டர் ரேவதி அம்மாவோட தனிப்பட்ட சுதந்திரமான மனப்போக்குக்கு ஈடுகொடுத்து ஒத்துப் போற மனப்பக்குவம் கொண்ட ஒரு நல்ல ஆண்பிள்ளையை இதுவரை அவங்க சந்திக்க முடியாமல் இருந்திருக்கலாம், இல்லையா அக்கா?''

''கதை அப்படியிருந்தால், நல்லதுதான் தங்கச்சி! ஆனால்...''

கூடத்தில் கூச்சல் கேட்கவே அவர்களின் பேச்சு தடைப்பட்டது.

கூப்பாடு போட்டவன், ஓர் ஆண்பிள்ளை சிங்கம்; ஓடிக் கொண்டிருக்கிற பாம்பை 'நச்'சென்று நசுக்கி விடுகிற பொல்லாத—பொல்லாத்தனமான பருவம். பின், இவன் இப்படி 'குய்யோ முறையோ' என்று கூச்சல் போடலாமா?—அவன் வயிற்றுவலி அவனை இப்படி அலற வைத்தது.

இளஞ்சிங்கத்தைத் தோளுக்குத் தோளாக துணை நிறுத்தி அணைத்தபடி, கூடத்துள் நுழைந்த பெரியவர்,

''உத்தரவின்றி உள்ளே நுழையக் கூடாது!'' என்ற விளம்பரப் பலகையைப் பார்க்காமலே, டாக்டரின் கதவைத் தள்ளினார். நோய் நொடிகூட உத்தரவில்லாமல் தானே உடலுக்குள் நுழைந்து விடுகிறதென்று நினைத்திருக்கலாம், அவர்.

அதற்குள் இளம் பூச்சிட்டு கீதா பின்புறமிருந்து விரைந்து வந்து தடுத்தாள். ''பெரியவரே, நீங்க இந்தப் போர்டைப் பாருங்க; ஐயா சின்னவரே, அந்த எச்சரிப்பை நீங்களும் வலியோட வலியாய் பார்த்துக்கங்க'' என்று உபதேசம் செய்தாள். அது கீதா உபதேசமாகவும் இருக்கலாம்!—அந்த மருத்துவப் பணிக் கன்னியின் பெயர், கீதாதானே? டாக்டரம்மா இன்னும் வரவில்லை என்பதையும் அவள் தெரிவித்தாள்.

இடம் காட்டியது, ஸ்டூல்.

இடம் கண்டது, இளவட்டம்.

சற்று நேரத்தில், காரில் இருந்து இறங்கி கம்பீரமாக நடந்து, முன் கூடத்திலே வந்து நின்றாள், லேடி டாக்டர் ரேவதி. முறி மேனிக்கு தும்பைப்பூ மூக்குத்தி எடுப்பு.

நோயாளிகள் தங்கள் தங்கள் நோய் நொடிகளை மறந்து எழுந்து நின்றார்கள்.

தளதளத்த 'ஜிஃபான்' பட்டுச் சேலையின் மார்பகப் பகுதியில் மையம் கண்டு, அனந்த சயனத்தை மேற்கொண்டிருந்த கழுத்துச் சங்கிலியின் மயில் பதக்கத்திற்கு ஆயிரமாயிரம் முத்தங்களை அலுக்காமல் சலிக்காமல் வாரி வாரி வழங்கிக் கொண்டிருந்த 'ஸ்டெத்தஸ்கோப்' நீண்ட நெடுமூச்சுத் தூள் பறக்க, ஒருமுறை முறையாக குலுங்கி அடங்கியது.

''வணக்கங்க, டாக்டரம்மா!''

''வணக்கம்...வணக்கம்!''

''குட் ஈவினிங், மேடம்!''

''எஸ்...எஸ்!''

அப்பொழுது காலை வெளியில் 'செவர்லே' ஒன்று வந்து நின்றது; சென்றது.

ரேவதி ஒரு கணம் அதிர்ந்தாள். மறுகணத்தில், அவள் சமன் நிலையை அடைந்தாள்! ''இது கண்றாவிக் கறுப்பு செவர்லேயாக்கும்!'' உள் நெஞ்சில் எதையோ நினைத்திருப்பாள்; வேறு எதுவோ முளைத்திருக்கும்!—சலனமும் சாந்தியும் நடத்திய கண்ணாமூச்சி விளையாட்டிலே, அவளது அழகான முகத்திலும், கவர்ச்சியான கன்னங்களிலும் ஈரவேர்வை கசிகிறது.

புதுக்கோட்டை ராஜவீதிகளில் நானும் அவரும் புதுமணத் தம்பதியாக புத்தம் புதிதாக ரோஸ் செவர் லேயில் ராஜ உலா வந்த அந்த நாட்களை என்னாலே எப்படி மறக்க முடியுமாம்?

ஆச்சி ஒருத்தி, ''அம்மா நான் புதுக்கோட்டைப் பக்கம்'' என்று கூறி நெருங்கினாள்.

''அப்படியா? போய் உட்காருங்க!''

நோயாளிகள் கூடம் இப்போது 'கப்சிப்'!...

வாயைப் பொத்திக் கொண்டு வயிற்றைப் பிசைந்த படி நல்ல பிள்ளையாக நின்றிருந்த இளைஞனை நெருங்கினாள், ஊடுருவிப் பார்த்தாள்; பார்வையிட்டாள். உள்ளே வருமாறு சமிக்ஞை செய்தாள். நெற்றித் திலகம் மங்களமாகப் பொலிந்தது. முகப்பருக்கள் பளிச்சிட்டன.

முதலில் ரேவதி அறைக்குள் விரைந்தாள்.

அடுத்து, ஒடிந்து விழுந்து கொண்டிருந்த இளைஞன் இளமைக் கோலம் தாங்கி உள்ளே புகுந்தான்!

அவனுக்கும் ஒரு பெயர் இருந்தது—முத்தையன்!

கதவுகள் 'படீ'ரென்று சாத்திக் கொள்கின்றனவே!...

## 2. சதுரங்கம் ஆடிய மனம்!

இதோ, இங்கேதான், அதாவது, விரிவடைந்திருந்த மருத்துவமனையின் விசாலமான இந்தப் பரிசோதனைக் கூடத்திலேதான் இப்பொழுது சற்றே ஓய்வாக அமர்ந் திருக்கிறாள், லேடி டாக்டர் ரேவதி.

இங்கே, காலம் சுவரிலும் ஓடியது; புள்ளிமான் வேகம். புள்ளிமான் ரேவதிக்குப் பரிபூரணமான — ஏக போகமான உரிமை கொண்ட சுவர் ஆயிற்றே — எல்லா வித்தைகளையும் செய்யும்! மணி: ஏழு, பத்து. கொட் டாவி வந்தது.

மத்தியானம் ஒய்வெடுத்தும்கூட, உடலின் அசதி குறையாதது, உடலியல் மேதையான அவளுக்கு அதிசய மாகத் தோன்றவில்லை. மனம் எங்கே ஒய்வெடுத்தது? என்னென்னவோ சிந்தனைகள், சித்தாந்தங்கள், சலனங்கள், சிலிர்ப்புக்கள்! அம்மாடி! வாழ்க்கைதான் வேடிக்கை என்றால், மனம் அதை விடவும் வேடிக்கை யாக இருக்கிறது!

பச்சை நரம்புகள் பாங்குடனே புடைத்துக் கிடந்த நெற்றியைத் தடவி விட்டுக் கொண்டாள்! ‘‘நான் இப்போ வெறும் ரேவதி கிடையாது! டாக்டர் ரேவதி யாக்கும்...! ஓ, மை குட்னஸ்! ரேவதி டாக்டர் என்றால், குறிப்பாக தியாகராயநகரில் ஏக கிராக்கி!

# 6

''எஸ்... நெக்ஸ்ட், ப்ளீஸ்!'' என்றாள், ஓங்கிய குரலில்; அழைப்பு மணியின் சத்தமும் இணைந்திருக்கலாம்.

''வணக்கங்க?'' என்றாள், அந்த அழகி; தன் முகவரிச் சீட்டை மேஜையில் வைத்தாள்!

''வாங்க, வாங்க; அப்படி உட்காருங்க; உடம்புக்கு என்ன?'' என்று விசாரித்தாள், டாக்டர் ரேவதி.

''மென்ஸஸ் டைம்லே, முன்னாடியும், பின்னாடியும் வயிற்று வலியினாலே நான் ரொம்பவும் கஷ்டப்பட்டுப் போறேனுங்க! எங்கள் செவர்லேட் வண்டி கொண்டாந்து விட்டுட்டுப் போகாட்டி, நான் திண்டாடியிருப்பேன்!''

''அப்படியா? கவலைப்படாதீங்க; சீக்கிரம் குணப்படுத்திடுறேன்! ஆமா, உங்கள் பேரைச் சொல்லலையே?''

''நீங்கள் கேட்கலீங்களே, டாக்டர்?''

இவள் படு டம்பக்காரியாக இருப்பாள் போலிருக்கிறது! 'செவர்லே'யை எங்கே பிடித்தாளாம்? ''அப்படியா?'' என்றாள், ரேவதி.

''என் பேர் மந்தாகினி!''

''ரொம்ப அபூர்வமாகக் காதிலே விழுகிற அழகான பேர்தான். உங்கள் கணவர்...'' என்று கேட்டவள், நோயாளிப் பெண்மணியின் கழுத்தில் கிடந்த தாலியை எடை போடுவதில் ஆர்வம் காட்டினாள்.

''என்னோட அத்தான், நான் வயிற்று வலியாலே துடிக்கிறதைக் கண்டாலே போதும்; அவரும் சின்னப் பையனாட்டம் செருமிச் செருமி அழத் தொடங்கிடுறாங்கம்மா!''

''நான் அதைப்பற்றிக் கேட்கல்லே. அவரைப் பற்றித்தான் கேட்டேன்!''

''அவர்... அவர் இப்ப தமிழிலேயும் படம் எடுத்துக் கிட்டு இருக்கார். வந்து... அவர் பேர்...''

பதட்டத்துடன் குறுக்கிட்டாள் ரேவதி. ''பேர் எனக்கு அவசியம் இல்லை; அது என் தொழிலுக்குத் தேவையும் கிடையாது. உங்கள் கணவர், உங்களோட நோய்க்கான சிகிச்சையை நான் நடத்துறதுக்கு ஆகக் கூடிய பணம் காசைச் செலவழிக்கக் கூடியவர்தானா என்கிற விவரம் தெரிஞ்சுக்கத்தான் கேட்டேன்.''

மந்தாகினி ஆச்சரியப்பட்டாள். டாக்டரம்மா எவ்வளவு விழிப்போடு, எச்சரிக்கையோடு செயல்படு கிறார்கள்!

''தினமும் துட்டு என்னைத் தேடி வருமுங்க!''

சோதனைகள் நுட்பமாக நடந்தன.

அந்தப் பெண் இடுப்புச் சேலையையும் மார்புச் சோளியையும் சீராக்கிக் கொண்டாள். மருந்துச் சீட்டை டம்பப் பையில் பத்திரமாக வைத்துக் கொண் டாள். ''என் அத்தான் வெளியூரிலேருந்து வந்த கை யோடு உங்கள்கிட்ட அழைச்சிட்டு வந்திடுவேனுங்க, டாக்டரம்மா!'' என்பதாக உறுதி சொன்னாள். தொடர்ந்து,

''பீஸ்...?'' என்று கேட்டாள்.

எதிர்முனைப் பதிலைக் கேட்டதும், வியப்புடன் இருபது ரூபாய்த் தாள் ஒன்றை நீட்டிவிட்டு, எழுந்தாள்.

''கொஞ்சம் நில்லுங்க; இந்தாங்க உங்களோட பாக்கித் துட்டு!'' என்று சொல்லி, பத்து ரூபாய்ச் சலவை நோட்டை அவளிடம் நீட்டினாள், ரேவதி.

மந்தாகினி அதை வாங்கிக் கொள்ளாமல் தயங்கி னாள். ''நீங்களே வச்சுக்கங்க!'' என்று வேண்டினாள்.

''ஊம்... பிடிங்கம்மா! நான் ஒண்ணும் பேராசைக் காரியல்ல! என்னைப் பத்தி இதுவரை வெளியிலே

விசாரிக்காட்டி, இனி விசாரிச்சுப் பாருங்க! நான் ரேவதி! கைராசியிலே ஓகோன்னு பேரெடுத்த கார்டியாலஜிஸ்டு டாக்டர் ரேவதி நான். ஊம், நீங்கள் போகலாம்!'' என்று கட்டளையிட்டாள், ரேவதி.

''நான் கொடுத்த பாக்கிப் பணத்தைக் கோட்டை விட்டுடப் போறீங்க; ஜாக்கிரதை!'' ஒய்யாரக் கொண் டைக்குச் சிவப்பு விளக்கைக் காட்டவும் தவறிவிட வில்லை, அவள்.

மந்தாகினியின் பவுடர் முகத்தில் அசடு வழிந்தது; துடைத்துக் கொண்டாள். கரிய நிறம் எட்டிப் பார்த்தது. ''செவர்லேட்டு கார் இனிமே எங்கே திரும்பப் போகுது?... கவிஞர் தெரு வரைக்கும் நடந்தே போயாகணும்; வாரேனுங்கம்மா; நீங்க பிள்ளை குட்டிங்களோடு ரொம்பவும் நலமா இருப்பீங்க!'' வக்கணையாகப் பேசி யவள், வக்கணையாக வெளியேறினாள்.

தூறல் நின்றுவிட்டது.

மந்தாகினி ரொம்பவும் சாகசக்காரியாகத்தான் இருக்கவேண்டும்; பட்டணத்துக் கைகாரியாகவும்தான் இருப்பாள் போலிருக்கிறது!

நோயாளி முத்தையன் நிம்மதிப் பெருமூச்சோடு டாக்டர் ரேவதிக்கு அன்போடு வழி விடுகிறானே?

ரேவதியின் இதயத்தில் உறுத்தல்தான் மிஞ்சியது.

மறுபடி மனம் சதுரங்கம் ஆடியது. கண்களை மூடி னாள். கூப்பிட்ட குரலுக்குப் பயந்தும் பணிந்தும் அந்த 'செவர்லே' ரோஜாப்பூ நிறத்தில் புதுக்கருக்கோடு மின்னிய வண்ணம் வண்ணப் பதுமையாக ஓடோடி வந்தது.

கண்களைத் திறந்தாள்! 'செவர்லே' எங்கே?

'ஓ... நான் இப்ப இருக்கிறது புதுக்கோட்டை இல்லைதான்... நான் இப்பொழுது டாக்டர் ரேவதி!'— அவளுக்கு இப்போது ஐந்தாவது 'டோஸ்' காப்பி வேண்டும்!

உத்தரவின்றி உள்ளே நுழைந்தவள் கீதாவாகத்தான் இருக்கமுடியும்! நிமிர்ந்தாள் ரேவதி: 'அல்சர் பேஷண்ட்' முத்தையன் காட்டுத்தனமாகக் கூச்சல் போடப் போக கீதாவை வீணாக் கோவிச்சுக்கிட்டேன். பாவம்!

ஆவி பறந்த 'நெஸ் கபே' காப்பியை ரேவதியிடம் பணிவன்புடன் நீட்டினாள், நர்சு கீதா. 'அம்மா' அக்குச் சூடுதான் பிடிக்கும்!

தம்ளரைக் கனிவுடன் வாங்கிக் கழுவி வைத்த பின், "இன்னம் ஒரே ஒரு கேஸ்தான் பாக்கி. இப்பவே அனுப்பிச்சிடட்டுமா?" என்று மெல்லக் கேட்டாள்.

"இதென்ன கேள்வி, கீதா? இப்பவே அனுப்பி வை!" ரேவதிக்கும் துல்லியமான அழகுடன் சிரிக்கத் தெரியும். ஒரு காலத்தில் அவளது இந்தச் சிரிப்புக்குத் தான் எவ்வளவு விலை மதிப்பு இருந்தது!

மருந்து அலமாரிக்கு மேலே கிடந்த அன்றைய செய்தித்தாள், கிராக்கியை இழந்து விட்ட ஆற்றாமையில் படபடத்தது.

ரேவதி கொண்டைப் பூப்பந்தைச் சரிபார்த்துக் கொண்டபின், பதக்கத்தைச் சோளிக்குள் திணித்துக் கொண்டாள். அவளையும் மீறிக் கொண்டு நெடுமூச் சொன்று திமிறியது.

நாற்பதிலும் வாலைக் குமரியாக ஒருத்தி தோன்றினாள்.

"வாங்கம்மா, வாங்க."

"நல்லா இருக்கீகளா, ஆத்தா?"

பொதுவான வரவேற்புக் கொடுத்த பாவத்துக்குப் புதிதாக விசாரணையை நடத்துகிறார்களே இந்த ஆச்சி யென்று ரேவதிக்கு உள்ளூற எரிச்சல் மூளத்தான்

செய்தது. 'வாடிக்கையாளர் பட்டியலிலே இந்த அம்மாள் இருந்தாலும் பரவாயில்லே; நறுக்குத்தறிச்ச மாதிரி ரெண்டு மூணு சொல் சொல்லி, ஆஸ்பத்திரியிலே தனிப்பட்ட உறவுக்கும் உரிமைக்கும் இடமில்லே என்கிறதைப் படிச்சுக் கொடுத்திடலாம்! ஆத்தாவாம்... ஆத்தா!'

மூக்கின் நுனிக்கு வந்துவிட்ட கோபத்திற்குச் சமாதானம் சொல்லிய பிறகு, நடுத்தர வயதில் மங்களமாக நின்ற செட்டிநாட்டைச் சார்ந்த—சேர்ந்த அந்த அம்மணியை மேலும் கீழுமாகக் கூர்மையோடு நோக்கினாள். தொடர்ந்து "என்ன உடம்புக்கு உங்களுக்கு?" என்று வலது கையால் கேட்டாள்.

நோய் சொல்லப்பட்டது.

பரிசோதனை செய்யப்பட்டது.

டாக்டர் பேனாவை எடுத்தாள்! 'இபொரல், பேரோஸெட்டின்...!' மருந்துப் பெயர்கள் அணி வகுத்தன.

இதய நோயில், மூச்சடைப்பு ரகம் மிகப் பயங்கரமானது தான்!

மருந்துச் சீட்டு கைமாறியது. 'இ. சி. ஜி.', 'எக்ஸ்-ரே' படங்களை எடுத்தாள், டாக்டர் ரேவதி; தன்னிடம் கைமாறிய ஆலோசனைக் கட்டணமான பத்து ரூபாயைப் பார்த்த கையோடு ஆச்சியையும் பார்வையிட்டாள். இந்த அம்மணிக்கு நடப்புக் கட்டண விவரம் கூடத் தெரிந்திருக்கிறதே?

ஆச்சியிடம் மருந்து மாத்திரைகளைச் சாப்பிட வேண்டிய வேளை, எண்ணிக்கை விவரங்களை விளக்கினாள் பணிப்பெண் கீதா. பத்தியம் இல்லையாம்! ஆனால், பரங்கி, பூசணி, பாகற்காய் உதவாதாம்!

கீதாவிடம் பொலிமாடு மாதிரி தலையை 'தெரிகிறது' என்கிற பாவனையில் இலாவகமாக ஆட்டிய மீனாட்சி, இப்போது ரேவதியை ஏதோ ஓர் உறவுடனும் உரிமையுடனும் நெருங்கினாள்; நெஞ்சுக் குழியில் தடவிக்

கொடுத்தாள்; அப்புறம், கண்களை மேலே உயர்த்தினாள்: ''டாக்டரம்மா! உங்கள் வீட்டுக்கார ஐயா சுகமாக இருக்காகளா? பிள்ளை குட்டிங்க எத்தனை?'' என்று இயற்கையாகச் சேர்த்திருந்த அன்போடு விசாரித்தாள், மீனாட்சி.

கேள்விகளின் அதிர்ச்சியில் இருந்து விடுதலை பெற முடியாமல், மனம் தவித்தாள், ரேவதி.

''சரி, சரி; நீங்க போங்க; அம்மா வீட்டுக்குப் புறப்பட வேணும்; இன்னும் பத்து நாளைக்கு டாக்டரம்மாவுக்குப் பங்களாவிலேயும் கடுமையான வேலைங்க இருக்கு!'' என்று மெல்ல மெல்லக் கூறினாள், கீதா.

ஆனால், எதுவுமே அம்மணிக்கு உறைத்தால்தானே? ''ஆத்தா, என்னை ஏழே ஏழு வருசத்துக்குள்ளவே மறந்து போயிட்டீங்களே? நீங்கள் புதுக்கோட்டையிலே ராணி ஆசுபத்திரிக்கு எதிர்த்தாப்பிலே சின்னமாக ஒரு கிளினிக்கையும் நடத்திக்கிணு இருக்கையிலே, நான் புதனுக்குப் புதன் அரிமளத்திலேருந்து வந்து உங்கள்கிட்டே சோதனை பண்ணிக்கிணு போவேனுங்களே? அந்த மீனாச்சி நானே தாங்கம்மா!'' என்று விவரத்தை வேக வைத்து இறக்கின பிட்டு மாதிரியாகப் பிட்டு வைத்துவிட்டு, ஓசைப்படாமல் அவ்விடத்தை விட்டு நகர்ந்தாள்.

உள் மனத்தின் அடிவாரத்தில் ஏற்பட்ட பயம் செறிந்த சலனம் அப்போது ரேவதியை என்னவெல்லாமோ பண்ணியது. ''உங்கள் வீட்டுக்கார ஐயா சுகமாக இருக்காகளா?'' ஆச்சி விதியாகவோ, அல்லது வினையாகவோ விசாரித்த அந்த க்ஷேமலாப விசாரிப்பின் எதிரொலி அவளது உடல் முழுவதுமே எதிரொலித்தது. கண்களை மூடிக்கொண்டே இதயத்தை அழுத்தமாகப் பற்றிக் கொண்டாள்; வேர்வை வழிந்து கொண்டே இருந்தது.

கண்களைத் திறந்தாள்.

அறையில் சூனியம் கை கொட்டிச் சிரிக்கவே, அவள் வெண்ணிற மேலங்கி உடுப்பை மட்டிலும் கழற்றிக் கொக்கியில் பொருத்தியவளாக, வீட்டுக்கு, ஊகூம், பங்களாவுக்குப் புறப்பட்டாள்!

கழுத்தில் இதமாகவும் இங்கிதமாகவும் 'கம்' மென்று கிடந்த தங்கச் சங்கிலியை ஒட்டி உரசியபடி ஊசலாடிக் கொண்டிருந்தது, நாடிக் குழல். குழலை நெருடிய வண்ணம் நடந்தாள்; அங்கங்கே பூட்ட வேண்டியவற்றை யெல்லாம் அவள் கைப்படவே பூட்டினாள். உடைமை களை முறையோடும் முறையாகவும் பேணிக் காப்பதில் அவள் அந்நாளிலிருந்தே ஜாக்கிரதையாகவும் எச்சரிக்கை யாகவும் இருந்து வருகிறாள்.

வெளியே வெளிச்சம் கண் சிமிட்டியது.

வாசல் வெளிக்கு வந்தாள், ரேவதி! 'பிப்ரவரி நாலில் என் பிரச்சினையெல்லாம் தீர்ந்திடும்!' பரீட்சை நாள் நெருங்குகிறதே?

மீனாட்சிக் குங்குமத்தின் லெட்சுமிமயமான ரத்தச் சிவப்போடு புத்தெழில் துள்ளத் தயாராகக் காத்திருந்தது, 'மாருதி'.

''கீதா, நான் புறப்படட்டுமா?... மாதவியும் கண்ணகியும் எட்டுமணி ஷிப்டுக்கு வந்ததும், அவங்க ரெண்டு பேரும் நோயாளிங்களைக் கவனிச்சுப்பாங்க. அதுக்குள்ளே, நீ அந்த டெலிவரி கேஸை உஷாராப் பார்த்துக்கணுமாக்கும்! அவங்க வந்தானதும் நேரத் தோட நீ வீட்டுக்குப் போயிடம்மா!''

''குட்நைட், டாக்டர்!''

''குட்நைட்!''

ரேவதியின் விழிகள் உயர்கின்றன.

பெயர்ப் பலகையில், 'டாக்டர் ரேவதி எம். எஸ்., எம். பி. பி. எஸ்., டி. ஜி. ஓ., எப். ஆர். ஸி. எஸ்., எப். ஐ. ஸி எஸ்., எப். ஏ. ஸி. எஸ்.' ஆகிய எழுத்துக்கள் விதியின் எழுத்துக்களைப் போலே சிரிக்கின்றன!

'மாருதி' புறப்பட்டது.

# 3. நெஞ்சில் குத்திய முள்!

ரேவதியைப் பொறுத்தமட்டில், அவளுக்கு அவள் பெயர்தான் உயர்வு; அந்த உயர்வு மனப்பான்மைதான் அவளுக்கு உயிராகவும் உலகமாகவும், வாழ்வாகவும் இருந்து வந்தது; இருந்து வருகிறது. ஆகவேதான், அவள் ஒரு தனிப்பிறவியாக மதிக்கப்பட்டும், விமர்சிக்கப்பட்டும் வருகிறாள்.

'ரேவதி இல்லம்' தளதளத்தது.

காலம் ஒரு புள்ளிமான் என்பது சரிதான்.

மணி எட்டு அடித்தது.

மணியோசை அடங்குவதற்குள், அவள் மாடியில் தனது அந்தரங்க அறையில் 'டாண்' என்று வந்து நின்றாள்.

ஒளி விளையாடுகிறது.

காற்று விளையாட்டுக் காட்டுகிறது.

'ஸ்டெதஸ்கோப்' இராப்பொழுதிலும் ஓய்வு காணத்தான் வேண்டும்.

ரேவதி புன்னகை செய்கிறாள். அவளது புன்னகையில் அவளே மயங்குகிறாள். கிறங்கவும் செய்கிறாள். இந்தப் புன்னகை சாமானியப்பட்டதா, என்ன?

நிலைக்கண்ணாடி நகர்கிறது.

அவளும நகர்கிறாள்.

திறந்தவெளியில் சற்றே நடந்து, கீழ்ப்பக்கத்து சுவரில் சாய்ந்தபடி, சிந்தனை தடுமாற்றத்தை சமாளிக்க முயல் கிறாள். நெஞ்சின் அலைகளுக்கு ஓய்வு தேவை. ஒரு மாறுதலை வேண்டி, தனக்கு வெளியே தெரிந்த உலகத்தை சந்திக்க முனைந்தாள்.

மேற்குத் தாம்பரத்தின் பிலிப்ஸ் மருத்துவமனை, வித்யா தியேட்டர் பகுதிகளில் நெளிந்த அமைதியான இயற்கையின் அழகை நிதானமாக அனுபவிக்க அப்போதும் அவள் தவறிவிடவில்லை.

ஆயா அங்கம்மா நின்றாள். அவள் கைகளில், உறைக்கடிதம் ஒன்று 'தனிப் பார்வைக்கு' என்ற எச்சரிக்கையோடு காணப்பட்டது.

இப்போது—

அந்த அந்தரங்கக் கடிதம், ரேவதியின் பரிபூரண அந்த் ரங்கத்துக்குப் பாத்திரமான 'டூரோஃப்ளக்ஸ்' மெத்தை யில் சல்லாபமாகவோ சரசமாகவோ கிடக்கிறது!

டாக்டர் ரேவதிக்கு மட்டும்தான் இரவு-பகல் என்கிற வித்தியாசம் இல்லாமல் வாழ்க்கையின் பொறுப்புகளும், தொழிலின் கடமைகளும் காத்துத் தவம் கிடக்கும் என்பதில்லை.

குமாரி ரேவதிக்கும் அப்படித்தான்!

அப்படியென்றால்...

டாக்டர் ரேவதிக்கும் குமாரி ரேவதிக்கும் வித்தி யாசம் ஏதும் கிடையாதென்று பொருளா?

'ஊகூம்... நான் வேற; டாக்டர் ரேவதி வேறதான்! இப்படிப்பட்ட வித்தியாசத்திலே தான், எங்கள் இரண்டு பேரோட உயர்வும் ஒன்றுக்கொன்று போட்டி போட்டுக் கொண்டு மின்ன முடியுது. ஆனாலும், இந்த உயர்வுப் போட்டியிலே வெற்றி யாருக்கு தோல்வி யாருக்கு என்கிற சிக்கலே எங்கள் இரண்டு பேருக்கும் ஊடால நாளது

வரையிலும் ஏற்படாதது அதிசயம்தான்! அதிசயம் என்ன அதிசயம்?... மனத்துக்கு மனம்தான் சாட்சியாகும்! எங்களோட கதையும் அப்படித்தான்!' — எதிர்ப்புறத்துச் சுவரில் அழகு கொட்டிக்கொண்டிருந்த நாடிக் குழலைப் பெருமையோடு பார்த்துப் பெருமையோடு சிரித்தவளாக நடை தொடர்ந்தாள் ரேவதி. வெள்ளைக்கல் மூக்குத்தி பளீர் என்றது.

தொலைக்காட்சிப் பெட்டி அன்புடன் அழைக்கிறது.

''நேரமில்லை.''

'வீடியோ' ஆர்வத்தோடு கூப்பிட்டது.

அமர்த்தலாக, ''இப்போ என்னால் வரமுடியாது!'' என்கிற பாவனையில் தலையைக் கிழக்கு மேற்காக அசைத்து விட்டு நடையைத் தொடர்ந்தாள், ரேவதி.

அந்தி நேரத்துச் செய்திகளில் சூடு இன்னமும் ஆறாமல் இருக்கலாம்.

''சமதர்ம சமுதாயம் உருவாக, பாரதத் தாயின் மக்கள் அனைவரும் ஒன்றுபட்டு உன்னத இந்தியாவை உருவாக்குவோம்!''

குடியரசுத் தலைவரின் 38-வது குடியரசு விழாச் செய்தி விரிந்தது.

விரிந்த மனத்தோடும் திறந்த மனத்தோடும் செய்தியில் ஒன்றினாள், ரேவதி. ஓர் அரைக்கணம் கண்களை மூடினாள்; மூடிக்கொண்டாள்! புதிய பாரதத்தில், புதிதான பாரத சமுதாயம் அழகாகவே தரிசனம் தந்தது. க்ண்கள் மெல்ல மெல்ல திறக்கின்றன.

அங்கே ஊதுவத்தியிலே தாழம்பூவின் அழகான மணம் ஆனந்தமாக எரிந்தது.

மெய் மறக்கிறாள் ரேவதி.

''குட் ஈவினிங், மேடம்!''

அந்தரங்கச் செயலர் ராவ் கைகளில் கொத்துக் கடிதங்களுடன் முத்துநகை தெளித்து நின்றார்!

இடது கை விரல்களை மயில் மாதிரி ஒயிலாக அசைத்து, உதவியாளரின் இரவு வணக்கத்தை ஆமோதித்து ஏற்றுக்கொண்டவளாக, ''89 பிப்ரவரி நாலில் நான் நடத்தப்போற காதல் சுயம்வரத்துக்கு இன்றைக்கு எத்தனை ஆண் சிங்கங்கள் மனு பண்ணியிருக்காங்க?'' என்று விசாரணை செய்தாள், அவள்.

கேள்வியில் அலட்சியமானதொரு விசித்திரப் போக்கு குரல் கொடுக்காமல் இல்லை. ஆனாலும், கவர்ச்சியான அவளது கண்களில் மட்டும் ஒரு சித்திரமான கற்பனை ஆசையுடனும் ஆதங்கத்துடனும் வலை பின்னிக் கிடக்கிறதே!

''இன்று பத்தோடு நின்னு போச்சுங்க, மேடம்'' என்னும் விடையையும் அவள் கணப்பொழுதில் சீரணித்துக் கொள்ளவும் செய்தாள். ''மிஸ்டர் ராவ், உங்கள் மனைவி உங்களுக்காகக் காத்திருப்பார்! நீங்கள் போகலாம்'' என்று விடை கொடுத்தாள்.

ரேவதி நெற்றியைத் தடவிக் கொண்டாள். நெற்றிக் கண்ணைத் தேடியிருப்பாளோ! 'தனிப் பார்வைக்கு' என்பதாக ஒரு கடிதம் வந்திருந்ததே! நடந்தாள்; பதட்டமும் கூடவே நடந்திருக்க வேண்டும்.

உறை தாறுமாறாகக் கிழிகிறது.

தியாகராயநகர்,
25—1—1988

''அம்மா ரேவதி அவர்களே! உங்கள் க்ஷேமலாபம் எப்படி?

நீங்கள் நலம்தானே!

உங்கள் மனமும் நலமாய் இருக்கிறதுதானே?

இப்படிக்கு,
உங்கள் மனசாட்சி''

ரேவதியின் ஊதாச் சோளி நனைந்து, ஈரம் ஆயிற்று; பற்களை 'நறநற'வென்று கடித்துக்கொண்டாள். ''மிஸ்டர்! கேலி பண்றீங்களா?... உங்களுக்கு இத்தனை நெஞ்சுத் துணிச்சலும் நெஞ்சழுத்தமும் வந்திடுச்சா? மறுபடியும் நான் ஞாபகப்படுத்துகிறேன். நான் ரேவதி... மிஸ் ரேவதியாக்கும்!'' விழிகளில் ரத்தம் சூடேற்றியது; ஆத்திரத்திலும் கூட, முகப்பருக்கள் கவர்ச்சியை சிந்த மறக்கவில்லை!

அந்தரங்கக் கடிதமும் சுக்கல் நூறாகக் கிழிந்தது.

விதியின் எழுத்துக்கள் காற்றில் பறந்தன!

ரேவதி சிரித்தாள்.

சிரித்தது ரேவதிதானா? ரேவதியேதானா!...

எழுந்தாள்.

நடந்தாள்.

பீரோவின் இரகசியமான டிராயரை இழுத்தாள்.

அந்தத் திருமணப் படத்தை திரும்பவும் எடுத்து திரும்பவும் பார்த்தாள். ஆத்திரமும் சோகமும் முட்டி மோத, நெடுமூச்சு நீளமாக வெளியேறியது.

அந்தக் கடிதத் துண்டுகள் காற்றில் தத்தளித்தன.

''மனசாட்சியாம்... மனசாட்சி! இந்த மனுஷன் குழிப்பிணத்தைத் தோண்டியெடுத்து ஒப்பாரி வைக்கிற தாட்டம், தான் அடைஞ்சிட்ட தோல்வியோட ஆத்திரத்திலே என்னமோ கிறுக்கியிருக்கார்! இந்த ஏழு வருஷத்திலே இது எட்டாவது கடிதம்.'' நடந்தாள் ரேவதி.

கணங்கள் பூ நாகங்களாக நெளிந்தன.

அவளுக்கு இப்போது தேவை : வடிகால்.

'ராயல் டெப்ளமட்' தேடி வந்தது.

ராஜதந்திரமா தேடல்தான்!

இரண்டுக்கு மூன்று வாயாக சுவைத்துச் சுவைத்துப் பருகினாள்.

அமெரிக்காவில் இருந்து சென்னை திரும்பியிருந்த டாக்டர் சத்தியன் டாக்டர் ரேவதிக்கு அளித்த பரிசு அது. சத்தியன் தங்கமானவர்; இருதய நோய் அறுவைச் சிகிச்சை நிபுணரும்கூட. இதயம் உள்ள 'ஸ்பெஷலிஸ்டு' மனிதர். காலையிலேயே காந்தி நகரிலிருந்து தொலைபேசியில் தொடர்பு கொள்வதாகச் சொல்லியிருந்தார்; வாக்குத் தவற மாட்டார்!

செக்கச் சிவந்த உதடுகள் மறுபடி ஈரம் ஆயின.

விழிகள் மேலும் சொக்கின.

மேனி சிலிர்த்திட மெய்மறந்தாள் ரேவதி. அவள் சுதந்திரம் அப்படித்தான்!

'பிப்ரவரி நாலு'. அவள் மனச்சாட்சி தேதியை சுட்டிக் காண்பித்தது. மூடித் திறந்த கண்களில் காதல் சுயம்வரம் நடந்து காட்டியது; நடித்துக் காட்டியது.

பத்திரிகையில் 'மணமகன் தேவை' விளம்பரத்தை கொடுத்தாலும் கொடுத்தாள். இறுதித் தேதி முடிவதற்குள் ஏகப்பட்ட விண்ணப்பங்கள்; கோப்புக் கொள்ளாமல் நிரம்பி வழிந்துவிட்டன! சோதனைதான்! அவள் சோதிக்காத சோதனைகளா?... சோதனை இப்போது யாருக்காம்? அவளுக்கா? அவள் மனத்திற்கா? அல்லது, அவள் மனச்சாட்சிக்கா?

''பிப்ரவரி நாலில் வெறும் ரேவதியான நான் திருமதி ரேவதி ஆகிவிடுவேன்!... ஆ... அம்மா...''

துடித்தாள் ரேவதி. நெ(ரு)ஞ்சி முள் குத்தியிருக்குமோ?!

# 4. யார் அந்த ஆள்?

கருமை நிறக் கண்ணனாக வடிவம் அமைத்துக் கொண்டிருந்த கங்குலின் கருக்கல் பொழுது கழிய, விடியல் வேளை கண் சிமிட்டுகிறது.

முழுமையான இரவிலே, கடுகத்தனை நேரம்கூட, ரேவதி கண் அயரவில்லை. பட்டுத் தலையணையை தலைமாட்டிலும் இரப்பர் பஞ்சுத் துண்டுகளை கால்மாட்டிலும் பக்கவாட்டிலுமாகப் பரப்பிப் போட்டவண்ணம், வண்ணக்கலாப மயிலென மல்லார்ந்து படுத்திருந்தவளுக்கு உடல் மாத்திரமல்ல, உள்ளமும் பரபரப்புக் கொள்ளவே, மாடிக் கூடத்தின் தாழ்களை விலக்கி, வெளியே வந்தாள்.

இயற்கையான காற்றில் அவளது பெண்மை இதமாகவும் ஆறுதல் அடைந்தது. திறந்த வெளியிலே, திறந்த மனத்தோடும் திறக்காத மேனியோடும் அங்கும் இங்கும் நடைபழகினாள். என்னவெல்லாமோ ஞாபகங்கள் காலத்தையும் தூரத்தையும் பொய்க் கணக்காக ஆக்கி சிலிர்த்து வெடித்தன.

கீழ்த் தளத்தில் பூங்குயில் ஐந்து முறை, லயம் தவறாமல் 'குக்கூ' வென்று கூவியது.

ரேவதி நின்றாள்.

அரசினர் பொது மருத்துவமனையிலே அவள் ஆறு மணி பணிக்குப் போனால் போதும்! இன்றைக்குச் சற்று முன்னதாகவே கிளம்பினால்கூடத் தேவலாம். மனம்

இருப்புக் கொள்ளாமல் தவித்தது. நெற்றியில் வம்பு பண்ணிக்கொண்டிருந்த சுருள் அலை பாய்ந்த முடிகளை அடக்கி ஒதுக்கிக் கோதிவிட்டாள். வெள்ளையாக என்னவோ தெரிந்தது! — நல்லவேளை, நரை இல்லை! மூக்குத்தியை திருகினாள். மார்பகத்தில் உறுத்திக் கொண்டிருந்த கழுத்துச் சங்கிலியைச் சற்றே தளர்த்தி விடலானாள். சங்கிலியில் தாலியா நிழலாடுகிறது! ஊஹூம்; பதக்கமேதான்!

காலம் கரைவதாலேதான், காக்கையும் கரைகிறது போலும்!

பால்காரர் வந்துவிட்டார் போலிருக்கிறது.

காப்பி ஞாபகம் வந்ததுதான் தாமதம்; ரேவதிக்கு உற்சாகமும் வந்துவிட்டது. துண்டும் கையுமாகக் குளியலுக்குத் தயாரானாள்.

வழியிலே, நந்தியாக நின்ற பீரோவுக்குக் கீழே கால்களில் என்னவோ இடறவே, குனிந்தாள். கையில் தட்டுப் பட்ட பொருளைக் கையில் எடுத்தாள்; பார்த்தாள். பார்த்தவள், அதிர்ந்தாள்.

அதிர்ந்தவளுக்கு நெஞ்சத்திலே சுருக்கென்றது. மீண்டும் நெஞ்சில் முள் தைத்துவிட்டதோ? நெஞ்சைத் தடவிக்கொண்டே சடுதியில், மீண்டும் பார்த்தபோது, அவளைப் பார்க்கவிடாமல் தடுத்தது சுடுநீர்க் கண்ணீர்! ''இந்தத் திருமணப் படம் பீரோவிலிருந்து வெளியிலே எப்படி வந்திச்சாம்? ஏன் வந்திச்சாம்? ராத்திரி போதை மயக்கத்திலே, போதம் தவறி, என்னவோ தவறு நடந்து விட்டிருக்கலாம்! சரி...சரி... நான் புதிய ரேவதியாக ஆகித்தான் ஏழு ஆண்டு கனவு மாதிரி ஓடிப்போய் விட்டதே! இனிமேல் என்னவாம்?... பணிக்கடன்களை நிறைவேற்ற நாழிகை ஆகிவிடவில்லையா?''

பூவின் மணமும் காபியின் மணமும் ஒன்றில் ஒன்றாக கூடிக் குலவிய நேரம்.

செக்கச்சிவந்த பிறை நெஞ்சில் குங்குமம் பளிச்சென்று சிரித்தது; மேல் மருவத்தூரில் அன்னை ஆதிபராசக்தியை தரிசித்தபோது கிடைத்த அருள் பிரசாதம்.

இளமை மதர்ப்பு மாறாத எழிலார்ந்த மார்பகத்தில் பச்சை மண்ணாகக் கள்ளங்கவடு இல்லாமல் தவழ்ந்து கிடந்த நாடிக்குழல் அந்த நேரத்திலே அவளது மனத்தின் நாடியைப் பரிசோதித்திருக்கலாமோ? இல்லை, அவளது மனச்சாட்சியை நாடி பிடித்து சோதித்துப் பார்த்திருக்குமோ, என்னவோ? காபியைப் பருகி முடித்ததும் கூட, இன்னமும் அவள் 'சப்புக்' கொட்டினாள்.

மறக்கத் தெரிந்த உள்ளத்திற்கு நினைக்கவும் ஏன் தான் தெரிகிறதோ?

பறந்து போய் புதுக்கோட்டையில் நின்ற ரேவதி, பறந்து வந்து மேற்கு தாம்பரத்தில் நின்றாள். சிலிர்ப்பு அடங்கவில்லை. மார்பகம் எம்பி எம்பித் தணிய, தன் நினைவு கொண்டாள். அவள் கண்கள் திறந்தன; திறந்த கண்களில் கொட்டு முழக்கில் மணப்பந்தல் நின்றது; நடந்து முடிந்த மணவினைக்குச் சாட்சி சொன்ன நெருப்பும் நின்றது. "மிஸ்டர்... மிஸ்டர்!" பெயரைச் சொல்லி அழைக்க இயலாத தயக்கத்தோடும் தவிப்போடும் வலதுபக்கத் தலையை திசை திருப்பினாள். சூடு பொறுக்காமல் சூன்யத்தில் தவித்தாள். கண்களை கசக்கிக் கொண்டாள். ஊகூம்; அவள் அழவில்லை!—அவள் ஏன் அழப்போகிறாள்? ரேவதியா, கொக்கா?—சிரித்தாள்!...

கூர்க்கா 'சல்யூட்' அடித்தான்.

புதிதாக மலர்ந்த ரோஜாப்பூவாக, ரேவதி டாக்டர் தலைவாசலில் நின்றாள்.

சரேலென்று பாய்ந்து பறந்துகொண்டிருக்கிறது, மாருதி'!

சோளிக்கு இணை சேர்த்துக் கிளிப் பச்சையில் பிணை நின்ற 'ஆர்கண்டி வாயல்' சேலை நெகிழாமல், கால் மேல் கால் போட்டுக்கொண்டு, தனக்கே உரித்தான கருவத்துடனும் களிப்புடனும் துடுக்காகவும் மிடுக்காகவும் சாய்ந்திருந்தாள், டாக்டர் ரேவதி. மகப்பேறு நிபுணராகப் பொதுமக்கள் மத்தியில் பேர் பெற்றிருந்த பெருமையின் பெருமிதம், அவளது தோற்றப் பொலிவில் பளிச்சிட்டது.

கனவுகளுக்கும் காட்சிகளுக்கும் அப்பாற்பட்டவளாக, மனத்தை சமன் செய்து கொண்டு, கையில் பிரித்து விரித்திருந்த பேறுகாலப் பிரச்சினை தொடர்பான புதிய ஆங்கில மருத்துவ ஆராய்ச்சி நூலை ஆர்வத்தோடும் அக்கறையோடும் வாசித்துக் கொண்டிருந்தாள். சங்கிலியின் பதக்கத்தோடு விளையாடிய விரல்களை திடுதிப்பென்று உதறி, 'பலே' என்றாள். குரலில் உடன்பாடு தழுவிய ஓர் ஆமோதிப்பு இருந்தது. லண்டன் பேராசிரியர் டாக்டர் கிளேயர்ரெய்னர் தெரியப்படுத்திய ஆய்வுக் கருத்தின் வரிகளில் மறுபடி தமிழ் மனத்தைச் செலுத்தினாள். ''நாடுகளிடையே நடந்த பெரும்பாலான மருத்துவக் கருத்தரங்குகளிலே பெரும்பான்மை பலம் பெற்ற கருத்து இது. அதாவது—கருவுற்ற மனைவி பேறுகாலத்தை எட்டிக்கொண்டிருக்கிற கடைசி ஏழெட்டு வாரங்களிலேயே அவளது விருப்பத்துக்கு விரோதமாக கணவன் அவளை உடலுறவுக்குக் கட்டாயப்படுத்துவதோ, துன்புறுத்துவதோ தீவினையாக முடியக்கூடும்; இத்தகைய அசம்பாவிதம் காரணமாக, கருச்சிதைவு ஏற்படவும், அதன் தீய விளைவாக, மனைவியின் உயிருக்கே ஆபத்து ஏற்படவும் ஏதுவாகலாம்!

'டக்' என்று மூடினாள், நூலை. இதயத்தை என்னவோ செய்வது போன்ற உணர்வு ஏற்பட்டது; மார்பின் இடதுபுறத்தில் இடக்கை விரல்களால் தடவிப் பார்த்தாள்; மறு நொடியில் சலனம் கண்டிருந்த அவளது

முகத்தில் ஓர் அலட்சியம் படர்ந்தது. முகக்குறிப்பில், எதையும் தாங்கும் மனப்பக்குவம் அவள் சார்பில் குறி சொல்லியிருக்க வேண்டும்!

விரல்களிலே திடீரென்று ஈரம் பரவ, நிமிர்ந்து அமரலானாள். இமை விளிம்புகளை தொட்டுப் பார்த்தவள், திடுக்கிட்டாள். ''நான் அழுதேனா?''—ஈரம் உலர அரைவினாடி போதும்!

'மாருதி' அதற்குள் சைதாப்பேட்டையைத் தாண்டி விட்டது.

உள்ளத்தை ஒருநிலைப்படுத்தியபடி கைப்பெட்டியில் ஒரு கையைச் சாய்த்துக்கொண்டு, கால்களைச் சரளமாக நீட்டி ஆசுவாசப்படுத்திக் கொண்டாள், அவள்.

என்ன இரைச்சல்?

குழந்தை வீறிட்டு அழுகிறதே!

பதைப்புடன் சுற்றி நோக்கினாள், ரேவதி.

கண்ணாடிச் சிறையில் சூனியம்தான் கைகொட்டிச் சிரித்தது.

உந்திக் கமலத்தில் விம்மல் வெடித்தது.

அவள்—ரேவதி—செல்வி ரேவதி தனது வயிற்றை அடி வயிற்றைத் தன்னை மறந்த நிலையில், தன்னை மீறிய நிலையில் தடவிக் கொண்டாள்.

''உங்கள்கிட்ட எத்தனை முறை கெஞ்சிக் கூத்தாடினேன்? நீங்கள் கேட்கல்லே. மோக வெறி கொண்டு, வாயும் வயிறுமாக இருந்த என்னைப் பட்டப் பகலில் கட்டாயப்படுத்த, வைத்தியம் படித்ததாலே நானும் வலுக்கட்டாயமாக உங்கள் கிட்டேயிருந்து தப்பிச்சேன். அதுக்காக என்னை— ''தேவதை'', ''தேவதை''ன்னு வாயாரப் புகழ்ந்த என்னை—எப்படி உதைச்சுத் தள்ளி விட்டு ஓடிட்டீங்க? கடைசியிலே என்ன நடந்தது? ஆமா...,

ஆமாங்க... ஞானசீலன்!...'' வாய்விட்டுச் செருமினாள், டாக்டர் ரேவதி.

சொகுசான கார், சொகுசை விட்டு கிறீச்சிட்டு நின்றது.

''அம்மா உங்கள் உடம்புக்கு ஒண்ணும் இல்லீங்களே?''

ஏறிட்டு விழித்தாள்; பதற்றம்; சோகப் பெருமூச்சு. கண்கள் தளும்பின. சமாளித்துக் கொண்டு ''எனக்கு எதுவும் ஆகிடல்லே; ஆகவும் விடமாட்டேன். வண்டியை வேகப் படுத்துங்க, பெரியவரே!'' என்று ஆணையிட்டாள் ரேவதி.

அவளுக்கு இப்போது சுதந்திரமான வெளிக்காற்று தேவைப்பட்டது.

கண்ணாடிகளை இறக்கினாள்.

மனித மந்தை கிளை பரப்பி முட்டி மோதிக் கொண்டும், முட்டாமல் விலகிக்கொண்டும் தன்னை போர்வைக்குள் முடங்கியபடி நகர்ந்தது; விரைந்தது; ஓடியது.

அதோ, ரேவதி மருத்துவ மனை.

வாசலில் என்ன கூட்டம்?

பொது நல மருத்துவப்பணியின் உயிர்ப் பண்பான மனிதாபிமான உணர்வுகள் இப்போதும் டாக்டர் ரேவதியிடம் மேலோங்கி நிற்கவே, வெகு பதட்டத்தோடும் மிகப் பரபரப்போடும் இறங்கினாள்.

'யாருக்கோ, என்னவோ விபத்து ஏற்பட்டிருக்க வேணும்! தெய்வமே அவரோட உயிருக்கு எந்தவிதமான ஆபத்தும் இல்லாமல் நல்லபடியாக காப்பாத்திக் கொடுத்திடு!'—ஜபமாலைக்குப் பதிலாகத்தான் அவள் அப்போது தனது கழுத்துச் சங்கிலியை உருட்டியவளாகப் பிரார்த்தித்துக் கொண்டாளோ?

கண்கள் கலங்க, கூட்டத்தைத் துழாவினாள்.

கூட்டத்தில் நின்றவர்களிலே யாருக்கும் எந்த அடியும் பட்டதாகத் தெரியவில்லை! அப்படியென்றால், ஏன் இந்தக் கூட்டம்?

பார்வையைத் திருப்பினாள். பகீரென்றது. அந்தக் கறுப்பு நிற வாடகைக் கார் வெறுமையாகக் காட்சி தரவே, அவளது இதயத் துடிப்பு அதிகரித்தது.

"யாரோ ஒருவர் என் வண்டியிலே சவாரி வந்தாருங்க; மனிதர் பின் கதவை சரியாகச் சாத்திக்கிடல்லே போலிருக்கு. போதும் போதாததுக்குப் போதையில வேற இருந்திருக்காரு. பனகல் பூங்கா முக்கத்திலே வண்டி வேகமாய்த் திரும்பறப்ப, கதவு படார்னு தன்னாலே திறந்துக்கிடுச்சி. அவர் உருண்டு கீழே விழுந்திட்டார். பாவம், அடிபட்ட ஆளை இப்பத்தான் உள்ளாற கைத்தாங்கலாய் அழைச்சிக்கினு போயிருக்காங்க, அம்மா!"

வண்டி ஓட்டுனர் இரக்கத்தின் விலங்கு பூட்டியிருந்த கைகளைப் பிசைந்து கொண்டு கலவரத்தோடு நின்றார்.

நெருப்பில் இடறி விழுந்து விட்டவளைப் போன்று பதை பதைத்த வண்ணம் உள்ளே விரைந்தாள் டாக்டர் ரேவதி.

# 5. அன்று நடந்தது!

இதயம் ஏன் இப்படி படுவேகமாகத் துடிதுடிக்கிறது?

சொல்லி வைத்த மாதிரி கனகச்சிதமாக அந்தப் படுக்கை அருகில் வந்து நிற்கிறாள், டாக்டர் ரேவதி.

மருந்து நெடி.

கொத்துக் கொத்தாக மலர்ந்திட்ட மல்லிகைப் பூவாய்த் தோன்றினாள், நர்சு தமிழரசி.

''தலையின் முன் பகுதியிலே பலமாய் அடி. கட்டுப் போட்டு, மாத்திரை கொடுத்து, ஊசியும் போட்டுட்டேன்.''

ஞானசீலனுக்கு இன்னமும் நினைவு திரும்பவில்லை.

நெஞ்சை அடைத்தது; ஒரு வாய் தண்ணீர் குடித்தாள்.

முந்தானை காற்றிலே பறந்தது. பறந்தால் பறக்கட்டும்!

'ராயல் சாலஞ்ச்' கண்ணடித்தது.

சே...!

ரேவதி கண்களை மூடிக்கொண்டாள்.

மனத்தின் மனம் புதுக்கோட்டைக்கும் சென்னைக்குமாக அலைந்து திரும்பியது, மீண்டும். ஆற்றாமை மேலிட்டது. நெடுமூச்சு வெளிப்பட்டது.

ரேவதி நெஞ்சைத் தொட்டுப் பார்த்துக் கொண்டாள். இப்போது இதயத்துடிப்பு நிதானமாகத் தான் இயங்கிக் கொண்டிருக்கிறது! — "நான் அவமானப் படுத்தப்பட்டு விட்டேனா?... ஏமாற்றப்பட்டு விட்டேனா நான்?" — தனக்குத்தானே கேட்டுக் கொண்டாள்.

"மிஸ்டர்...மிஸ்டர் ஞானசீலன்! ஏன் இப்படிப் பண்ணிட்டீங்க...? என்னை ஏமாற்றவா, அவமானப் படுத்தவா...? சொல்லுங்க; சொல்லுங்களேன், ஞானசீலன்!"

பதில் சொல்ல ஞானசீலன் எங்கே இருக்கிறார்? அவர் தான் நினைவு வந்தவுடன் நோய்ப் படுக்கையை மறந்தும் துறந்தும், சொல்லாமல் கொள்ளாமல் ஓடிவிட்டாரே!

தொட்டதற்கெல்லாம் காரணகாரியம் இல்லாமல் உணர்ச்சி வசப்பட்டுப் பேயாக ஆட்டம் போட்டுத் தீர்க்கற பழைய புத்தி இன்னுமா மாறித் தொலைக்கவில்லை? —சே...! என்ன மனிதரோ!

அழகின் சிரிப்பு, கொச்சைப்படுத்தப் படாமலும் கொச்சைப் படுத்தப்பட்டாலும் தார்மிக நெறிமுறை யோடு விளையாடிக் கொண்டிருந்த இயற்கையின் இத மான பின்னணியில் அமைதி காத்துக் கிடந்தது, ரேவதி இல்லம்.

செங்கதிர்கள் அள்ளி அணைத்து வழங்கிய முத்தங் களின் சூட்டைத் தாங்கமாட்டாமல், காற்று சீறிக் கொண்டிருக்கிறது, இன்னமும்.

சிறை வைத்திருந்த அதிர்ச்சியிலிருந்து இப்போது சிறுகச் சிறுக விடுதலை அடைந்து கொண்டிருந்தாள், ரேவதி. உலகியல் நடைமுறையில், இப்படியும் ஒரு சித்திர விசித்திர விடுதலையா, என்ன? —"நான் ஒண்ணும் கொக்கு இல்லே...ஆமாம்!" —நிர்த்தாட்சண்யமாகவே

பேசினாள்; சத்தம் கொடுத்துப் பேசினாள். யாரிடம்...? அவளது மனச்சாட்சியிடம் தானா?

புதுக்கோட்டையில் கீழ ராஜவீதியில் அந்த மாளிகையில் அன்று முழங்கிய கெட்டி மேளம் இன்றும் முழங்குகிறது. மனம் தடுமாறுகிறது. தடுமாற்றம் அரைக்கணம் தான் நீடித்தது. அவள் பொதுநலப் பணிக்குத் தன்னை அர்ப்பணம் செய்து கொண்டவள் இல்லையா? "பார்த்துக்குங்க, தமிழரசி. எனக்கு ஜி. எச். போக நேரமாயிட்டுது!" அவள் இப்போது டாக்டர் ரேவதி.

"மிஸ்டர்...மிஸ்டர் ஞானசீலன்! ஏன் இப்படி ஆயிட்டீங்க...? நாதியத்துப் போயிட்ட மாதிரி ஆகிட்டீங்க?—தயங்கியவள், புறப்பட்டாள். போலித்தனமான மிடுக்குடன் புறப்பட்டாள்.

வெடித்த விம்மலை நாசுக்காகவும், நாகரிகமாகவும் கட்டுப்படுத்தியவாறு, தலையை நிமிர்த்தினாள், ரேவதி. சலனம் கண்ட உணர்வுகளைக் கண்காணாமல் சமனப் படுத்திக் கொண்டு நாடிக்குழலை எடுத்தாள்; இனம் புரிந்த தவிப்புடன் நோயாளியைப் பரிசோதனை செய்தாள். நெஞ்சம் தழதழக்கின்றது; என்னவோ பழைய ஞாபகத்தில், கழுத்துச் சங்கிலியை நெருடி விட்டாள்; நெஞ்சில் முடிச்சுப் போட்டிருந்த 'நிரடல்' அவிழாதோ?

தொலைபேசி கூட ஏழரைக் கட்டைச் சுருதியில் அலறியது.

தொண்டையை கனைத்துக் கொண்டே, "அலோ...! டாக்டர் ரேவதி பேசுகிறேன்..." என்றாள்.

எதிர்முனையில், "அலோ...அலோ!" என்ற குரல் மாத்திரம்தான் கேட்டது; பேச்சு எதுவும் தொடரக் காணோம்!

நான்கைந்து வினாடிகள் நழுவின.

அவ்வளவுதான்.

அவள் பொறுமையை இழக்க வேண்டியவள் ஆனாள். ஆனாலும், ஒலிவாங்கிக் கருவியைப் பொறுமையோடு ஏந்தி நின்றாள். பிறகும் எதிர் தரப்பில் ஓசை எதுவும் கேட்காமல் போகவே, கருவியை ஓசையில்லாமல் வைத்தாள்.

அரைக்கணம் அப்படியே மலைத்து நின்றாள். ''அலோ...அலோ...'' என்று சுருதிபேதத்துடன் ஒலித்த அந்தக் குரல், திரும்பத் திரும்ப அவளது மன அடிவாரத்தில், இனம்காட்டி எதிரொலித்தது!

''வேதாளம் மறுபடியும் முருங்கை மரத்தில் ஏறிடுச்சுப் போலே! அதுதான், இப்படியெல்லாம் நாடகம் ஆடுறார். எழுபத்தெட்டு ஜனவரியிலே பிடிச்ச கிறுக்கு இப்ப எண்பத்தெட்டு ஜனவரியிலே மறுபடி தொடங்கியிருக்கு போலிருக்கு. ஆனானப்பட்ட இந்த ரேவதிப் பொண்ணை இன்னமும் கூட கொக்குன்னு பழைய கொங்கணவா, நீ நினைச்சிருந்தால், அந்தத் தப்பிதத்துக்கு நானும் பொறுப்பாளி ஆகமுடியாது; விதின்னு கதைக்கிற ஏதோ ஒரு மாயசக்தியும் பொறுப்பு ஆக மாட்டாது!'' சிரித்தாள், டாக்டர் ரேவதி.

பட்டணத்தில் எம். பி. பி. எஸ். படித்துப் பட்டமும் பெற்றபின், புதுக்கோட்டையில் ராணி மருத்துவ மனையில் உதவியாளராகப் பொறுப்பேற்ற அன்று மாலை நேரத்தில் பல்லவன் குளப் பகுதியிலிருந்த சாந்தநாதர் ஆலயத்திற்குச் சென்றாள், ரேவதி. அர்ச்சனை செய்தாள். பெண்கள் வரிசையிலிருந்த சுவாமியைக் கும்பிட்டாள். அப்போது, எதிர்ப்புறத்தில் இருந்த ஆண்களின் கூட்டத்திலிருந்து ஞானசீலன், வழக்கம் போலவே அப்போதும் ''வணக்கம்'' சொன்னதைக் கேட்டதும், கண்டதும், அவளும் வழக்கம் போலவே பதில் வணக்கம் தெரிவித்துப் புன்னகை செய்தாள்.

தீபாராதனை நடந்தது; முடிந்தது.

தீட்சிதர் நீட்டிய பிரசாதத் தட்டை வாங்கிக் கொண்ட ரேவதி, முழு ரூபாய்ப் பணத்தை நீட்டினாள்.

பணத்தை வாங்கிக் கொண்ட குருக்கள், மற்றொரு தேங்காய் மூடிப் பிரசாதத்தை ஞானசீலனிடம் நீட்டினார். அவனும் ஒரு ரூபாயை நீட்டவே, அவர் அதைப் பெற்றுக் கொள்ளாமல், ''ஞானசீலன்! நீங்கள் எனக்குத் தர வேண்டிய அம்பது பைசாவை நம்ப ரேவதி கிட்டக் கொடுத்திருங்கோ; என்னோட கணக்கும் சரியாயிடும்; உங்கள் கணக்கும் தீர்ந்துடும்'' என்றார். ''என்னம்மா ரேவதி, சரிதானே?'' என்று ரேவதியையும் கேட்டார்.

ஞானசீலனைப் போலவே, ரேவதியும் ''ஊம்'' கொட்டித் தலையை ஆட்டி வைத்தாள்.

அவள் பிராகாரம் சுற்றத் தொடங்கினாள்.

அவனும் தொடர்ந்தான்; பின்தொடர்ந்தான்.

மூன்று முறை பிராகாரம் சுற்றி முடிந்ததும், இருவரும் வெளிமண்டபத்திற்கு வந்து எதிரும் புதிருமாக வாய்மூடி ஊமைகளாக ஒரு வினாடி நின்றார்கள்.

''டாக்டர் ரேவதி, ஒரு நிமிடம் இருங்க. சில்லறை மாற்றிக்கிணு வந்திடறேன்'' என்று தயவான குழைவோடு சொன்னான், ஞானசீலன்.

''ஆகட்டும்'' என்கிற பாவனையில் வெகு அமர்த்தலாகத் தலையை லேசாக அசைத்தபடி நின்றாள், ரேவதி.

சில்லறைக் காசோடு திரும்பி வந்தான், ஞானசீலன்.

அந்திமழையும் வந்தது.

''இந்தாங்க'' என்று கூறி, ஐம்பது காசை நீட்டினான், அவன்.

அவள் தயக்கம் துளியுமின்றி வாங்கிக் கொண்டாள்.

அவனது களையான முகம் ஏனோ, அப்போது களை இழந்தது! "ஓர் இங்கிதம் கருதி, ஒப்புக்காகவேனும் துட்டு வேணாம்னு இந்த ரேவதிப் பொண்ணு சொல்லியிருக்கப்படாதா?" என்பதாக அவனது உள்மனம் ஆதங்கம் அடைந்திருக்க வேண்டும். மறுகணத்தில், அவன் பதறவும் நேர்ந்தது. மழை பெய்கிறது என்கிற நினைவு இல்லாமல் நடக்கிறாளே, இந்த குமரிப் பெண்? "ரேவதி! ...மிஸ் ரேவதி!"—கூப்பாடு போட்டது தான் மிச்சம். பலன்: சுழி!

கொட்டும் மழையிலே, வெகு துடுக்காகவும், மிடுக்காகவும் தன் வழியில்—தனி வழியில் நடந்தாள்.

ஏமாற்றம் அடைந்த அழகு வாலிபன் ஞானசீலன் ஏக்கம் அடையவும் தவறவில்லை! அப்பா தனக்கென்று தனியாக வாங்கித் தந்த புது 'செவர்லே' வண்டியில் அவள் ஏறுவாள் என்றும் அப்பொழுது அவளிடம் தன் காதல் மனத்தை வெளிப்படுத்தி விடலாம் என்றும் கோட்டை கட்டியிருந்தான், பாவம்! "போனதுதான் போனாங்க; என்கிட்ட போயிட்டு வாரேன் அப்படின்னு சொல்லிக்கிட்டுப் போயிருக்கப்படாதா? ரேவதிக்கென்று ஒரு வேடிக்கையான ஆணவமா?"

அவளை முதல் முதலாகச் சந்தித்த பொன்னான சந்தர்ப்பம் இரவு முழுவதும் அவன் உள்ளத்தில் ஆலவட்டம் சுற்றிக் கொண்டேயிருந்தது! ரேவதி மனிதப் பெண்தானா? இல்லை, மாயத்தேவதையா?...

# 6. தாவிக் குதிக்கும் மனக்குரங்கு

'சீகோ' மணி பன்னிரண்டு!

ரேவதியின் கண்கள் திறக்கின்றன.

மேனியின் சிலிர்ப்பு இன்னமும் அடங்கவில்லை போலும்!

அன்றைக்குக் கோவிலில் ஞானசீலனின் அன்பைப் பொருட்படுத்தாமல் அவனிடமிருந்து பிரிந்து, அந்தி மழையில் நனைந்துகொண்டே வீடு வந்து சேர்ந்தபோது ஏற்பட்ட அதே மேனிச் சிலிர்ப்பை பத்து ஆண்டு இடைவெளிக்குப் பிறகு இப்போதும் அனுபவிக்க நேர்ந்ததை உணர்ந்ததும், கால்பாவி நின்ற நிலம் பிளந்துவிட்ட மாதிரி அவள் பதைத்துவிட்டாள். நாற்புறமும் கலங்கிய விழிகளை மாறி மாறியும் மாற்றி மாற்றியும் சுழலவிட்டாள். எல்லாக் கதவுகளும் தாழிடப்பட்டிருக்கின்றன.

அவள் தனக்குத்தானே கேட்டுக் கொண்டாள்: ''நான் யார்?... ஞானசீலன் யார்? — நான் டாக்டர் ரேவதி. ஆமாம்; நான் நான்தான்; நான் நானேதான்! என்னைப் பொறுத்தவரை எதுவும் யாரும் எனக்கு அப்புறம்தான்! அவர்... மிஸ்டர் மனச்சாட்சியாம்... அதுவும் என் மனச்சாட்சியாம்! சுத்தப் பேத்தல்!... விதியை வம்புக்கு இழுக்கிற தோரணையில் அவள் பலமாகச் சிரித்தாள்.

மனம் என்றால் நல்லதும் இருக்கும்; கெட்டதும் இருக்கும்; மனத்தின் யதார்த்தமான நிலை இது. இப்போது அவள் மனம் அந்த பழஞ்சோற்றை பதச் சோறாகப் படம்பிடித்து எடுத்துக் காட்டும்போது, அவள் மறுத்துத்தான் தீரவேண்டுமென்று எந்தப் புரட்சியும் இலக்கணம் வகுத்துக் காண்பிக்கவில்லைதான்!

ஊம்...

மற்றுமொரு மஞ்சள் வெயில் மாலை வேளையில், மன்னர் கல்லூரியில் நடைபெற்ற இலக்கிய கலை விழாவில் கலந்துகொண்டு விட்டு கால்நடையாக திரும்பிக்கொண் டிருந்தாள், ரேவதி. சென்னை மருத்துவக் கல்லூரியில் படித்த குலோத்துங்கனும், யசோதாவும் காதலாகிக் கலியாணம் செய்துகொண்ட சுபமான பழைய நிகழ்ச்சியை நினைவூட்டுகிற மாதிரி, அவர்கள் இருவரையும் பேருந்து நிறுத்தத்தில் சந்தித்துப் பேசிய பின் அவள் நடையைத் தொடர்ந்த நேரத்தில், வானம் பொத்துக்கொண்டது. ஒதுங்க இடம் தேடிக்கொண்டு இருந்த அவளை உரசிக் கொண்டு 'செவர்லே' ரோஜா பூத்த மாதிரி வந்து நின்றதைக் கண்டதும் இன்ப அதிர்ச்சி அடைந்தாள். ''ஓ...நீங்களா!''

ஞானசீலன் புன்னகை பூத்தவாறு ''நான் எப் பொழுதும் உங்கள் பணியாள்தான். ஏறிக் கொள்ளுங் கள்'' என்று கூறி கதவைத் திறந்து விட்டான். அவளும் வேறு வழியில்லாமல் ஏறிக்கொண்டாள்.

அவனது மாளிகைக்குள் போய் கார் நின்றது. ''மன்னித்துக்கொள்ளுங்கள் டாக்டர். ஒரு சிறு வேலை; முடித்துவிட்டு வந்துவிடுகிறேன். ஆட்சேபணை இல்லை என்றால் நீங்கள் கூட உள்ளே வந்து அமரலாம்.''

அவளுக்கு ஆட்சேபணை என்ன? அச்சம் என்ன? அவனும் திரும்பி வர எவ்வளவு நேரம் ஆகுமோ? மழையும் நின்றபாடாக இல்லை. ரேவதியும் இறங்கினாள்.

அவனது வீட்டுக்கு ரேவதி வந்து விட்டாள்! அவன் உடல் முழுக்க கம்பளிப்பூச்சி ஊர்ந்தது.

''வந்த காலோடு நிற்கப்படாதின்னு சொல்வாங்க; உட்கார்ந்து காபி சாப்பிடுங்க'' வேண்டிக் கேட்டுக் கொண்டான் அவன்.

அவள் உட்கார்ந்து காபியை அருந்தினாள்.

கோப்பையை 'டீபா'யில் வைத்தபடியே ''நன்றி. உங்களுக்கு ஒரு நன்றி. உங்கள் காபிக்கு ஒரு நன்றி.'' நயமான நாணத்துடனும் விநயமான புன்சிரிப்புடனும் அவள் நன்றி தெரிவித்தாள்.

மனம் கொள்ளாமல் சிரிப்பு வழியவே, வாய் கொள்ளாமல் சிரித்தான், ஞானசீலன். ''உங்கள் நன்றி அறிவிப்பு பாணி ஏ. ஒன். மிஸ் ரேவதி!''

ரேவதி கருவக்களி துலங்கச் சிரித்தாள். ''அதுதான் ரேவதி!... ஆமாங்க ஞானசீலன், நான் எப்போதும் எதிலும் 'ஏ. ஒன்' தான்! அதுதான் இந்த டாக்டர் ரேவதியின் தனிச்சிறப்பாகும்.''

ஞானசீலன் மீண்டும் சிரித்தான்.

''நான் புறப்பட்டேன்...''

''என்னை விட்டுட்டா?...''

சிமிக்கிகள் குலுங்கவும் மூக்குத்தி பளிச்சிடவும் தலையையும் மார்பையும் நிமிர்த்தி, ஞானசீலனை நேர்கொண்ட பார்வையைக் கொண்டு அளந்தாள். அந்தக் கேள்வியில் தொனித்த இனம் விளங்காத என்னவோ ஒரு சுகம் தனது மனதுக்கு ஆறுதலாக இருப்பது போலவும் அவள் உணர்ந்தாள்.

ஆறுதலில் பூத்த புன்னகை மலர் மணக்கத் தொடங்கி விட்டது. பழைய கோயில் நிகழ்ச்சியை நினைத்துப் பார்க்கவும் மறந்துவிடவில்லை. அன்றைக்கு ஏற்பட்ட

தவறுக்குப் பரிகாரம் கண்டு ஒரு சமரசம் ஏற்படுத்தவும் அவளது கன்னிப்பூ நெஞ்சம் இடம் தர மறுத்துவிட வில்லைதான்!

''உங்களுக்கு மறுபடியும் தொந்தரவு தர வேண்டா மேன்னுதான், வீட்டுக்கு நடந்தே போயிடலாம்னு யோசிச்சேன்'' என்று இங்கிதமாகப் பேசினாள். மழை யில்லை.

''உங்களை உங்கள் வீட்டிலே கொண்டாந்து விட்டால்தான், எம் மனசுக்கு சமாதானம் ஏற்பட முடியும். இல்லாவிட்டால், உங்களை நடுவழியில் விட்டு விட்டது போல வருந்துவேன்.''

''அப்படியா?''

''ஆமாம்.''

''அப்படின்னா, என்னோடு புறப்படுங்க'' என்று பட்'டென்று சொன்னாள் ரேவதி.

அவளது ஒப்புதலில், அவளையும் அறியாமல் ஒரு சுவாதீனமான உரிமை, குரல் கொடுத்ததை உணர்ந்ததும் அவள் ஆச்சரியப்பட நேர்ந்ததும் உண்மைதான்! அன்றொரு நாள் கோயிலில் ஞானசீலன் விடுத்த அன்பான அழைப்பை ஏற்க மறுத்ததால் ஏற்பட்ட உறுத்தலுக்கு கழுவாயாக இன்று சமரசம் ஏற்படுத்திக் கொள்ள நேர்ந்தது அவளுக்கு ஆறுதலாகவே இருந்தது.

ரேவதியின் சிறிய வீட்டின் வாசலில் ஞானசீலனின் பெரிய கார் நின்றது.

பட்டுச்சேலை தரையிலே பட்டுப் புரளாமல் கொய்து சீராக்கிக் கொண்டபடி, இறங்கிக் கொண்டாள் ரேவதி.

''நான் வரட்டுமா?'' என்றான் ஞானசீலன்.

அவனது அகன்ற மார்பில் புரண்ட சங்கிலியின் நரிப் பல் பதக்கத்தை அழகு பார்த்த ரேவதி, தனது மயில் பதக்கத்தை உருட்டி விட்டவளாக, ''வீடுவரை

வந்தவங்க, உள்ளே வராமல் போனால், நல்லா இருக்காதுன்னு சொல்லுவாங்க; வாங்க'' என்று அழைத்தாள்.

பூட்டுத் திறந்தது.

புதிதாகப் பிறந்த மகிழ்ச்சியில் அவனது அழகு கூடியிருந்தது. அவளைத் தொடர்ந்தான்.

எளிமையான முகப்புக்கூடத்தில் அவனுக்கு இடம் கொடுத்தாள், அவள். அடுத்த பத்தாவது நிமிடத்தில் அடுப்பைப் பற்ற வைத்துக் காப்பி போட்டுக் கொண்டு வந்து கொடுத்தாள்.

அவளுடைய அப்பாவும் அம்மாவும் வெளியே போயிருக்கலாம் என்று நினைத்தான். அவனது மாளிகையிலும் அவனுடைய பெற்றோர் வெளியே போயிருந்தார்கள் அல்லவா?

ஞானசீலன் மெய்மறந்த நிலையில் காப்பியைக் குடித்து முடித்தான்.

அவசர அவசரமாக, ''உங்கள் அன்புக்கு ரொம்ப நன்றிங்க, ஞானசீலன்'' என்றாள் ரேவதி.

அவன் விவேகம் மாறாமல் சிரித்துக் கொண்டான். விடை பெற்றுப் புறப்பட்டான்.

கருங்குயில் ஒன்று 'குக்கூ...கூ' என்று முழக்கமிட்டது.

டாக்டர் ரேவதி பதட்ட நிலையிலேயே, தன் நினைவை அடைய வேண்டியவள் ஆனாள். தொலைக்காட்சிப் பெட்டியை அழுத்தியபொழுது கெட்டி மேளம் கொட்டி முழங்கிக் கொண்டிருந்த மங்களமான இனிய ஓசையைக் கேட்டதும், இன்ப அதிர்ச்சி அடைந்தாள். ''இப்ப எல்லாமே முடிஞ்சு போச்சு... ஆமா; முடிஞ்சுதான் போயிட்டுது!''

அடிமனம் பொங்கிக் கொண்டு வந்தது. திறந்த கண்களை மூடினாள். மூடின கண்களைத் திறந்தாள்!

விம்மினாள். விழிகளும் விம்மின.

விம்மல் வெடித்து நெஞ்செங்கும் பரவியதை உணர்ந்ததுதான் தாமதம்; அவளுக்கு நெஞ்சு வெடித்து விடும் போலிருந்தது!

"நானா இப்ப விம்மினேன்? சே!... கேடு கெட்ட தாழ்வு மனப்பான்மை நோய் என்னையும் தொற்றிக் கிடுச்சா? இருக்காது; இருக்கவும் முடியாது; இருக்கவும் கூடாதாக்கும்! நான் சாதாரண ரேவதியா? என்ன! நான் டாக்டர் ரேவதி இல்லையா?'' அவள் இப்போது சிரிக்கிறாள்.

ராஜதந்திரத்தோடு விதிக்குச் சவால்விடும் ராஜரீக மான சிரிப்பு அது!

வானொலி பாடுகிறது.

என்னவோ ஒரு பாட்டு.

என்னவோ ஒரு ராகம்.

பாட்டும் ராகமும் நிறுத்தப்பட்டன.

ரேவதிக்கு இப்போது உண்மையான அமைதி வேண்டு மாம்!

"இந்த ஞானசீலன் அன்றைக்குத் தன்னை மறந்த தோட, என்னையும் மறந்து அப்படி ஒரு பாவத்தையும் அநியாயத்தையும் திமிரெடுத்துச் செய்யாமல் இருந்திருந் தால்... என்ன என்னவோ நடந்திடுச்சு! எல்லாமும் முடிஞ்சு போச்சு!... நான் தனி மரம் ஆனதுதான் கண்ட பலன்!...

இன்று ஏன் மனக்குரங்கு இப்படித் தாவிக்குதிக்கிறது?

# 7. அந்தக் கொடியிடையில்...

சுகத்திற்கு என்று ஒரு மனமா?

சோகத்திற்கு என இன்னொரு மனம் வேண்டுமோ?

வேடிக்கையான மனம்!

வேடிக்கையான வாழ்க்கை!

நல்ல மன நிலை மாறுமுன் அவள் சுழற் நாற்காலியில் இருந்து எழுந்து விட்டாள். காதல் சுயம்வரத்தில் கலந்து கொள்ளப் போட்டி போட்டுக் கொண்டு வந்து சேர்ந்திருந்த விண்ணப்பங்கள், புகைப்படங்கள் அடங்கிய கோப்பு அப்பால் நகர்ந்துகொண்டது. சிதறிக்கிடந்த நிழற்படங்களும் இருட்டை நிழலாக்கி இளைப்பாறின.

செயலாளர் ராவ் மேலே வந்துவிட்டால், புதிய தகவல்களைச் சொல்லக்கூடும்! வரட்டும்!

பூச்சிதறலாக சாதி முல்லை மணக்கிறது.

அடடே!... இன்னொரு டாக்டர் ரேவதியும் அதோ சிரிக்கிறாளே!

கச்சிதம்.

திலகம் அபாரம்.

பதக்கம் மின்னுகிறது.

போதும், போதும்!... கண் பட்டுவிடப் போகிறது!

யார் கண்ணாம்?

அந்த இரகசியத்தை பிப்ரவரி நான்கு சொல்லிவிடும்.

அவளது இளமை மாறாமலும் மாற விடாமலும் பேணிப் பாதுகாத்த மகத்தான பெருமைக்கு உரியவள் ஆயிற்றே, அவள்!

ராவ் வந்தார்; கையில் 'காயகல்பம்' டைரி; முகத்தில் தெளிவு கலந்த அச்சம்.

அவள் விழிப்புடன் இருந்தாள். தெளிந்த போதத்தில் ஆர்வம் இருந்தது; ஆவலும் இருந்தது. ''ராவ், பேசுங்க'' என்றாள். அதிகாரமான தோரணை, மாமூல் விஷயம்தான்.

''ஞானசீலனைப்பற்றி...''

ரேவதி குறுக்கிட்டாள்: ''ராவ், மிஸ்டர் ஞான சீலன்னு ஆரம்பிங்க; அவர் யாராக இருந்தாலும், அவரோட பேருக்கு மரியாதை கொடுத்தாக வேணும். ஊம், சொல்லுங்க!''

ராவ் சுதாரித்துக்கொண்டார். ''மிஸ்டர் ஞான சீலனைப்பற்றி இன்னிக்குத்தான் நம்பகமான தகவல்கள் கிடைச்சுதுங்க; அவருக்கு நாளது தேதிவரை மறு கலியாணம் ஆகலையாம்; தங்குமிடம் ஏதுவும் கிடையாது; நாடோடியாட்டம் சுத்திக்கிணு இருக்கார்; பூர்வீகச் சொத்து, வீடுவாசல் சகலமும் காலி!... குடிக்கிறது மட்டும்தான் கெட்ட பழக்கம்னு சொல்ல முடியாதாம்! கெட்ட கெட்ட பொம்பளைங்களோட கெட்ட சக வாசமும் உண்டாம்!... இம்மாதிரியான கதை இனி மேலும் தொடர்கதையானால், அவரைக் கீழ்ப்பாக்கத் திலேதான் சந்திக்க வேண்டி வருமாம்!...'' நிறுத்தினார், ராவ்.

''கதை அவ்வளவுதானா?''

''உண்மை அவ்வளவுதாங்க!''

''ஓகோ! இதெல்லாம் யார் மூலம் உங்களுக்கு கிடைச்சுது, ராவ்?''

''எனக்குத் தேனாம்பேட்டையிலே ஒரு நண்பர். அவர்தான் இத்தனை விவரங்களையும் எனக்குச் சொன்னார்.''

''அவர் பெயர்?''

''அவர் பேர் எஸ்.பி. சிதம்பரம்!''

''ஓகோ?''

''ஊம்!''

''சரி; இனி, நீங்கள் கீழே போகலாம்!''

''ஆகட்டுங்கம்மா!''

நகர எத்தனம் செய்தவர் நேர்முகமாகத் திரும்பி நின்றார்; நேர்முக உதவியாளர் அல்லவா? ''இன்னிக்கு மதியம் வந்தது இந்த உறை'' என்று கூறி, வந்திருந்த தபாலை அமெரிக்கையாக நீட்டினார். ''யாரோ ஓர் ஆள் ஏதோ ஒரு வண்டியிலே கொண்டாந்து டெலிவரி செஞ்சுட்டுப் போனாருங்க. கையெழுத்துப் போட்டு வாங்கிக்கிணேனுங்கம்மா!'' என்றார்.

கடிதத்தை நிதானத்தோடுதான் வாங்கினாள், அவள். ஆனாலும், அது நிதானம் தவறி வீழ்ந்தது, விடவில்லை. மடக்கிப் பிடித்து எடுத்துக் கொண்டாள்.

உறையை முன்னும் பின்னும் புரட்டியெடுத்தாள். அனுப்பியது யாராம்?—மூச்! ஒரு துப்பும் துலங்கவில்லை.

ஒட்டப்பட்டிருந்த ஓரத்தைக் கணித்துப் பிரித்தாள். கனகச்சிதமாகவே பிரிந்துவிட்டது.

''அன்புடையீர்,

நலம்தானே?

விளம்பரம் கண்டேன்.

கலியாண சுயம்வரம் விளம்பரத்தைத்தான் சொல்லுகிறேன்.

போட்டியில் அடியேனும் கலந்து கொள்ள உத்தேசம்.

பிப்ரவரி நாலில் நேரிலே தோன்றுவேன்.

வரும்போது, நேரிலேயே என் படத்தையும் தருகிறேன். போதுமா?

விதி இவ்வளவுதானே அம்மணி?

இப்படிக்கு,
எஸ். பி. சிதம்பரம்.

ராவ் அந்நேரத்தில் அங்கிருந்து சமர்த்தாகவே காணாமல் போயிருந்தார்.

ஆகவே, அவள் பலமாகவே, சுத்தமாகவே பெரு மூச்சை நெட்டிப் பிடித்துத் தள்ளிவிடலானாள்.

இந்தச் சிதம்பரம் — ஆமாம்; எஸ். பி. சிதம்பரம் ஏற்கெனவே கலியாணம் ஆனவர் ஆயிற்றே? அம்மி மிதித்து, அருந்ததி பார்த்து, அக்கினியை சாட்சி வைத்து, என் ஆருயிர்த்தோழி சிந்தாமணிக்குத் திருப்பூட்டினாரே? அப்படியென்றால், அவளை இவர் மணவிலக்கு செய்து விட்டாரா? இவரும் என்னைப் போல்தானோ? நினைவுகள் தாயம் ஆடின. காலையில் வந்த நாளிதழை எடுத்தாள். புரட்டினாள்.

'ராஜகுமாரி'யில் அழகான 'செக்ஸ்' படம் ஓடுகிறதாமே? போகலாமா?...

ஓ... போக வேண்டியதுதான்!

கூடத்தைப் பூட்டிக்கொண்டு படி தாண்டிக் கீழே இறங்கி வந்தாள் ரேவதி.

ஐந்து, முப்பத்தொன்று.

ராவ் எழுந்து நின்றார்.

அவள் பெருமைப்பட்டுக் கொண்டாள்.

அவளுக்கு 'டெலிபோன் டைரக்டரி' தேவைப் பட்டது.

சைகை காட்டினாள். தேடி வந்தது அது.

புரட்டினாள்.

'ஞானசீலன்' என்கிற பெயர் இப்போது மட்டும் அதில் எப்படி இடம் பெற்றிருக்க இயலும்? அந்தப் பெயரில் மருந்துக்கு என்றாவது ஒரேயொரு பெயராவது அச்சாகி இருக்கக் கூடாதோ? விநோதமான பெயர் தான், அது!

இப்போது எஸ். பி. சிதம்பரத்தைத் தேடினாள். தேடியது கிடைத்தது.

எண்களைச் சுற்றிவிட்டாள்.

செட்டிநாட்டுக்குப் போய்விட்டாராம், மனிதர்!

காப்பி ஆவி பறக்க வந்தது.

சுவைத்துச் சுவைத்துப் பருகினாள். ஆவி உதடுகளில் வட்டம் சுழித்தது. ஆவியென்றால், இந்த ஆவி தான்!

ராவ் சூடு தாங்காமல் திண்டாடினார்.

ரேவதி இப்போதும் தன்னைப்பற்றியே நினைத்தாள்: "உலகத்திலே யாரைத்தான் நம்புவதின்னே புரியலையே?...சிதம்பரம் சொன்னதாகச் சொல்லி, ஞானசீலனைப் பற்றி ராவ் தெரியப்படுத்தின சங்கதியெல்லாம் மெய்யாக இருக்குமா?...எனக்கென்னமோ மனசே ஒட்டக் காணோம்!...பெரிய லட்சாதிபதி வீட்டுப்பிள்ளை பத்து ஆண்டுக்குள் எல்லாத்தையும் தொலைத்திட முடியுமா, என்ன? ஞானசீலனைப் பற்றிய அந்தரங்கம் ஆதியோடந்தமாகச் சிதம்பரத்துக்கு எப்படித் தெரிஞ்சிருக்கும்?"

குடிபோதையோடு வாடகைக் காரில் பயணம் செய்த ஞானசீலன் மருத்துவமனை வாசலில் அடிபட்டு, மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு, வைத்தியம் செய்யப்பட்டு, பிறகு தன்னினைவு வந்ததும், சொல்லாமல் கொள்ளாமல்

அங்கிருந்து வெளியேறிய காரணமும் அவளுக்கு இன்னமும் புதிராகத்தான் தோன்றியது.

"மெய்யாகவே இவருக்கு இப்ப வாடகைக் கார் பிரயாணம்தான் விதிச்சிருக்குமா? நினைவு பளிச்சிட்ட கையோடு, ஓட்டுநர் கூறிய வேறொரு தாக்கலும் பிசிறு தட்டிற்று. "இவர் யாரோ மெக்கானிக்கை பார்க் கணும்னு சொன்னதாகத் தெரிவித்தாரே டிரைவர்? ஒருவேளை, இவரோட புதுக்கார் செவர்லேயாயினும் மிஞ்சியிருந்து, அது ரிப்பேர் ஆகியிருக்கலாம்தானே? அம்மாடி... ஒரே குழப்பமாகப் போயிடுச்சே?...போதுமடி, ஆத்தா, போதும்!" நெற்றி 'விண் விண்' என்று தெறித்தது.

"நான் யார்? இவர் யார்?... எனக்கும் ஞானசீல னுக்கும் இருந்த சொந்தமும் பந்தமும் உறவு முறிஞ்சு, உரிமை துறந்து ஆண்டு பத்து ஓடிப் போயிட்டுதே! இனி என்ன?..."

இப்போது, சிறுகச் சிறுக நெஞ்சிலே அமைதியைச் சேகரம் செய்துகொள்ள முனைந்தாள்.

ஊஹூம்!...

அந்தரங்கச் செயலாளருக்குக் குதிகால்களில் வலி யெடுத்தது. அந்தரங்கத்தில் செயல்பட்ட சமாசாரம்.

"ராவ், காரை எடுத்திட்டு நான் கொஞ்சம் வெளி யிலே போயிட்டு வந்திட்றேன். டிரைவர் சைக்கிளை எடுத்துக்கிட்டு வீட்டுக்குப் போகட்டும். நீங்களும் எனக் காகக் காத்திருக்க வேண்டாம். 'மணமகன் தேவை'ன்னு நான் கொடுத்திருந்த விளம்பரத்தை ஆசையோட மதிச்சு விண்ணப்பம் அனுப்பியிருக்கிற மாப்பிள்ளைமார்களிலே கொஞ்சப் பேரை அநேகமாக நான் திரும்பினதும் தேர்வு பண்ணிப் பட்டியல் போட்டுத் தந்திடுவேன். அவங்களுக் கெல்லாம் இந்த முப்பது, முப்பத்தொண்ணிலே பேட்டிக்கு

அழைத்துக் கடிதம் குடுங்க. என்ன சரிதானே? பேட்டி பிப்ரவரி நாலு!... ஆமாம்! நேரம், மாலை ஐந்து மணி!''

''உத்தரவுங்க!''

''ராவ், ஒரு சின்ன சந்தேகம்!''

''அம்மா...''

''நான் டாக்டர்!''

''ஆமாங்க, டாக்டரம்மா!''

''நீங்கள் இப்போ காட்டின மரியாதை மெய்யாவே உங்கள் மனசிலே இருந்து வந்தது தானே?''

''ஆமாங்க, நீங்கள் என்னைச் சந்தேகப்பட்டிங் கன்னா, என் குடும்பம் தவிச்சிப் போயிடுங்க!''

''மெய்யா?''

''மெய்தான்.''

''உங்கள் ஒப்பந்தம் பிப்ரவரி நாலாந்தேதி சாயந் தரம் அஞ்சு மணியோட முடிஞ்சிடுது. அதுவரைக்கு மாச்சும், நீங்கள் என் நம்பிக்கைக்குப் பாத்திரமாகி, என்னிடம் நம்பிக்கையாய் நடந்துக்கிணு, நல்ல பேரோட இங்கேயிருந்து 'டாடா' வாங்கிக்கிணு போவீங்கண்ணும் நான் நம்புகிறேன்.''

''உங்கள் நம்பிக்கை என் தரப்பில் சத்தியமாய் எவ் வித துரோகமும் விரோதமும் ஏற்படவே ஏற்படாதுங்க, டாக்டரம்மா! இந்த அம்பது நாளா உங்கள் உப்பைத் துண்ணுறவனாச்சுங்களே நான்?''

''சரி, இனி நீங்க உட்கார்ந்துக்கிடுங்க, ராவ்!...''

ராவ் சாமர்த்தியசாலி; அவசரப்பட்டு அவர் உட் கார்ந்து விடவில்லை.

''என் ஜாதகத்தைப் பற்றி உங்களுக்குத் தெரியுமா?''

''நீங்கள் சொன்னால்தானுங்களே எனக்குத் தெரியும்?''

''என்னோட ஜாதகம் பற்றி உங்களிடம் எதற்குச் சொல்ல வேணும்? மறுபடியும் உங்களுக்கு நினைப்பூட்டு கிறேன்: டாக்டர் ரேவதியை மண்ணைக் கவ்வ வச்சி, அவளை வெல்லுவதற்கு இதுநாள்வரை இந்தப் பாழாய்ப் போன மண்ணிலே யாருமே பிறக்கக் காணோம்! என் வரையிலும் இதுவரை சத்தியமான உண்மை!''

''உண்மைதாங்க, டாக்டரம்மா.''

''சரி...சரி! எனக்கு நேரமாகிறது.''

ரேவதி வெளியே வந்தாள்.

காவற்காரப் பெரியவர் கைகூப்பி மரியாதை செலுத்தினார்.

'மாருதி' தயார்.

திடீரென்று—

ரேவதி மாடிக்கு ஓடினாள்.

ஓடின கையோடு, ஊக்கம் காலோடு திரும்பினாள்.

அப்போது—

அவளது அழகான இடுப்பிலே அழகான கைத்துப்பாக்கி ஒன்று அழகாக ஒளிந்து கொண்டிருந்தது!

## 8. பாரிஸ் இன்ப இரவுகள்

'ராஜகுமாரி' கொட்டகையில் எக்கச்சக்கமான கூட்டம்.

ரேவதி ஒற்றை ரோஜாச் செடியாக சற்றே ஒதுங்கி நின்றாள்.

ஓர் ஆட்டம் முடிந்து, இன்னோர் ஆட்டம் தொடங்க இருந்த நேரமானதால், சத்தங்களே மனித வீதியாகி ஆர்ப்பாட்டம் நடத்தவே, அவளுக்கு எரிச்சல் எரிச்சலாக வந்தது.

கூட்டத்திலே தலைமுறையின் இடைவெளியைக் கண் கூடாகப் பார்த்ததும், அவளுக்கு வியப்பு மேலிட்டது. கூட்டத்தினரில் இளைய தலைமுறையினரை விடவும் முற்றிப் பழுத்து முதிர்ந்தவர்களே கூடுதலாகக் காணப் பட்டனர்! வயதான கட்டைகளுக்கு செக்ஸ் என்கிற இனக்கவர்ச்சியில் இத்தனை மயக்கமா! அவள் திகைத்தாள்.

அவள் கேள்வியே அவளைச் சுட்டிருக்கலாம். வாழ்க்கையை உள்ளது உள்ளபடி படித்துக் கொள்வ தற்குப் பால் உணர்வு ஓர் ஆர்வத் தூண்டுதலாகப் பயன் பட்டால், வாழ்க்கை வாழ்வதற்காக அமையும்!—இவ் வகையில் 'பாரிஸ் இன்ப இரவுகள்' பயனுள்ளதுதான்!

''குட் ஈவினிங் டாக்டர்!''

''ஓ... குமாரி குழலி!... நல்லா இருக்கியாம்மா?...''

''உங்கள் புண்ணியத்திலே, நல்லாவே இருக்கேன், டாக்டரம்மா!'' வெள்ளைத் தாவணி இயற்கை தாய்க்கு வெண்சாமரம் வீசியதோ?

''படம் பார்க்க வந்தியா?''

''இல்லே... இல்லே. பக்கத்துத் தெருவிலே என் தோழி ஒருத்தியைப் பார்த்துட்டுத் திரும்பினேன். உங்களை மாதிரி தெரிஞ்சுது; அதான் ஓடியாந்தேன்...''

''மிகவும் மகிழ்ச்சி, குழலி!'' பாசம் கரைபுரளப் பேசினாள், ரேவதி.

கண்களுக்குள்ளே நின்றவளை நேரிடையாக மீண்டும் பார்த்த களிப்பு, அவளுக்கு ஆறுதலை அளித்தது. குழலியை அப்படியே விழுங்கிவிட்டுத்தான் மறுவேலை பார்ப்பதென்று தீர்மானம் செய்து கொண்டவளைப் போல, தொடுத்த கண் எடுக்காமல், ஆழமாகவும், அன்பாகவும் பார்த்தாள். அந்தப் பார்வை அவளுக்கு எத்துணை ஆறுதலையும் தேறுதலையும் தருகிறது!

யாரோ தும்முகிறார்கள்!

''ஒரு நிமிடம் நிற்கிறாயா, குழலி? ஒரு நிமிடத்திலே வண்டியை எடுத்துக்கிட்டு வந்திடறேன்'' என்று கூறி நகர்ந்தாள், ரேவதி.

மறுகணத்தில், தன் தோளைத் தொட்டு யாரோ உலுக்குவதை உணர்ந்து திகிலுடன் முதுகைத் திருப்பினாள்.

அங்கே... விதியின் கைப்பாவையென நின்றாள், மந்தாகினி. ''உங்கள் ஆணவத்துக்கு நான் ஒன்றும் குறைந்தவள் இல்லை'' என்று சொல்லாமல் சொல்வதைப் போன்று அவள் காணப்பட்டாள்.

''இடைவேளை நேரத்திலே என்னமோ கேட்டீங்க. இப்ப சொல்றேன்: உங்கள் கணவன் பேர் எதுவோ, அதுவேதான் என் கணவன் பேரும்!'' என்றாள்.

எரிமலையின் பிளந்த வாயருகே தள்ளப்பட்டாள், ரேவதி. என்ன புது சோதனை இது? பெயரைக் கேட்டால் பெயரைச் சொல்லுவாளா?... விடுகதை போடுகிறாளே?

''அப்படீங்களா? அப்படீன்னா, என் வீட்டுக்காரர் வச்சிருக்கிறது போலவே, உங்கள் வீட்டுக்காரரும் ஒரு 'செவர்லே' வண்டியை, ஊகூம், 'செவர்லேட்' வண்டியை வச்சிருக்கிறது தப்பு இல்லைதான்'' என்று 'நைச்சியம்' படித்தபடி நகர்ந்தாள், ரேவதி.

''ஆமா ஆமா!'' என்று தலையை ஆட்டிவிட்டுப் புறப்பட்டாள், மந்தாகினி.

சாலை ஓரத்துக்கு வந்தது 'மாருதி'.

''முன்னாடி ஏறிக்கம்மா'' என்றாள் ரேவதி.

குழலி ஏறிக்கொள்ளப் போனபோது—

அசுரத்தனமாகக் குறுக்கு வழியில் பாய்ந்து வந்து நின்றது, மஞ்சள் பூசிக் கொண்டிருந்த கார் ஒன்று. பழைய 'பியட்!'

அதிலிருந்து மந்தாகினி இறங்கினாள்.

''டாக்டரம்மா! என் காரை ஓட்டுகிற ஞானசீலன் தானுங்க எங்கள் வீட்டுக்காரர். இன்னும் நாலு நாளிலே நாங்கள் ஊட்டியிலே ஆப்பிள் சாப்பிடப் போறோமுங்க...'' என்றவள் 'டாட்டா' என்று கூறி கைகளை வீசியபடி மீண்டும் காரில் ஏறிக்கொண்டாள். காரும் நகர்ந்தது.

சிரிப்பதா, அழுவதா என்பது புரியாமல் போகவே, ''தெய்வமே'' என்று காரைக் கிளப்பினாள், ரேவதி.

பாண்டி பஜார் கடிகாரம் ஒன்று 9 மணி சொல்லிற்று.

பனகல் பூங்காவின் தெற்கு முடுக்கில் 'மாருதி' நின்றது.

ரேவதிக்கு அதிர்ச்சி மாறவில்லை. ஞானசூனியமாகத் தோற்றம் தந்த ஒரு முரடனுக்கு ஞானசீலன் என்பதாகப் பெயர் வாய்த்திருக்கிறது.

"அம்மாடி!... அங்கே போய் ஆளுக்கொரு டீ குடிப்போம் முதலில்" என்றாள்.

நாயர் கும்பிடு கொடுத்து வரவேற்க, அவள் கடையை நெருங்க, மீண்டும் அவள் அதிர்ச்சி அடைந்தாள்.

தாடியும் மீசையும் பூண்டவராக, முகத்தைத் திருப்பிக்கொண்டு சாரைப் பாம்பாகப் பாய்ந்து சென்றவர் மிஸ்டர்... மிஸ்டர்... ஆமாம்; அவரேதான்! உயிர்ப்பகுதி ஏன் இப்படித் துடிக்க வேண்டும்?

குழலி சற்றுத் தொலைவில் இருந்து திரும்பிக் கொண்டிருந்தாள்.

"என்ன ஆச்சு, குழலி?"

"எனக்குத் தெரிஞ்ச ஒருத்தர் குடிச்ச சாயாவைப் பாதியிலேயே வச்சுப்போட்டு, திடுதிப்னு தலைபோற அவசரம் வந்ததாட்டம் கிடுகிடுன்னு பறந்திட்டாருங்கம்மா. பின்னாடியே ஓடிப்போய்க் கூப்பிட்டுப் பார்த்தேன் மனுஷன் திரும்பிக்கூடப் பார்க்காமலே மறைஞ்சிட்டாருங்க!"

ரேவதியின் மார்பில் எறும்பு கடித்தது. சுரீர் என்றது "யார் அவர்?"

"எனக்குத் தெரிஞ்சவர்... உங்களுக்குத் தெரிஞ்சிருக்காது. தாடியும் மீசையும் வச்சிருந்தார். நம்பளைக் கண்டுதானோ என்னவோ, பேய் பிசாசைக் கண்டவராட்டம் அரண்டு மருண்டு ஓடிப் போயிட்டாருங்க..."

"அந்த மனுசன் யாராம்?"

"எனக்குத் தெரிஞ்சவர்னு சொன்னேனே..."

"தெரிஞ்சவர்னா...?"

"எனக்கு அண்ணன்!"

"கூடப் பிறந்த அண்ணனா?"

"கூடப் பிறக்காத அண்ணன்."

ரேவதிக்கு நல்ல மூச்சுத் திரும்பியது. "பேர் என்னவாம்?"

"ஞானசீலன்னு பேருங்க, டாக்டரம்மா."

"ஓகோ..."

நாயர் இடைமறித்தார். "அம்மேக்குச் சாயா போடட்டே? எங்க குழலிக்கும் அந்தச் சேட்டன் மாதிரி சாயாதான் இஷ்டம்."

ரேவதியின் நீலக்கடல் விழிகள் கோலம் போட்ட மாதிரி வியப்பில் விரிந்தன. தேடி வந்த தேனீரை தேட்டமுடன் பருகினாள். இரண்டு சாயாவுக்கும் பைசா கொடுத்தாள். பிறகு தன் காரை அண்டினாள். தேய்பிறை இருட்டிலும் குழலியின் முகம் பளிச்சென்று தெரிந்தது. "நீ எப்ப வேலைக்கு வர்றே?" என்று கேட்டாள்.

"அதை டாக்டரம்மாதான் முடிவு செய்யணும்; அது தான் நியாயம்."

"அப்படின்னா, நீ நாளைக்குக் காலையிலேயே வேலைக்குச் சேர்ந்திடேன். நாளைக்குத் திங்கட்கிழமை. திங்கட்கிழமைன்னா எனக்கு வெகுவாகப் பிடிக்கும்."

"ஓ..." —வாய் கொண்ட மட்டும் சிரித்தாள், பூஞ்சிட்டுக்கன்னி. "எங்கள் அண்ணனுக்கும் திங்கட் கிழமைன்னா ரொம்பவும் இஷ்டம், டாக்டரம்மா.

''அப்படியா?...'' ஆச்சரியக்குறியை ஏந்தினாள் ஏந்திழையாள். ''குழலி! இனிமேல் நீ என்னை 'டாக்டர்'னு வெறுமனே கூப்பிட்டால் போதும்; 'அம்மா' பட்டம் சூட்ட வேணாம்.''

''அதுவும் சரிதான் டாக்டர்!''

''நீ படுசமர்த்து!''

''ஞானசீலன் அண்ணனும் இப்படித்தான் பாராட்டு வார்.''

''அண்ணன், அண்ணன்னு உயிரையே விடுறியே, குழலி!...''

''உண்மைதாங்க... என்னோட அண்ணனுக்காக உயிரை விடவும் சித்தமாய் இருக்கேனுங்க, டாக்டர். அவர்— மிஸ்டர் ஞானசீலன் வெறும் மனுசன் இல்லே. அசலான மனுசன். ஒரு நாளைக்கு அவரை அழைச்சிட்டு வந்து உங்கள் கையிலே அறிமுகப்படுத்தி வைப்பேனுங்க!''

''உன் இஷ்டம் என் பாக்கியம்!''

''எங்கள் டாக்டர் ஜோக்கூட அடிக்கிறாங்களே?''

நெஞ்சின் பாதிப்பு உதடுகளைக் கீறியது. இரத்தம் சொட்டாமலே புன்னகை செய்கிறாள், ரேவதி!

'குழலி சின்னப்பொண்ணு! உலகம் இப்ப தெரியாது. அவர் என்னைச் சந்திக்க ஒப்பவே மாட்டார்; அதே கதை தான் இங்கேயும்; நானும் அவரைச் சந்திக்க ஆசைப்பட மாட்டேன்; இதெல்லாம் குழலிக்கு என்ன தெரியும்...? குழலிக்குத் தெரிஞ்சு இனி என்ன ஆகப் போகுது...? இந்தக் குட்டிக்கு எதொண்ணும் தெரிய வேண்டாம்; தெரியவும் கூடாது!' ரோஷம் நிரம்பிய வைராக்கியத்தின் கால்களிலேயே இப்போதும் நின்றாள், அவள்.

பொய்யாகவும் கனவாகவும் பழங்கதையாகவும் ஆகி விட்ட இறந்தகாலம் இறந்து சுளைசுளையாக பத்து ஆண்டுகள் உருண்டு ஓடிவிடவில்லையா?

இப்போது அவளுக்கு மாற்றம் வேண்டும். நெஞ்சு, சட்டி முனையில் வலித்தது. "குழலி, உன் வீட்டிலே இந்நேரம் உன்னைத் தேடிக்கிட்டு இருப்பாங்கதானே?" என்று பரிவுடன் விசாரித்தாள்.

தனக்குத் தாலி வழங்கிய அந்தத் திங்கட்கிழமை அவளது அடிமனத்தில் கெட்டிமேளம் கொட்டியிருக்கலாம் அப்போது.

குழலி விரக்தியோடும் வேதனையோடும் சிரிக்க முயற்சி செய்தாள். "நாதியற்ற அனாதைங்க அம்மா நான்; தூரத்து அத்தைக் கிழவி ஒருத்திதான் இப்ப எனக்குச் சதம்; அவங்களுக்குப் பார்வை கெட்டுப் போச்சு; அவங்களால என்னைத் தேட முடியாதுங்க டாக்டர்."

"அப்படியானால், ஒரு காரியம் செய்வாயா?"

"நீங்கள் சொல்லோணும்னுதான் நான் காத்துக்கிணு இருக்கேனுங்க."

"நீயும் என் கூட தாம்பரத்துக்கு வந்திடு."

"உங்கள் இஷ்டம் என் பாக்கியம் டாக்டர்!"

"ஆனாலும் உனக்கு இத்தனை குறும்பு உதவாது, குழலி!"

"போங்கம்மா... மன்னிக்கணும்... போங்க, டாக்டர்!"

நேரம் கடந்த நேரத்திலே, ஆள் நடமாட்டம் துளியும் இல்லாமலிருந்த பரங்கிமலைப் பகுதியில் சொகுசுக்கார் ரேவதி இல்லத்தைக் குறிவைத்துப் பறந்து கொண்டிருக்கையில், பின்புறமாகத் துரத்தி வந்த கருப்பு டாக்சி ஒன்று பாய்ந்து வந்து மாருதியைக் குறுக்கே மறித்து நின்றது.

ஆண்மையின் சீற்றத்தோடு வண்டியை நிறுத்தினாள், டாக்டர் ரேவதி. எதிரே நின்ற கருப்பு நிற வாடகைக் காரின் எண்களைக் கண்டதும் அவள் பிரமித்தாள். அன்றொரு நாள் ஞானசீலன் குடிபோதையில் விபத்துக்கு ஆளாகத் தூண்டியதே அதே கருப்பு டாக்சிதான், இது! —சந்தேகம் இல்லை.

வாட்டசாட்டமான முகமூடிக் கொள்ளைக்காரன் ஒருவன் மட்டும் காரிலிருந்து குதித்து வந்து நின்றான். ''டாக்டரம்மா, நீங்கள் கழுத்திலே போட்டிருக்கிறது தாலியானால் எனக்கு வேண்டாம். வெறும் தங்கச் சங்கிலியாக இருந்தால் அதை என்கிட்ட கழற்றிக் கொடுத்திட்டு, மரியாதையாக உங்க மானத்தையும் உசிரையும் காப்பாற்றிக்கிணு மூச்சுக் காட்டாமல் திரும்புங்க!'' என்று கட்டளை பிறப்பித்தான்.

''என் கழுத்திலே கிடக்கிறது வெறும் சங்கிலிதான். அதை உன் கையில கழற்றித் தர மறுத்தால், நீ என்ன செய்வாய்?'' என்று ரோஷத்தோடு சீறினாள், ரேவதி.

''என்ன செய்வேனா?'' என்று கொக்கரித்தவனாக, கைத்துப்பாக்கி ஒன்றை எடுத்து நீட்டினான், அவன்.

# 9. அவள் யார்?

துப்பாக்கியைப் பார்த்துப் பயந்து விடவில்லை, ரேவதி. அவளிடம் இல்லாத துப்பாக்கியா? அதோடு, பயம் என்பதும் அவள் அறியாத ஒன்று. பயந்து பயந்து ஒரு பெண்—அதுவும் தனித்து இருக்கும் சிறு பெண்—இந்த உலகில் எவ்வாறு வாழமுடியும்?

ரேவதி தனக்கே உரிய அகங்காரத்தோடு சிரித்தபடி, "இப்ப உனக்கு என்ன வேணும்?" என்று கேட்டான்.

"நீங்கள் கழுத்தில் போட்டிருக்கிற சங்கிலி வேணும்!"

"அவ்வளவு தானே?"

"ஆமாம்!"

உண்மையிலேயே இவன் முகமூடிக் கொள்ளைக்காரன் தானா? என்று அவளுக்கு ஓர் ஐயம் தோன்றியது. முகமூடிக் கொள்ளைக்காரனுக்கு தங்கச் சங்கிலியும் தாலியும் ஒன்றுதானே?

"நீ யாராக இருந்தால் எனக்கென்ன? ஆனாலும், நீ மிருகமாகி, விலை மதிக்க முடியாத என்னோட கற்பைச் சூறையாட நினைக்காமல் இருந்தவரையிலும், நீ ஒரு மனிதன் தான்! நான் உயிரோடு இருக்கிறவரை, என் சங்கிலியை உன்னாலே பறிச்சுக்கிட முடியாது. எனக்கென்று ஒரு சரித்திரம் வேணும். அதனாலே,

எனக்குச் சொந்தமான உயிரை நானே போக்கிக் கொண்டபின் என் கழுத்துச் சங்கிலியை நீ கழற்றி எடுத்துக் கொள்.''

பேசிக் கொண்டே சட்டென்று அவள் கையில் சுழன்ற கைத் துப்பாக்கியை வெகு லாவகமாகத் திருப்பித் தன் இதயத்துக்கு நேராகக் குறிவைத்தாள் டாக்டர் ரேவதி.

அதற்குள்—

''அம்...மா!''

கெட்ட கனவு கண்டு விழித்துக் கொண்ட குழலி, காரில் இருந்து இறங்கி ஓடோடி வந்தாள். கைத் துப்பாக்கியைப் பதட்டத்தோடு பறித்துக் கொண்டாள். அதை நேர்வசமாகத் தயார் நிலையில் பற்றிப் பிடித்துக் கொண்டே, முகமூடித் திருடனைக் குறிவைத்தாள்.

ரேவதி மலைத்தாள்.

குழலி கர்ச்சனை செய்தாள்: ''ஏய், முத்தையா! உன் வினை இப்ப உன்னைச் சுடுதுதானே? உனக்கு உன் உயிர் மேலே ஆசையிருந்தா, உடனே மரியாதையா ஓடிப்போயிடு. ஞானசீலன் அண்ணன் திரும்பினதும் உன்னோடு பேசிக்கிடுவேன்!''

அடபாவமே! 'முகமூடி' எங்கே ஓடுகிறதாம்? பரிதாபம்!

''அட பாவமே! இந்த முகமூடி ஆசாமி அல்சர் நோயாளி முத்தையன் தானே?...இவனுக்கு வயிற்று வலிக்கு வைத்தியம் செய்ததே நான் தானே!'' என்று அனுதாபம் மேலிடச் சொன்னாள் டாக்டர் ரேவதி.

''அது எனக்குத் தெரியுமுங்க, டாக்டர்'' என்றாள், குழலி.

''உன் ஞானசீலன் அண்ணனுக்கு இந்த முத்தையனைத் தெரியுமா?''

"ஊம்!"

ரேவதி சிந்தனை வசப்பட்டாள்: "ஒரு வேளை, நான் தாலி கட்டிக் கொண்டிருக்கிறேனா இல்லையா என்கிற துப்பை அறிஞ்சுக்கிடவும் அந்த ஞானசீலன் இப்படியொரு மறைமுகமான நாடகத்தை நடத்தியிருக் கலாமோ?"

அவள் தவித்தாள்!

'மிஸ்டர் ஞானசீலன்! நீங்கள் எனக்கு இன்னும் எத்தனை பரீட்சை வைக்கப் போறீங்களாம்?'—கண் முனைகள் கசிகின்றன.

"வா குழலி போகலாம்."

மாருதியின் குழல் ஒலி வீரிட்டது.

'ரேவதி இல்லம்' உறக்கம் கலைந்தது.

விளக்குகள் ஒளி உமிழ்ந்தன.

ரேவதி உள்ளே நுழைந்து, பூந்தோட்டத்தைக் கடந்து, முகப்பு மண்டபத்தை அடைந்து, அகல விரிந்த வரவேற்புக் கூடத்தில் அவளது மெத்தை 'சோபா'வில் சாய்ந்தாள்.

அப்போதுதான் அவளுக்கு மெய்யாகவே நல்ல மூச்சு வந்தது. அப்பொழுது அவள் மனமும், மானமும், மதிப்பும், மரியாதையும் அனுபவித்த ஆனந்தமான அமைதியும் அமைதியான ஆனந்தமும்கூட அவளுக்கு மிகவும் புதிய அனுபவம்தான்!

பின்தொடர்ந்து வந்த குழலியைக் கண்டவுடன், "வாம்மா...வா" என்று வரவேற்புப் படித்தாள். "இங்கே இனிமேல் உனக்குப் பிடித்தமான நாற்காலியில் நீ உட்கார்ந்து கொள்ளலாம்" என்றும் சலுகை வழங் கினாள்.

பத்து இருபது—அது நேரம்.

ஆயா அங்கம்மா வந்து நின்றாள். ''உங்களுக்கும் விருந்தாடிப் பெண்ணுக்கும் இலை போடட்டுங்களா? மத்தியானம்கூட நீங்கள் சாப்பிடலையே?'' என்றாள்.

''சரி, சரி'' என்று சுவையற்றுத் தலையை ஆட்டி விட்டுக் குழலியை நோக்கிப் பார்வையைத் திருப்பினாள், ரேவதி.

''குழலி, நீயும் என் மாதிரி அசைவமாகத்தான் இருக்கணும்; முட்டை ஆம்லெட் பிடிக்கும்தானே?''

அவள் பிடிக்குமென்று சொன்னது இரட்டிப்பான மகிழ்ச்சியைத் தந்திருக்கவேண்டும். ரேவதிக்கு விருப்ப மான சாப்பாட்டில் இதுவும் ஒன்று. ஆயாளுக்கு ஆணை இட்டாள்.

ராவ், நெளியாமல் கொள்ளாமல் வந்து நின்றார்.

''உங்களுக்குத் தாராளமாக எலெக்டிரிக் டிரெயின் கிடைக்கும். அவசரப்படாமல் புறப்பட்டுப் போய்ச் சேருங்க. என் சுயவரம் பற்றிய விவரங்கள், விவகாரங் களைப் பற்றி நாளைக்குக் காலம்பறப் பேசுவேன்'' என்றாள், டாக்டர் ரேவதி.

ராவ் தயங்கி நின்று பேசினார்: ''அம்மா, சரியா அரைமணிக்கு முந்தி மந்தாகினின்னு ஒரு பொண்ணு உங்களை டெலிபோனிலே கூப்பிட்டாங்க. அவசரமா உங்களோடு பேசணுமாம். அந்தப் பொண்ணுக்கு டெலிபோன் கிடையாதாம். மறுபடியும் அவங்களே பேசு வாங்களாம்'' என்றார்.

தொலைபேசி கூவுகிறது!

மந்தாகினியாக இருப்பாளோ? அவளை நினைத்ததும், தலையை வலித்தது. ரேவதி பேசினாள். ''யார் பேசறது?...ஓ...டாக்டர் இந்துமதியா! ஹாய் இந்து, எப்படீடி இருக்கே?...என்ன, லண்டனிலிருந்து ராத்திரி

தான் வந்தியா?...உன் கணவர் சேட்ஜி எப்படி இருக்கார்?...அடடே பாவமே! சேட் உங்களை விலக்கி விட்டு, வேறு ஒருத்தியைக் கட்டிக்கிணாரா?...ஓ...அப்படியா? புதுக் கணவரோடத்தான் வந்திருக்கியா? தேனிலவா? பாரிசிலேயே தேன்நிலவு முடிஞ்சாச்சா? ம்...கட்டாயம் வருவேன். என்னோட அன்புத் தோழி இந்துவை—திருமதி இந்து ராஜ்குமாரை—நாளைக்கு சாயந்தரமே சந்திப்பேன். குட்நைட்!''

நல்லவேளை, மந்தாகினி அழைக்காதவரை தலைவலி மிச்சம். மந்தாகினியைப் பார்த்த நேரம் தொட்டு, மனத்தை தொடுகிற மாதிரி அவள் நடந்து கொள்ளவில்லையே? அவளைப் பார்த்தால், குடும்பப் பாங்கான நல்ல பெண்ணாகவே தெரியவில்லையே? இந்த லட்சணத்தில் ஞானசீலனை இவள் எப்படி அறிந்தாளாம்?

ஒருவேளை, இந்தத் துப்பு குழலிக்குத் தெரிந்திருக்கலாமோ? அண்ணன், அண்ணன் என்று உயிரை விடுகிறாளே, இந்தக் கன்னிப் பெண்!

முட்டையின் மணமான வாசனை மூக்கைத் துளைக்கிறது.

''குழலி, எங்கள் குடும்பத்திலே இனி நீயும் சேர்த்தி. கூச்சம் இல்லாமல் நீ சாப்பிடலாம்'' என்று அன்புடன் ரேவதி கூறினாள்.

''சரிங்க'' என்றாள் குழலி. பேசும் விழிகள் பேசாமலே அமைதியைக் கூட்டின.

சூடான பொன்னி அரிசிச் சோறு.

கத்தரிக்காய் பொறியல்.

புதினா துகையல்.

வற்றல் குழம்பு.

பச்சைக் கொத்தமல்லி ரசம்.

ஆம்லெட்.

கட்டித் தயிர்.

ஆவக்காய் ஊறுகாய்.

பசிக்குப் பசி என்கிற மருந்து மூதுரை குழலி விஷயத்தில் உண்மை ஆயிற்று.

ஈர நெஞ்சில் அன்பான ஆறுதலை வரவு வைத்துக் கொள்கிறாள், ரேவதி.

''அம்மா...!''

''என்னம்மா?...''

''ஏதாவது பேசுங்கம்மா!''

''பேசுறேம்மா; அதுக்கு முன்னாடி நீ கொஞ்சம் பேசணும், குழலி! நீ என்னைப் பத்தித் தெரிஞ்சுகிட்டிருக்கிற மாதிரி, நான் உன்னையும் புரிஞ்சுக்கிட வேண்டாமா?''

''நான் சின்னப் பொண்ணு!''

''நீ ஒரு சின்ன உலகம்!''

''நான் ஏறக்குறைய அனாதை மாதிரிதான்!''

''அதெப்படி? உனக்குத்தான் ஓர் அண்ணன் இருக்கிறதாகச் சொன்னியே, குழலி?''

''ஓ!...ஞானசீலன் அண்ணாவைப் பத்திச் சொல்லுறீங்களா? அவர் மெய்யாவே என் அண்ணன்தான்; கூடப் பிறக்காத அண்ணன். அவரைப் பற்றிச் சொன்னால், கதை கேட்கிற மாதிரிதான் தோணும்!''

''சொல்லேன் கேட்போம்.''

கள்ளங்கபடு இல்லாத அந்தக் கன்னிப் பெண், தெள்ளிய நீரோடை போல, எல்லாவற்றையும் குதூகலத்துடன் சொன்னாள்!

# 10. அவள் அழட்டும்!

ஞானசீலனுக்கும், குழலிக்கும் எப்படி உறவு ஏற்பட்டது?

மூச்சுக்கு மூச்சு — பேச்சுக்குப் பேச்சு "அண்ணா... அண்ணா..." என்கிறாளே, அவ்வளவு பாசம் பொங்க என்ன காரணம்?

குழலியின் உடன்பிறந்தவன் அல்லன், ஞானசீலன். ஆனால், உடன் பிறந்தவனுக்கும் மேலாக அவனை மதிக்கிறாள், குழலி. அதற்கு என்ன காரணம்?

குழலியே அந்தக் கதையைக் கூறினாள்—

"இருபது மாதம் இருக்கும். முன்இரவு நேரம். 'பிசி பிசி'ன்னு மழை தூறிச்சு. ஒரு தோழியைப் பார்த்திட்டு வீட்டுக்குத் திரும்பிக்கிட்டு இருந்தேன். தெருவிலே ஈ, காக்கை இல்லே. பயத்தோட நடந்தேன்.

திடுதிப்னு யாரோ ரவுடி ஒருத்தன் எக்கச்சக்கமான குடிவெறியிலே, என்னை மடக்கி மறிச்சு, என் கையைப் பிடிச்சு இழுத்து, 'ஏ, சின்னப்பொண்ணு! என் பின்னாலே மூச்சுக்காட்டாம ஓடியா. இல்லாட்டி, உன்னை குளோஸ் பண்ணிப்புடுவேன்!'ன்னு மிரட்டினான்.

எனக்குக் கதிகலங்கிப் போச்சு. அலறினாலும் ஆபத்து. 'தெய்வமே!' அப்படின்னு நெஞ்சுக்குள்ளறவே அழுதேன்.

அப்பத்தான் தெய்வமாட்டம் தன்னோட ரோஜா நிறச் செவர்லே காரிலே வந்த ஞானசீலன், பிசாசு மாதிரி வந்த அந்த ரவுடி கையிலேருந்து என் மானத்தையும் உசிரையும் காப்பாற்றினார்!

பார்த்திங்களா, டாக்டர்! — இப்பத்தான் நினைப்பு வருது. கொஞ்ச நாழிகைக்கு முன்னாடி நாம இங்கே திரும்பிக்கிட்டு இருக்கையிலே, உங்களையே ஒரு ரவுடி மடக்கிட்டானே. நான் எந்த மூலையாம்?''

சற்றே ஓய்ந்தாள், குழலி.

பொறிதட்டிப் போனாள், ரேவதி. மேஜையில் கிடந்த கைத்துப்பாக்கி அவள் பார்வையில் சுழன்றது.

''டாக்டர்.''

''குழலி, கதையைத் தொடரப் போறீயா?''

''ஆமாங்க; என் கதைக்கு நாயகன் யார், சொல்லுங்க?''

''ஞானசீலன்! — அந்தப் பெயரை என்னாலே எப்படி மறக்க முடியும்? ஊம்; கதையைச் சொல்லேன், குழலி!''

''மறுபடி சொல்றேன். இது உண்மைக் கதை. சரி, கேளுங்க: வசதிபடைச்ச எங்கள் அண்ணன் ஞானசீலனுக்கு எங்கள் தெருவிலே பெரிய வீடு இருக்குது; ஆனால், சின்ன வீடு எதுவும் இருக்கிறதாகத் தெரியல்லே. ஆனாலும், அவர் வெகு அபூர்வமாகத்தான் அங்கே வருவார். அவர் பம்பாயிலே என்னவோ தொழில் வச்சிருக்காராம். அவர் இங்கே பட்டணத்துக்கு வந்தால், எதையோ மறக்கறதுக் கோசரம் குடியே சதம்னு கிடக்கிறாராம். கெட்ட பொம்பளைங்களின் கெட்ட சவகாசம் இருக்கிறதாவும் அழுகையும் ஆத்திரமுமாகச் சொன்னார். உடலாலே கெட்டவராக இருக்கலாம், எங்கள் அண்ணன். ஆனால், உள்ளத்தாலே அவர் ஒரு நல்ல மனிதனாகத்தான்

இன்னமும் இருந்துக்கிட்டு வர்றாங்க!... என் பேச்சு சத்திய மானதுங்க, டாக்டரம்மா!...'' கொஞ்சம் மூச்சு வாங்கிக் கொண்டாள்.

''ஏன் இப்படி நீங்கள் வீணாகக் கெட்டுப் போகணும்னு ஒரு நாள் உரிமையோட அவரைக் கோவிச்சேன். ஊர் உலகத்தைப்போல ஒரு கலியாணம் காட்சி பண்ணிக்கிணு நாலுபேரைப் போல இருக்கப்படாதான்னு கேட்டேன். அப்பத்தான் ஒரு இரகசியம் தெரிஞ்சுச்சு, எனக்கு!''—பேச்சிற்கு அரைப்புள்ளி வைத்தாள்.

''ஊம், பேசேன், குழலி!''

ரேவதியின் மெய் தடுமாறியது; ஆனால், மெய்—உண்மை தடுமாறுவதில்லையே! உள்ளுணர்வு நிதானமாகத்தான் விழித்திருக்கிறது.

குழலி தனது பேச்சுக்குத் தொடர்பு சேர்த்தாள். ''அண்ணன் ஞானசீலன் சொன்ன சிதம்பர இரகசியம் இதுதான் — அவர், உயிருக்கு உயிராய்க் காதலித்த ஒருத்தியைக் கலியாணம் பண்ணிக்கிட்டாராம். அந்தப் பொண்ணும் அவர் மேலே உயிரையே வச்சிருந்தாளாம். இடையிலே என்னவோ துளியூண்டு தகராறு வந்துச்சாம்; அந்தப் பெண் கணவனின் சொல்லுக்குக் கட்டுப்படாததாலே, இவர் ஆத்திரப்பட்டு, வாயும் வயிறுமாக இருந்த பெண்டாட்டியை எட்டித் தள்ளிப்பிட்டாராம். அந்த அம்மாளுக்குத் 'தான்' என்கிற ஆணவமும் அகங்காரமும் ரொம்ப ரொம்ப அதிகமாம். அதனாலே, அவள் என்னோட அன்பான அண்ணனை விவாகரத்துச் செஞ்சிட்டாளாம். இதனாலே மனசு வெறுத்து, கடல் மாதிரியான பங்களா, புதுசா வாங்கின பிரிமியர் கார் எல்லாத்தையும் விற்றுப்போட்டு, புதுக்கோட்டையை விட்டுட்டு பம்பாய்க்கு ஓடிப் போயிட்டாராம்! பின்னாலே ரொம்ப நாள் கழிச்சு தமிழ் மண்ணோட ஞாபகம் வந்திருக்கும் போலிருக்குது. இப்ப இங்கே வந்திருக்கார். தமிழிலே

ஒரு படம் எடுக்க வேணும்னு ஆசையாம்; கூடிய சீக்கிரத்திலேயே இன்னொரு கல்யாணமும் பண்ணிக்கப் போறாராம்! காதல் ஒரு முறைதானே வரும்னு என்னைக் கேட்டார். எனக்குப் பதில் சொல்லத் தெரியல்லீங்க!... ஆமாங்க!'' — மீண்டும் இடைவேளை விட்டாள், குழலி.

ரேவதி குறுக்கிட்டாள்: ''காதல் ஒருமுறைதான் வரும்!''

''அம்மா!'' என்று அழைத்தாள், குழலி. அவளுக்கு விழிப்பூட்டினாளோ? — தொடர்ந்தாள்: ''அம்மா, உங்கள் தூக்கத்தைக் கெடுத்திட்டேன். தொடங்கிய கதையை முடிச்சிடறதுதான் நியாயம்! அண்ணனோட மூதல் சம்சாரம் யார், என்ன என்கிற விவரத்தை நீங்களும் தெரிஞ்சுக்க ஆசைப்படலாம்; அது நியாயமும் கூட! ஆனால், அந்த விவரத்தை நானும் அவர்கிட்டே கேட்கல்லே; அவரும் அதைப்பற்றிச் சொல்லல்லே!'' குழலி பெருமூச்சு விட்டாள்.

''ஒருவாட்டி, குடி மயக்கத்திலே 'கண்ணே மணியே'ன்னு வசனம் பேசி, என்னமோ ஒரு பெயரைச் சொல்லிச் சொல்லி விம்மினாருங்க; படுக்கையிலே அவர் பக்கத்திலே, அவரோட முகூர்த்தப் படம் ஒண்ணும் கிடந்திச்சுங்க!... அந்தப் படத்தையும் நான் பார்க்க விரும்பலீங்க! — முறிஞ்சு போன ஓர் உன்னதமான உயிர் உறவுக்கு அந்தப் படமே சாட்சியாக அமைய லாயக்கில்லாமல் போயிட்டதுக்கப்புறம், அந்தப் படத்தைப் பார்த்து நான் சாட்சியாக ஆகிறதிலே யாருக்கு என்ன ஆதாயம் வந்திட முடியும்?''

நிறுத்தி, ''எங்கள் ஞானசீல அண்ணா அன்பாலே நல்லவர்; மனிதாபிமானத்திலேயும் மனித நேசத்திலேயும் அன்பானவர்! இல்லாட்டி, என்றைக்கோ தாலி கட்டிக்கிட்ட மனைவி தன்னைத் தூக்கியெறிஞ்சுங்கூட, இன்றைக்கும் அந்தப் பெண்டாட்டிக்காகவும், அவள் பறி

கொடுத்த அவரோட குழந்தைக்காகவும் கண்ணீர் விட்டுக்கிட்டு இருப்பாருங்களா? சொல்லுங்கம்மா!''

குழலி மிகக் கூர்மையாக ரேவதியை ஊடுருவினாள்.

'மெய்தான்!...'' என்றாள், ரேவதி. உயிரின் துடிப்பு அடங்கினால்தானே?

''அப்படின்னா? நீங்களும் என் கட்சிதான்!'' என்று சோகம் இழைந்தோட நகைத்தாள், குழலி. ''அம்மா, தியேட்டரிலே நீங்கள் பேசிக்கிணு இருந்த பொம்பளை கிட்டே ஜாக்கிரதையாக இருக்கிறது நல்லது. அவள் ஒரு சமூக வேசி! அண்ணன் குடிபோதையிலே உளருறதை வச்சுக்கிட்டு உங்களையும் 'ப்ளாக்மெயில்' பண்ணப் பார்ப்பாள்! அப்புறம், வழியிலே உங்களை மடக்கின ரவுடியோட பசியை எத்தனையோ தரம் எங்கள் அண்ணன்காரர் தீர்த்து வச்சிருக்காருங்க! மனிதன் மிருகமாகிறதுக்கு ஒரு நொடி போதாதுங்களா? ஒரு நொடியிலே மிருகமாகி, மறுநொடியில் மனிதனாகவும் ஆகி ஓடிப் போய்ட்டானே, அந்த ரவுடி...''

''என்னோட பாவத்தை கட்டிச் சுமக்காமல் போன வரையிலும் அந்த ஆளுக்குத்தான் லாபம்! இல்லேன்னா, இந்நேரம் நான் செத்த இடத்திலே புல் முளைச்சிருக்காதா?'' என்றாள், ரேவதி.

''நல்லகாலம், ஒரு சமூக நஷ்டத்தையும் தவிர்த்திட்டான், அந்த ரவுடி!''

பிஸ்கட் மணக்கத் தொடங்குகிறது.

தாகசாந்திக்கு இப்போது தண்ணீர்க் கூஜாவால்தான் பதில் சொல்லக்கூடும்.

''அம்மா.''

''தூக்கம் வந்தாச்சாம்மா?''

''தூக்கம் போயாச்சுங்க!''

''அப்புறம்?''

''உங்களோட திருமணத்துக்கு என் அண்ணன் ஞான சீலனை அழைப்பீங்களா? அண்ணனுக்காக என் கையில் ஓர் அழைப்பிதழ் கொடுப்பீங்களா?''

ரேவதியின் நெற்றிப் பொட்டில் சம்மட்டியால் ஓங்கி ஓங்கி அடித்தது யார்? ரேவதி துடித்தாள். விழி வழியே உள்மனம் வெளியே பிதுங்கியது.

''அம்மா, கேட்டேனே?''

''ஓ...கொடுப்பேனே!''

''பலே, பலே...எங்கள் டாக்டர் தங்கம்னா தங்கம் தான்...சொக்கத் தங்கமேதான்!''

கைக்குழந்தைக்கு ஈடுகட்டிக் கள்ளங்கவடு இல்லாமல் வாய் நிரம்ப குதூகலத்தோடு சிரிக்கிறாள் குழலி.

ரேவதியின் உள்ளத்தின் உள்ளம் ஊமைத்தனமாக விம்மியது. ''என்னோட தெய்வக் குழந்தை இந்நேரம் உயிரோடு இருந்திருந்தால், இப்படித்தானே வாய் கொள்ளாமல் சிரிக்கும்? அது செத்ததாலேதானே என் மனம் வெறுத்து, அவரையும் வெறுத்தேன்? அந்த மனிதர் அன்றைக்கு ஆத்திர வெறியோட ஈவிரக்கம் இல்லாமல் வாயும் வயிறுமாக இருந்த என்னைக் கீழே தள்ளி விடாமல் இருந்திருந்தால், அந்தக் குழந்தை பிழைச்சிருக்குமே? ஆண்டவனே! இனி நான் என்ன செய்வேன்...? இப்ப என்னை என்ன செய்யச் சொல்கிறாய்...?''

பொங்கிய ரேவதி மெல்ல எழுந்து சென்று கண்ணீரைக் கழுவிக் கொண்டு வந்தாள்.

''குழலிப் பெண்ணே! உன்னோட வெள்ளைச் சிரிப்பிலே நான் குழந்தைத் தெய்வத்தைக் கண்டேன். ஆகவே, நீ என் குழந்தையாக வந்து எனக்கு ஒரு முத்தம்—ஒரே ஒரு முத்தம் கொடு. நான் உனக்குத் தாயாகி, நானும் உனக்கு முத்தம் கொடுத்திடறேன்...! ஊம்; வா...ஓடி வா, குழலி!'' விம்மினாள் ரேவதி.

பாசம் பரிமாறப்பட்டது.

முத்தங்கள் பரிவர்த்தனை ஆயின.

குழலி இப்போது விம்மினாள்.

"உனக்குத் தூக்கம் வருதா?"

"ஊகூம்; பொழுதுதான் விடியப் போகுதே! இனி மேல் தூக்கம் வந்துதான் என்ன புண்ணியம், அம்மா?"

"அப்படியானால், வீடியோ போடட்டுமா? சங்கராபரணம் பார்க்கலாமா?"

"பார்க்கலாமே."

சொல்லிக் கொண்டே, குழலி தலையைச் சாய்த்தாள். கொட்டாவி வந்தது; தூக்கமும் வந்து விட்டது.

உறக்கத்திலும் கூட, குழலியின் பால்வழிந்த முகத்திலே, அழகு புனிதக்கோலம் ஏந்திச் சிரிக்கிறது!

ரேவதி தாவணியை எடுத்துக் குழலியின் தளிர் மேனியில் போர்த்தினாள். பிறகு சுழலும் நாற்காலியில் சுழலாமல் வந்தமர்ந்தாள். அவளது அந்தரங்க அறையிலே அவள் ஒருத்திதான் சிவராத்திரி விரதம் இருக்கிறாள்!

இப்போது, அவளது மனமும் அந்தரங்கக் கூடமாக மாறுகிறது! அந்தரங்கம் என்றால், இருட்டுத்தானோ? இருட்டின் சிரிப்பிலே, என்னென்னவோ புரியாத ராகங்களின் பின்னணியில், அவள் தனது வேடங்களைக் களைந்து வீசியெறிந்து நிர்வாணக்கோலம் தாங்கியவளாக அவளே இப்போது சிரிக்கத் தொடங்குகிறாள்!

"ஞானசீலன்! இப்போ நீங்கள் யார்...? நான் யார்...? விடுகதையை மறக்காமல் போட்டுக்கிட்டிருக்கிற உங்களுக்கு விடுகதைக்கு உண்டான விடையைச் சொல்லித்தர நினைப்பு வரவேண்டாமா...? சொல்லுங்க, மிஸ்டர் ஞானசீலன், சொல்லுங்க!"

ரேவதி அழுகிறாள்; அழுது கொண்டேயிருக்கிறாள்!

# 11. மனத்தின் குரல்!

விடியலுக்கு விடிமோட்சம்.

ரேவதி நீராடினாள்; நீறு தரித்தாள். புதிய சேலையும் சோளியும் இளகிய மஞ்சள் இழைகளில் பளிச்சிட்டன.

புதிய உணர்வுகளில் புதிதாக உள்ளத்தைப் பெற்று விட்டதைப் போல, மகிழ்ச்சியில் திளைத்தாள். ராகம் புரிந்து விட்டது. சுகமான தேவமனோகரி ராகம் இனிமையாகப் பண் சேர்த்தது. அப்புறம் அவள் பம்பர மாகச் சுழலக் கேட்க வேண்டியதே இல்லை!

குழலியை மனமில்லாமலே எழுப்பினாள். குளிக்கச் செய்தாள். அந்த நாளில் அவளுக்காக எடுத்திருந்த புதுப் பாவாடை, சட்டை, தாவணியை கொடுத்து அணிந்துகொள்ளவும் வைத்தாள். குழலியின் கழுத்தில் அசிங்கமாகத் தொங்குகிற 'கோல்டு கவரிங்' சங்கிலிக்குப் பதிலாக அசல் தங்கத்திலே ஒரு சங்கிலியையும் வாங்கிக் கொடுத்துவிட வேண்டும்!

காலைச் சிற்றுண்டி முடிந்தது.

பூவையர் மணத்தனர்.

''குழலி, இன்றிலிருந்து நீ என் செயலாளர். அதற்கான நியமன உத்தரவு இது; இந்தா!'' என்று சொ[illegible]இ, 'டைப்' செய்யப்பட்டிருந்த ஓர் உறையை நீட்டி[illegible] டாக்டர் ரேவதி.

குழலி பிரித்தாள்.

ரூபாய் நோட்டுகள் சிதறின.

குழலியின் கண்கள் பேசவில்லை; கண்ணீர் பேசியது. ''சுளை சுளையாய் ஆயிரம் ரூபாய் இருக்குதுங்களே, அம்மா!''

''உனக்குச் சம்பளம் ஐநூறு ரூபாய்தான் இப் போதைக்கு என்னாலே தர முடியும். உன் சாப்பாடு, மற்ற செலவுகள் எல்லாமே இனிமேல் என்னோடு நடந்திடும்! இந்தப் பணம் உனக்கு முன்பணம். நீ ஒருத்தியாவது நிம்மதியோட சிரிச்சிக்கிட்டு இருக்க வேணாமா, குழலி?'' என்றாள் ரேவதி.

இப்போது குழலி அழுகிறாள் ஆனந்தமாக!

ரேவதி இல்லம் புதியதோர் உலகம் செய்திடத் தயாராகிக் கொண்டிருந்தது.

இப்போது—

இங்கே—

காலம் சுவரிலேதான் ஓடும்.

மணி: நான்கு, பதினைந்து.

விடியல் பொழுதில் ஏற்பட்ட மனச் சிலிர்ப்பு இப் பொழுது மேனியிலும் பரவத் தொடங்கி, கண்ணாமூச்சி விளையாடி இருளுக்கும் ஒளிக்கும் மத்தியில் அலை பாய்ந்தது.

ஐந்து மணிக்கு இங்கே நடைபெற இருக்கிற நவீன சுயவரத்தில் ரேவதி சுழன்றாள்!

''என் மட்டிலே இன்னிக்கு ஒரு சோதனை நாளாட்டம் தான்; மணமகன் தேவை போட்டிக்காக வந்து சேர்ந்த 68 மனுக்களிலே நான் தேர்ந்தெடுத்த எ[illegible] மாப்பிள்ளைகளும் இந்நேரம் வழியிலே வந்துக் [illegible]க்கலாம். அவங்களிலே ஒருத்தரைத் தேர்ந்தெடுத்

தாக வேண்டிய விதியை எனக்கு நானே ஏற்படுத்திக் கிட்டேன்; எனக்கு நான்தான் விதி! அதனாலேதான், இப்படிச் செஞ்சேன். சோதனையோட நல்லதும் கெட்டதும் எனக்குப் புரிஞ்ச புதிர்தான்! அதுதான் ரேவதியோட ஜாதக சிறப்பு. ரேவதின்னா ரேவதி தான்! அவள் ஒண்ணும் கொக்கு இல்லே!...விதின்னு ஒண்ணு இருந்தால்கூட, அதோட வறட்டு ஜம்பம் என் கிட்டே சாயவே சாயாது! ஈரமான ரோஜாவின் இ... களின் பனித்துளிகள் சிலிர்த்தன.

விரகதாபத்தால் தவித்த பெண் புறா ஒன்று த... இணையை — துணையைக் கூவிக்கூவி அழைத்தபடி விட்டத்தில் வந்து கிறீச்சிட்டது; 'குக்கூ... கூ... கூ!'

ரேவதி ஆச்சரியம் அடைந்தாள். நாணமும் அடைந் திருக்க வேண்டும்.

என்ன அதிசயம்!

பெண் புறா அழைத்ததும், அதோ அந்த ஆண் புறா தன் ஜோடியைத் தேடி ஓடி வந்து விட்டது!

ரேவதி ஏதோ இன்பமயமான கற்பனைகளில் மனம் லயித்தாள்; தன்னையும் மறந்த நிலையில் சங்கிலியின் பதக்கத்தைத் தடவியவளுக்கு 'சுரீர்' என்றது. நெஞ்சை என்னவோ உறுத்தியது.

கண் கொட்டாமல் பதக்கத்தையே பார்வை யிட்டாள். மறுகணம், தேள் கொட்டிவிட்ட மாதி துடித்தாள். பதக்கத்திலே 'அந்தத் தாலி'யை தரிசித்திருப்பாளோ?

டக்... டிக்... டக்!

மணமகன் தேர்வுக்குரிய பேட்டிக்கும் போட்டிக்கும் உரியனவாகப் பொறுக்கப்பட்டிருந்த விண்ணப்பங் களையும் அவற்றோடு இணைக்கப்பட்டிருந்த ...கப் படங்களையும் மேலும் ஒரு முறை பார்வையிட் டாக்டர் ரேவதி.

'இந்த எட்டுப் பேருக்குள்ளே, யாருக்குத்தான் லாட்டரிப் பரிசு கிடைக்கப் போகுறதோ?'— நினைத்துப் பார்த்த மாத்திரத்திலே, அவளது அடி மனத்தில் எக்காளச் சிரிப்பு ஒன்று சீறிச் சிதறியது! 'ஆம்; எல்லா வகையிலும் என் மனதுக்குப் பிடித்தமான ஒருவரை — எனக்கு எல்லா வழியிலும் பொருத்தமான ஒருவரை எனக்குக் கணவராகத் தேர்ந்தெடுப்பேன், நான். அப்படித் தேர்ந்தெடுக்கப்படுகிற அந்த மனிதர் ஊரறிந்த உயர்வு மனப்பண்மையை மதித்தும் போற்றியும் நடக்கத் தெரிந்தவர் என்று நான் நம்பினால்தான், அவர் என் நம்பிக்கைக்குப் பாத்திரமாகி, எனக்கு நாயகனாக ஆகவும் முடியும்!... ஆமாம்; இது என் வாழ்வுப் பிரச்சினை! ஊர் உலகம் பற்றி எனக்குக் கவலை இல்லை! தவிரவும், சுதந்திரப் பறவையான இந்த டாக்டர் ரேவதியின் சொந்த உரிமையாக்கும் இது! இந்த உரிமைக்கு, உயிரால் உறவு சொல்லத் தெரிந்த — உறவு காட்டத் துணிந்த— அசலான மனிதர் ஒருவர் கிடைத்தால்தான் எனக்குப் புது வாழ்க்கை கிடைக்கும். இதுவேதான் சத்தியமான, தர்மமான, உண்மையான என் முடிவு ஆகும். ஏன் தெரியுமா? — எனக்கு நான் தான்விதி!... அந்த விதிதான் டாக்டர் ரேவதி! டாக்டர் ரேவதி ஒன்றும் கொக்கு இல்லை!... அவள், ஆமாம், நான் விதியின் நாயகியாக்கும்! — என்னென்னவோ நினைவுகள், இனம் புரிந்தும், இனம் புரியாமலும் — என்னென்னவோ ராகங்களில் கொட்டி முழங்கின.

ஜோடிப் புறாக்கள் இருட்டிலே வெளிச்சத்தை அனுபவிக்கப் புறப்படுகின்றன போலும்!

அவள் நாணம் பூத்தாள்: நாணத்தின் மென்மையான சுகத்தோடு, அந்த முதல் இரவை நினைவு கூர்ந்தாள்: 'ரேவதி! நீ என்னோட நேசமான, பாசமான, அன்பான மனைவி என்பதை விடவும், என்னோட முதல் மரியாதை அளிச்சு அங்கீகரிச்சு ஏற்றுக்

...ளிச் உன்னதமான ஒரு மாயத் தேவதை நீ என்கிறது தான் பொருத்தமான சங்கதி...! அதனாலே, மெய்யாலே பரிசுத்தமான என் நெஞ்சிலே இன்றைக்கு மட்டுமல்ல, என்றைக்குமே நீ ஒருத்தியேதான் எனக்கு அன்புத் துணைவியாகவும், அருமைத் தேவதையாகவும் சத்திய மாகக் கொண்டு இருக்க முடியும்!...''—நெஞ்சத்திலே அளவிட்டுச் சொல்ல முடியாத நேசம் வழிந்தோட, கண்களிலே அளவு கட்டிச் சொல்லும் படியான கண்ணீர் பெருகி வழிய,

சாந்தி முகூர்த்த ராத்திரியில் சத்தியம் செய்த ஞான சீலனின் அன்பான பேச்சு தர்மத்தின் குரலாகவு சத்தியத்தின் ஆணையாகவும் அவளது பெண் மனத்தி மீண்டும் ஒலித்திருக்க வேண்டும். ''தெய்வமே! இப் நான் என் செய்வேன்?'' அலறினாள் அவள். ''மிஸ் ஞானசீலனோட சத்தியப் பேச்சை இவ்வளவு காலடு நான் எப்படி மறந்தேன்?... ஆத்தாளே கருமா உண்மையாகவே நான் பாவி ஆகிவிட்டேன் ஐயையோ!... தெய்வமே... என் தெய்வமே!'' — கத னாள், அவள். அவள்: சாட்சாத் ரேவதி — டாக்டர் ரேவதி!

எங்கேயோ, சொறி நாய் ஒன்று ஊளையிடுகிறது.

அவளுக்கு நெஞ்சு வலித்தது. மேஜை டிராயரை இழுத்தாள். மாத்திரைகளைத் தேடினாள். ஆனால், கைகளில் ஏதோ காகிதங்கள்தாம் சிக்கின. எடுத்தாள். மணமகன் போட்டியில் பங்குபெற வந்த சிதம்பரத்தின் மனு அது.

கட்டின மனைவி கோயில் கல்லாக இருக்க, இது என்ன விளையாட்டு? அன்றைக்கே இம்மனுவை நிராகரித்து விட்டாள். இன்னொன்று வயிற்றுவலி முத்தையனுடையது. மூற்றது, கிழ... க்கட்டை ஓ...றுக்குச் சொந்தம்! — சே! ஆ...ம் க...த்துப் பயிரான

புனிதமான திருமணம்கூட வெறும் கிள்ளுக்கீதோன் ஆகிவிட்டதா?

அவள் கேட்ட கேள்வியே அவளை மடக்கிப் போட்டுச் சுட்டது; சுட்டெரித்தது. திண்டாடினாள்; திக்குமுக்காடினாள். அன்றைக்கு ஏற்பட்ட தாம்பத்தியப் பிணக்கு விபரீதம் ஆகிவிட்டது. மனம் இருந்திருந்தால் அந்த ஊடல் அந்நியோந்நியமான கூடலிலே சுபம் கண்டிருக்க முடியாதா? அதற்கு விவாக ரத்துதான் தலையெழுத்தாக அமைய வேண்டுமா?

ஞானசீலன் பேரிலேதான் தப்பு. அந்தத் தப்பை ்மன்னித்திருக்க முடியாதா, என்ன? எங்கோ தொடங்கிய ்தை எங்கோ முடிந்தது.

காகிதங்களை வேண்டா வெறுப்போடு குப்பைக் ்டையில் வீசி எறிந்தாள். மாத்திரைகளை எடுத்தாள். ்டுத்த மாத்திரைகளையும் மேஜைக்கு அடியிலேயே ்த்திரத்தோடு போட்டுவிட்டு, அலங்கோலமாக ்ழுந்தாள்.

வலி மிஞ்சியது. வலிக்கட்டுமே! உயிர் போய்விடுமா, ்என்ன? அவமானம் மிஞ்சியதுதான் மிச்சம்!

அந்தரங்கக் கூடம் கைதட்டி அழைக்கிறது. ஒரு வேளை அது கைகொட்டி அழைத்திருக்கலாமோ?

கூடத்தில் பல வகை அழகுகளும் பல வழிகளில் சொல்லிச் சொல்லி வழிந்தன. நவீன காதல் சுயம்வரம் நடக்கவிருக்கும் மண்டபமென்றால், அங்கே நவநாகரிகம் கண்சிமிட்டிக் களிநடனம் புரியவேண்டாமா?

ரேவதிக்கு உயிர்த் தீ பற்றி எரிகிறது.

பானங்கள் சிதறின.

நாற்காலிகள் முட்டி மோதிக் கொண்டு புரள்கின்றன.

மார்பில் ஊசலாடிய பதக்கத்தையும் சேர்த்து அழுத்திப் ப ்ந்தாள், ரேவதி. காம்பு முனைசுகில்

எரிச்சல் மூண்டிருக்கலாம். அவள் ஆகாயத்திலே மிதந்தாளோ?... சுயம்வரமாம்... போட்டியாம்... சே! நடந்தாள். இரகசியமான பீரோவை வெட்ட வெளிச்சத்தில் திறந்தாள்.

அதோ அந்தத் திருமணப் படம்!

ஞானசீலனும் ரேவதியும் மாலையும் கழுத்துமாக புன்னகையும் புது நிலவுமாக எத்துணை கம்பீரமான தூய்மையுடன் தரிசனம் தருகிறார்கள்.

அது... அது... திருமாங்கல்யம்!

ரேவதி சிலையானாள். சிலையென்றால், சாமானியச் சிலையா? — மோகினிச் சிலை அல்லவா! தீயிலே கால்கள் இடறி விழுந்துவிட்ட பாவனையில், உயிர்துடித்தாள்: உடல் துவண்டாள். மனச்சாட்சி தீ மூட்டிய புண்ணிய நெருப்பிலே அவள் உயிர் திரிகரண சுத்தியோடு அக்கினி பிரவேசம் செய்ததோ என்னவோ?

படிக்கட்டில் காலடி ஓசை.

செல்வி குழலி நம்பகமான நல்ல தகவல்களோடு சீக்கிரத்தில் திரும்பிவிட மாட்டாளா?

ரேவதி ஏங்கினாள்; தவித்தாள். உருகினாள்.

'மணமகன் தேர்வுக்காக அஞ்சு மணிக்கு நடக்கவிருக்கிற இன்டர்வ்யூ இப்ப எனக்கு அவசியம் இல்லையே! தேவையும் கிடையாது!... அதை நான் கான்ஸல் செஞ்சிடப் போறேன்!... இப்ப முதலும் முடிவுமாக எனக்குத் தேவைப்படுவது ஒண்ணே ஒண்ணுதான்! — இன்றைக்கு மிஸ்டர் ஞானசீலனின் உண்மையான நிலை என்ன, நிலவரம் என்ன? இந்த விவரம் எனக்குத் தெரிஞ்சால் போதும்; மற்றதை நான் பார்த்துக்குவேன்! — நான் டாக்டர் ரேவதியாக்கும்!' — மனத்தில் ஏற்பட்ட அழுத்தம், ஏற்படுத்திய ஆற்றாமையில் அவள் தளர்ந்திருக்கலாம்.

யார்?

"அம்மா, நான்தான் அங்கம்மா!"

"நான் உன்னைக் கூப்பிட்டேனா?"

"இல்லீங்களே! ராவ் ஐயாதான் அனுப்பிச்சு வச்சாருங்க. உங்கள் கல்யாணப் பேட்டிக்காகப் பெரிய பெரிய ஐயாமாருங்களெல்லாம் கச்சிதமா வந்து சேர்ந்திட்டாங்களாம்! சொல்லிட்டு வந்திடச் சொன்னாங்கம்மா!"

"நான் இப்போ யாரையுமே பார்க்கப் போறது கிடையாது; நீ போகலாம்!"

மறுபடி சத்தம்...

"யார்? — குழலியா?"

"அம்மா, நான்தான் ராவ்."

"என்னவாம்?"

"வந்துங்க..."

"அதான் வந்திட்டீங்களே!..."

"நீங்கள் நடத்தப் போற பேட்டிக்கு மணி அஞ்சாகி யும் பொறுமையோட காத்துக்கிணுதான் இருந்தாங்க அந்த எட்டுப் பேரும்! அந்நேரத்திலே, சிதம்பரம் வந்து, அவங்களோட காதிலே என்னமோ இரகசியத்தை ஓதினார். என்னவோ 'எச்சில் பழம், எச்சில் பழம்' என்கிற வார்த்தைங்க மட்டிலுந்தான் எனக்குக் கேட்டிச்சு. அவ்வளவுதான்; வந்தவங்க அத்தனை பேரும் பேய்-பிசாசைக் கண்டதாட்டம் விழுந்தடிச்சிட்டு ஓடிப் போயிட்டாங்களே, அம்மா. இப்ப நான் என்ன செய்யட்டும்?"

அஞ்சி ஒடுங்கினார், ராவ்.

"நீங்கள் ஒண்ணும் செய்ய வேண்டியதில்லே. பழம் நழுவிப் பாலிலே விழுந்தாச்சு; அதுபோதும் எனக்கு! சரி; இந்தாங்க, உங்களுக்குச் சேரவேண்டிய சம்பளப் பணம்! ராவ், இனி நீங்கள் நேரா உங்க வீட்டுக்கே புறப்பட்டுடலாம்... சீக்கிரம் புறப்படுங்க... குட் பை!"

## 12. ஒன்று... இரண்டு...

வெள்ளம் தலைக்கு மேலே போய்விட்டாலும்கூட, எதிர்நீச்சல் போடத் தெரிந்தால் தப்பி விடுவதும், தப்பிப் பிழைத்து விடுவதும் அப்படியொன்றும் கம்பச் சித்திரம் அல்லதான்!

இப்போது—

ரேவதி மகிழ்ச்சியாகவும் அமைதியாகவும் காணப் பட்டாள். எந்தச் சோதனையையும் எதிர்கொண்டு சமாளித்து வெற்றி கொள்ளும் நெஞ்சுரத்தை மீட்டுக் கொண்டவளாக, அவள் தனக்குத்தானே புன்னகை செய்து கொண்டாள். நிர்மலமான நயனங்களில் புதிய ஒளி பளிச்சிட்டது. ஒளி வெள்ளத்தில் மிதந்து கொண் டிருந்த அந்த ஓவியத்தை ஓவியப் பாவையாக நின்று பார்த்தாள்.

''ஆண்டவன் உன்னை நேசிக்கிறான்!''

''மெய்தான்; ஆண்டவன் என்னை நேசிக்கவே செய் வான்; நிரபராதியான என்னை நேசிக்காமல் எப்படி இருப்பான் ஆண்டவன்? மிஸ்டர் ஞானசீலன்தான் குற்ற வாளி. என்னோட வயிற்றிலே வளர்ந்த குழந்தை வயிற் றிலேயே செத்து மடிஞ்சதுக்குக் காரணமாக அமைஞ் சிட்ட அவரேதான் குற்றவாளி; அவர் பாவி!

அவரோட பாவத்துக்கு என்றைக்காகிலும் ஒரு நாள் என்கிட்டே பாவ மன்னிப்புக் கேட்டால்தான் அவர்

உண்மையிலேயே மனிதனாகத் தலைநிமிர்ந்து நிற்க முடியும்; அப்பத்தான், நானும் சமாதானம் அடைஞ்சு, தலையை நிமிர்த்தி நடக்க முடியும்!

இப்படி மட்டும் நடந்துவிட்டால், பிரச்சினையிலே செம்பாதி தீர்ந்த மாதிரிதான்!

முதல் இரவிலே அவர் என் கையிலே செஞ்சு தந்த சத்தியத்தின்படி, அவரோட நெஞ்சிலே என்றைக்குமே நான் ஒருத்திதான் குடியிருப்பேன்னு அவர் அன்றைக்குச் சொன்னது இன்றைக்கும் சத்தியமான சொல்லாக இருந்தால், அவர்கிட்டவே என்னை இரண்டாந் தடவையாகவும் ஒப்படைச்சிடுறதிலே, என்வரையிலும் எந்தப் பிரச்சினையும் ஏற்படவே ஏற்படாது!...''

ரேவதி நிம்மதியான நெடுமூச்சை நெட்டித் தள்ளினாள். மஞ்சள் நீராடிய மன உணர்வுகள் புல்லரித்தன!

இப்போதும்கூட, அவளது உயர்வு மனப்பான்மை அவளது மனப்போக்கிலேயே நெறிமுறையுடன் கொடி கட்டிப் பறக்கத் தவறவில்லை.

இசைப்பாடல் காற்றிலே மிதக்கிறது.

வானொலியில் தியாகய்யரின் ''வந்தனமு ரகுநந்தனா'' கீர்த்தனை சகானா ராகத்தில் மணம் கூட்டுகிறது....!ரேவதிக்கு ராகம் புரிகிறது.

சுமை இறங்க வேண்டாமோ?

ரேவதிக்குத் தேவை; மாறுதல்—ஆறுதல்.

'ராயல் சாலஞ்ச்' துணை வருகிறது.

அவள் நகை சிந்தினாள்; சரணாகதியான நகைப்பாக இருக்கக்கூடும் அது. அடங்காத ஆசையை அடக்கமாட்டாமல், நெடிதுயர்ந்த முக்காலியை நெருங்கினாள். பவ்யமான பாவனை. பாவனையில், அவள் விரும்பாத பணிவு, அவளது விருப்பம் இல்லாமலே மிகுந்திருந்தது.

இப்போது அவள் எதையும் நினைக்கவோ அல்லது எதையும் மறைக்கவோ தயாராக இல்லை. அவள் ஒரு வினாடியாகிலும், தன்னை மறந்திருக்க எண்ணினாள். நேர்மையாக நினைத்தால், நினைத்தது நியாயமாக கைகூடுமாமே?

ஆத்திரத்துக்கும் அவசரத்துக்கும் சவால் விட்டபடி, மதுவில் ஒருவாய் பருகினாள். கனி இதழ்களில் நெருப்புக் கனி வெடிக்க, இதழ்கள் ரத்தச் சிகப்பு ஆயின.

தட்டினால், திறக்கப்படுவது கதவு.

''ஆய் குழலி...மை டியர் மோஸ்ட் குழலி! போன காரியம் பழம்தானேம்மா?''

''செங்காயும் செம்பழமுமான ஒரு நிலைமைங்க, டாக்டர். அண்ணன் பம்பாயிலேயிருந்து இன்னம் திரும்பக் காணோமே.''

''மிஸ்டர் ஞானசீலனைப் பற்றித்தானே சொல்றே?''

''பின்னே என்னாங்க?''

''பம்பாய் போய் ஏழு நாளாச்சுன்னு சொன்னாயே?''

''ஆமாங்க; சொன்னேன். அங்கே தொழில் முறையிலே என்ன சிக்கலோ, என்ன சங்கடமோ?''

''மற்றப்படி அவருக்கு சொந்த வேலை ஒன்றும் இருக்காதே.''

''நீங்கள் நினைச்சுக் குழம்புறது கணக்கிலே, அண்ணன் அங்கே தன்னோட திருமணம் எதையும் என் கிட்டே சொல்லாமல் செஞ்சிடமாட்டார்! ஒரு விஷயம் நிச்சயம்; அவர் எந்த நேரத்திலேயும் இங்கே சென்னைக்குத் திரும்பிடலாமுங்க!''

''மகிழ்ச்சி.''

''அண்ணன் பேரிலே இவ்வளவு தொலைவுக்கு அக்கறை காட்டுறீங்களே, எங்கள் அண்ணாவை உங்க

ளுக்கு ஏற்கெனவே பழக்கம் உண்டுங்களா, அம்மா?'' மெல்லக் கேட்டாள், குழலி.

''பழக்கம் இல்லாமல் என்ன?'' மனப்பழக்கம், ஒப்புதல் வாக்குமூலம் வழங்கியது. பூவிரல்களில் பூச்சிதறலாக ஈரம் சொட்டவே, திடுக்கிட்டாள் ரேவதி.

''அ...ம்...மா!''

''அம்மா!...மிஸ்டர் ஞானசீலனை பத்தே பத்து விநாடி தனிமையிலே சந்திச்சுப் பேசிட்டா, நான் என் சொந்த மனப்போக்குப் பிரகாரம் ஒரு முடிவுக்கு வர உதவியாக இருக்கும்; அதுக்காகத்தான் அவசரப்படுகிறேன், குழலி!''

''அம்மா...''

''என்ன குழலி?''

''அழறீங்களா?''

''அழறேனா? இல்லையம்மா!'' என்றாள் ரேவதி. அவள் சொற்கள் தடுமாறின. ஆனால், ஆடிப்புனலாக ஓடிய சுடுநீர்க் கண்ணீர் மாத்திரம் தடுமாறவில்லை.

குழலியின் விழிகளும் தளும்பத் தொடங்கின. ''அம்மா! நான் உங்க உப்பைத் தின்னத் தொடங்கிட்டேன். சின்னூண்டு பொண்ணுதான் நான். ஆனாலும், நீங்கள் என்னை நம்பவேணும். அண்ணன்கிட்டே ஆயிரம் குற்றம் குறை இருக்கலாம். ஆனால், எல்லாத்தையும் தாண்டி, இன்னமும் ஒரு மனிதனாக இருக்காருங்க, எங்கள் ஞானசீலன் அண்ணன்! அவர் மறு கல்யாணம் செஞ்சுக்கிறதா இருந்தா, அவரோட அன்பான நெஞ்சிலே நிரந்தரமாகக் கொலு இருக்கிற உங்களை விட்டுட்டு, வேறு ஒருத்தியை ஏறெடுத்தும் பார்க்கவே மாட்டாருங்கம்மா! உங்களோட இன்பக் கனவுப் பிரகாரமே, உங்களை என் அண்ணனோடு மறுபடியும் நல்லபடியாய்ச் சேர்த்து வச்சுப்பிட வேண்டியது என்

கண்ணியமான கடமையாக்கும். நான் உங்கள் குழலிப் பொண்ணுங்க; என்னை நல்ல மனசோட நம்புங்க, அம்மா!'' விம்மினாள் குழலி.

ரேவதி, தன்னைச் சீர்செய்து சமாளித்துக் கொண்டு, இதழ்க் கடையில் புன்முறுவலைக் கடைவிரிக்க முயற்சி செய்கிறாள். ''குழலி, எங்களோட வாழ்க்கையின் கதை காரணமெல்லாம் உனக்கும் நல்லாவே தெரிஞ்சிருக்குது. ரொம்ப மகிழ்ச்சிதான். இதுவுங்கூட, நான் எதிர் பார்த்திராத 'சஸ்பென்ஸ்' ஒண்ணும் கிடையாதுதான்! சரிசரி, இப்ப நீ சீக்கிரமாகக் கீழே போய்விடு. தேவைப் பட்டால், கூப்பிட்டுக் கிடுவேன்!...''

ஆணை தூள் பறந்தது.

குழலி கொடி மின்னல் ஆனாள்.

ரேவதி, 'படீ'ரென்று கதவுகளை ஆத்திரமாக அடைத்தாள்.

**தொ**லைக்காட்சியில் இரவு நேரச் செய்திகள் வாசிக்கப்பட்டன.

ஆனால்—

வாசிக்கப்பட்ட உலகத்தின் செய்திகளைக் கேட்கத் தான் அங்கே நாதி இல்லை!

ரேவதி—டாக்டர் ரேவதி அழுது கொண்டுதான் இருக்கிறாள்—இன்னமும். அவளது உள்மனம் வாசித்துக் கொண்டிருந்த செய்திகளைக் கேட்கத்தான் அவளுக்குப் பொழுது சரியாகிவிட்டது.

அந்தரங்க அறை, அது.

ரேவதிக்குச் சொந்தபந்தம் கொண்ட கூடமும் அது தான்.

அங்கே, ஒளி வெள்ளம் பொங்கி வழிகிறது.

ஆனாலும், ரேவதி இருட்டிலே தவித்தாள்; தடுமாறினாள்! ‘‘எனக்குச் சம்பந்தப்பட்ட என் பிரச்சினைக் கதை என்னிடம் வேலைக்கு இருக்கிற குழலிக் குட்டிக்கும் ஏனோ, எப்படியோ தெரிஞ்சி போயிடுச்சுதே? வாழ்க்கையிலே எல்லா நிலைகளிலும் நானே உசத்தியாக நின்னு முன்னுரிமை பெற்று விளங்கவேணும் என்கிற இலட்சியத்துக்காகப் போராடி, மானம், மரியாதைக்காக அல்லும் பகலும் பாடுபட்டுக் கிட்டிருந்த எனக்குக் கடைசியிலே கிடைச்சிருக்கிற வெகுமதி இப்படிப்பட்ட அவமானம் தானா?

கருமாரித்தாயே? என்னைச் சோதிச்சது போதாதா? எனக்கு உண்டான ஒரு நல்ல பாதையை இனியாச்சும் திறந்து விடமாட்டியா?...கல்லான உன்னாலே எப்படிப் பேச முடியும்? எனக்கு நானே விதியாகிப் போன பின்னே, என்னோட வழிதானே இனிமேல் எனக்குச் சதம்?’’

விம்மல் தொடர்ந்தது. போதை தெளிந்த போதத்தோடு நிதானமாக இதயத்தைத் தேடிப்பிடித்துப் பலம் கொண்ட மட்டும் பிசைந்து கொண்டாள்.

‘‘எல்லா வலியும் நாலைந்து வினாடிகளில் தீர்ந்து போய்விடும்!’’—பாய்ந்தாள், தடுமாறி வீழ்ந்தாள்; எழுந்தாள்; மண்ணைக் கவ்வ நேர்ந்த தோல்வி வெறியில் மறுபடி எதிரே பாய்ந்தாள்.

கைத்துப்பாக்கி நையாண்டித்தனமாகச் சிரிக்கிறது!

எப்படியோ அதை அழுத்திப் பிடித்து கைப்பிடிக்குள் அடக்கிக் கொண்டாள், ரேவதி. திரும்பவும் நப்பாசை. திரும்பிப் பார்க்கவே, மேசையிடம் கையேந்தினாள். பிச்சை கிடைத்திருக்க வேண்டும்.

அந்தத் திருமணப் புகைப்படமும் அந்தத் திருமணத் தாலியும் இப்போது அவளைக் கண்டு கைகொட்டிச் சிரித்தன போலும்!

அவளுக்கு மட்டும் பதிலுக்குப் பதில் சிரிக்கத் தெரி யாதா? அவள் ரேவதி—டாக்டர் ரேவதி ஆயிற்றே!

''மிஸ்டர் ஞானசீலன்! கடைசியாகச் சொல்லி வைக் கிறேன். நம்ம ரெண்டு பேரிலே, நான்தான் நிரபராதி!... எதார்த்தமும் அதுவேதான்! ... சுத்தமான உங்கள் நெஞ்சிலே நான் ஒருத்திதான் நிரந்தரமா கொலு இருப் பேன்னு அன்னிக்கு ராத்திரி என் கையிலே நீங்கள் செஞ்சு தந்த சத்தியத்தை உங்க வாழ்க்கையின் கடைசி நாள் மட்டுக்கும் நீங்கள் நிறைவேற்றினால்தான், சத்தியமாக என்னோட ஆத்மா சாந்தி அடையுமுங்க, அத்தான்! ஆமாங்க, மிஸ்டர் ஞானசீலன்!''

அவளுக்கு இனி அழவேண்டிய அவசியம் கிடையாது தான்!

கைத்துப்பாக்கியைக் கைப்பிடியில் வசம்பார்த்து, சரி பார்த்து இடுக்கிக் கொண்டே, தன் நெஞ்சுக்கு நேராகக் குறி வைத்துத் திரும்பியவளாக, அரைக்கணம் கண்களை மூடிக்கொண்டாள். அவள் உதடுகள் எண்ணத் தொடங்கின.

ஒன்று...

இரண்டு...

# 13. வந்தார் மாப்பிள்ளை!

ரேவதிக்கு நெஞ்சுறுதி மட்டுமல்லாமல், உடல் உறுதியும் நிறையவே இருந்தது. அவள் கை எவ்வளவு வலுவாக அந்தத் துப்பாக்கியைப் பிடித்து இருக்கிறது!

அவளைப் பார்ப்பவர்கள் அவ்வளவு உறுதி படைத்தவளாக அவளைச் சொல்ல மாட்டார்கள். அவளுக்குக் கொடிபோன்ற உடல். பச்சை மூங்கில் போன்ற கைகள், வெண்டைக்காய் விரல்கள்.

வீணை மீட்ட வேண்டிய அந்த விரல்கள், எவ்வளவு வலுவாகத் துப்பாக்கியைப் பிடித்து இருக்கின்றன. இதைத்தான் குரங்குப் பிடி என்பதோ!

ஆனாலும், அவ்வளவு நெஞ்சு உரம் அதிகம்தான். இல்லாவிட்டால் இப்படித் துப்பாக்கியை எடுப்பாளா? அதை நெஞ்சுக்கு நேராக நீட்டிக் கொள்வாளா? அவளது செவ்விதழ்கள் ''ஒன்று... இரண்டு...'' என்று அர்ச்சனை பண்ணத்தான் செய்யுமா?

ஒன்றுதான் பாக்கி. ''மூன்று...'' என்று எண்ணி விட்டால் அவள் கதை முடிந்து விடும்!

தான் தான் அகம்பாவம் பிடிப்பவர்களின் இறுதிக் குரலே அதுதானே! அதிலும் ஆணவம் — அகங்காரம் பிடித்த பெண்களின் முடிவு இதுதான் என்று வரலாறு காட்டுகிறதே! அதிலும் அந்தக் காலத்து கிளியோபாட் ராவில் இருந்து, இந்தக் காலத்து மர்லின் மன்றோ வரை

அத்தனை ஆணவக்காரிகளும் கடைசியில் இப்படித்தானே செத்தார்கள்!

''மூ...''

உதடுகள் உச்சரிக்கத் தொடங்கின.

விரல்கள் துப்பாக்கியின் விசையை அழுத்தத் தயாராக...

இன்னும் கண் இமைக்கும் நேரங்கூட இல்லை!

''டுமீல்!''

ஒரு குண்டு வெடித்தால் போதும்!

தனக்கு நிகரில்லை என்று தலைநிமிர்ந்து வாழ்ந்த ரேவதி, தரையிலே விழுந்து கிடப்பாள், வேர் அறுந்த மரம் போல!

அவளை மலர்ந்த ரோஜாவாக மணம் வீசச் செய்து கொண்டு இருந்த சிவந்த இரத்தம், சீறிப்பாய்ந்து வெளியில் சிதறும்!

பஞ்சு மெத்தையில் படுத்துப் பழக்கப்பட்டவள் செஞ்சாந்து போன்ற இரத்தத்தில் மிதந்து கொண்டு இருப்பாள்.

நாள் முழுக்க துடிதுடிப்பாகச் சுழன்று கொண்டு இருந்த அவள், துடிப்பு அடங்கி, துள்ளல் ஒடுங்கி, துடுக்கு ஓய்ந்து, துரும்பு போல விழுந்து கிடப்பாள்.

ஆனால்,

கண் இமைக்கும் அந்தச் சின்னஞ்சிறு நேரத்துக்குள்—

கதவுகள் தட்டப்பட்ட ஓசை வானத்தைப் பிளந்தது!

''யாராம்?'' — ஓங்காரக் குரலெடுத்து ஓலமிட்டாள், ரேவதி.

மறு இமைப்பில் நிலைப்படியிலே எதிரொலித்த அந்தக் குரலைக் கேட்டதும், ''ஆ நீங்களா'' என்று மெய்மறந்து மகிழ்ச்சிப் பெருக்கில் கூவினாள்.

துப்பாக்கியை எறிந்தபடி ஓடினாள். வேகமாகவே ஓடினாள்.

கதவுகள் திறக்கின்றன.

ரேவதியின் கண்களும் திறக்கின்றன.

ஞானசீலன் நின்றார்!

"வாங்க... வாங்க!"

"ஊம்... ம்...ம்!"

அசலான மாப்பிள்ளையாகவே நின்றார், ஞானசீலன்.

"உள்ளே வாங்க..."

"உம்... உம்..."

"நல்லா இருக்கீங்களா?"

"உங்கள் புண்ணியத்தாலே நான் நல்லா இருக்கேன், நீங்களும் நல்லா இருக்கீங்க தானே?"

"ஓ! உங்கள் புண்ணியத்திலே, நானும் நல்லாவே இருக்கேன்!"

"கருமாரிதான் உங்களை அனுப்பி வைச்சாளா?"

"எங்கள் குழலி என்னை அனுப்பி வைச்சுது!"

"அப்படிங்களா?"

"அப்படித்தாங்க!"

"உட்காருங்க..."

"உட்காரலாமா?"

"ஏன் இப்படிக் கேட்கிறீங்க?"

"கேட்டது தப்புங்களா, அம்மணி?"

"தப்பு இல்லீங்களா, அய்யா?"

"மன்னிக்க வேண்டும். தவறு என் பேரிலே இருந்தா, என்னை மன்னிச்சிடுங்க!"

மனிதர் மாறி விட்டாரே...

''பரவாயில்லை. நீங்கள் உட்காருறீங்க!''

''மிகவும் நன்றி.''

ஞானசீலன் உண்மையின் பிரதிநிதியாகவும் ஒழுக்கத்தின் சாட்சியாகவும் கம்பீரமான மிடுக்கோடு சோபாவில் அமர்ந்தான். 'சபாரி' உடுப்புகள் அவனது அழகுக்கு அழகு சேர்த்தன. புதிதாக முளைத்திருந்த இளையமீசை புதுக் கருக்கோடு பொலிந்தது.

மீனாட்சிக் குங்குமத்திலே, ஆச்சரியக்குறி வியந்தது.

''நீங்கள் வந்த விஷயத்தை இன்னும் சொல்லவே இல்லீங்களே.'' ரேவதி ஓரக்கண்ணால் பேசினாள்.

''அதை இதுவரையிலும் நீங்கள் கேட்கவே இல்லீங்களே?''

ரேவதிக்கு இன்னம்கூட நெஞ்சழுத்தம் குறைந்ததாகத் தோன்றக் காணோமே!...

''சரி; சொல்லுங்க.''

''நீங்கள் பத்திரிகையில் கொடுத்திருந்த 'மணமகன் தேவை' விளம்பரம் பார்த்தேன். அது தொடர்பாகத்தான் உங்களை நேரில் காண இப்ப நான் இங்கே வந்திருக்கேன், செல்வி ரேவதி.''

''ஓ! அப்படியா!'' ரேவதிக்கு சின்ன ஏமாற்றம். சிறிது நேரத்தில் எவ்வளவு பெரிதாக ஏமாந்து விட்டோம் என்று முகத்தைச் சுழித்தாள்.

''ஆமாம் அம்மணி.''

''அந்த விளம்பரம் உங்களையும் விட்டு வைக்கலே போலிருக்கு!''

''என்னை விட்டுத்தான் வச்சிருந்துச்சு; ஆனால் கடைசி நேரத்திலே, என் நண்பர் சிதம்பரம் வழியா எனக்குத் தெரிஞ்சு போச்சு!''

''தெரிஞ்சவரையிலும் நல்லதாய் போச்சு. இல்லாட்டி, இந்தப் பிறவியிலே நான் உங்களைத் திரும்பவும் சந்திச்சிருக்க முடியாதுதான்!''

ரேவதியின் புனிதமான அந்தரங்க மனதில் ஒரு மனோலயமான பிரார்த்தனை சரணாகதி அடைந்திட, அவள் மெய்மறக்க நேர்கிறது. 'கருமாரி, இவரை நீயே தான் என்னிடம் அனுப்பி வச்சிருக்கிறே. நீ பேசாட்டியும், உன் நல்ல புத்தியின் புண்ணியத்தினாலே, நான் இத்தனை காலமும் அனுபவிச்ச சலனங்களையும், சஞ்சலங்களையும் மானம் மரியாதையோட கடந்து, நானும் நல்ல புத்தியைப் பெற்றுக்கிட்டேன். என் முன்னாள் கணவரான ஞானசீலனை நீ எனக்கு நிரந்தரக் கணவராக ஆக்கி வைப்பதன் மூலம்தான், எனக்கு உண்டான ஒரு நல்ல பாதையை உன்னாலே திறந்து விடவும் முடியும். அப்பத் தான், எந்த நிமிடத்திலே நான் செத்தாலும் என் உயிர் நிம்மதியாகப் பிரியவும் வழி பிறக்கும்!'

சுயதரிசனம் முடிந்து விழிப்படைகிறாள், அவள். எதிரே உயிரும் உடம்புமாகக் காட்சியளிப்பது ஞானசீலன் அல்லவா? ஓ!... ராஜராகம் அவளுக்கு, ரேவதிக்கு டாக்டர் ரேவதிக்குப் பிடிபட்டு விட்டதோ!...

# 14. பெண்மையின் தாகம்

இன்றுதான் ரேவதியை நேருக்குநேர் பார்க்கிறான், ஞானசீலன்.

அவர்கள் பிரிந்து பத்து ஆண்டுகள் ஆகிவிட்டன.

ரேவதியை வேடிக்கை பார்ப்பது போலவும் பார்த்தான், அவன்.

''நீங்கள் திடுதிப்னு தீவிரமான யோசனையிலே மூழ்கிப் போனதினாலேதான், நானும் வெறுமனே இருந்தேன்!'' என்றான்.

''யோசனைக்கு என்ன குறைச்சல்? காரியம் கைகூட வேணுமே?'' ரேவதி விரக்தியுடன் பேசினாள்.

''நீங்கள் ஒரு காரியத்தை நினைச்சு, அது கைகூடாமல் தப்பிப் போயிட முடியுங்களா?''

''உங்கள் நல்ல வாக்கு நல்லதனமாகப் பலிச்சால் சரிதானுங்க!''

''அது கிடக்கட்டும். பேட்டிக்கு நான்தான் தாமதமா வந்துவிட்டேன்.''

''நீங்கள் வர்றதுக்கு ஒரு மாத்திரைப் பொழுது தாமதிச்சிருந்தால்கூட, இந்நேரம் நான் 'லேட் ரேவதி' யாகத்தான் ஆகியிருப்பேன்!''

''என்ன சொல்றீங்க, நீங்க?''

"அது கெடக்கட்டும். இப்போ நான் என்ன செய்யணும்?"

"நீங்கள் ஏற்பாடு செஞ்சிருக்கிற 'மணமகன் தேவை' என்கிற அதிநவீன சுயம்வரத்துக்கான போட்டியிலே பங்கு கொள்ள வந்து, உங்களோட பேட்டிக்காகக் காத்திருக்கிற ஒரு வேட்பாளன், நான். எனக்கு நேரம் ஆகுது. சீக்கிரமாக பேட்டியை முடித்து, என்னை அனுப்பி வையுங்கள், டாக்டர் ரேவதி."

கட்டுப்படுத்திக் கொண்ட ஒழுங்கோடும், நிதானத்தோடும் அமைதியாகப் பேசினார், ஞானசீலன்.

தீயிலே வீழ்த்தப்பட்ட ரோஜாப்பூவாக வாடித் துடித்தாள், ரேவதி. உந்திக் கமலத்தின் பொங்கிப் புரண்ட சுடுநீர் வெள்ளம் கண்களிலே வடிகால் கட்டிப் பாய்ந்தோடிற்று. மேனி நடுங்கியது. நெஞ்சை ஆற்றாமையோடு பிசைந்து கொண்டாள். "நீங்கள் ஏன் இப்படி என்னை சோதிக்கிறீங்க?" என்று கேட்டு விம்மினாள்.

அப்போது சிரித்தது ஞானசீலன்தானா? "நான் உங்களை சோதிக்கிறேனா? அடக்கடவுளே! உங்களுக்கே உங்கள் விஷயம் மறந்து போச்சா, என்ன? மிஸ் ரேவதி, இப்ப என்னைச் சோதிக்க வேண்டியது நீங்கள்தான்! ஊம், தொடங்குங்கம்மா!" என்று மீண்டும் கேட்டுக் கொண்டார்.

"உங்களைச் சோதிக்க நான் யார்?"

"நீங்கள் மிஸ் ரேவதி—மிஸ் டாக்டர் ரேவதி!"

ஞானசீலன் மீண்டும் சிரித்தார், ஏளனமாகவே சிரித்தார்.

ரேவதி ஆண்மையின் கம்பீரமான செருக்கோடு, குனிந்திருந்த தலையை நிமிர்த்தி உயர்த்துகிறாள். நேர் கொண்ட பார்வையால் ஞானசீலனைப் பார்வையிட்டாள். அளந்தாள். சோதித்தாள்...'இவரை...மிஸ்டர்

ஞானசீலனை மறுபடியும் பார்க்கிறதுக்கு பத்து ஆண்டுகள் இடைவெளி தேவைப் பட்டிருக்குதே! என் கோபாவேசம் முழுவதும் தணிஞ்ச காலத்திலே, அவர் கண்காணாமல் எங்கேயோ போயிட்டார். இடையிலே ஒருவாட்டி அவரைத் திரும்பச் சந்திக்கிற பொன் வாய்ப்பை என் தாய் எனக்குக் கொடுக்க மனசு இரங்கியிருந்தால், என்னோட மன்னிப்புக் கடிதத்தை அவர் கையிலே கொடுத்திருக்க மாட்டேனா?' இதழ்கள் விலகின. என்னவோ சொல்லத் துடித்தாள்.

''மிஸ் ரேவதி, நான் கதை கேட்க வரவில்லை!''

''மிஸ்டர் ஞானசீலன், நானும் கதை சொல்ல விரும்பவில்லை!''

''ரேவதி!'' என்று ஆவேசமான ஆத்திரத்தில் கூவினார், ஞானசீலன்.

''நீங்கள் போடுற கூச்சலைக் கேட்டுப் பயப்படுறத்துக்கு நான் ஒண்ணும் கொக்கு இல்லே! நான் யார், தெரியுமா? நான் வெறும் ரேவதி இல்லை! நான் மிஸஸ் ரேவதி ஞானசீலன்! ஆமாம்; புரிஞ்சுக்கங்க!'' ஆத்திர ஆவேசத்தில் உணர்ச்சிகள் கொப்புளிக்க விடை கூறினாள், ரேவதி.

''உங்களை இனித்தான் நான் புரிஞ்சுக்கிடப் போறேனா? சும்மா ஏன் நாடகம் போடுறீங்க?''

''நாடகம் போடுறது நீங்கள்தான்! உங்கள் மனசாட்சியைத் தொட்டுப் பார்த்து, சிதம்பரம், சமூகவேசி மாதங்கினி, ராத்திரி ரவுடி முத்தையன் முதலான பேர்களையும் தொட்டுப்பாருங்க, ஞானசீலன்! நாடகம் போட்டதும், நடிப்பதும் நீங்களேதான் என்கிற உண்மையை நீங்கள் புரிஞ்சுக்கிடுவீங்க!''

''இப்பவும் நீங்கள் என்னைக் குற்றவாளி ஆக்குறீங்க, டாக்டர் ரேவதி.''

"உண்மை அதுதானே மிஸ்டர் ஞானசீலன்? அதிருக் கட்டும். ஒரு திருத்தம். நான் இப்போ டாக்டர் ரேவதி இல்லை; இப்ப நீங்க என்னைத் தேடி வந்திருக்கிறது என்கிட்டே வைத்தியம் பண்ணிக்க இல்லையே?—பின்னே, இப்ப எப்படி நான் டாக்டர் ரேவதியாக இருக்க வாய்க்கும்? திருப்பியும் சொல்றேனுங்க. நான் ரேவதி ஞானசீலன்!... ரேவதி ஞானசீலன், நான்!"

ஞானசீலன் நல்ல பாம்பின் சீற்றத்தோடு அட்டகாச மாகவும், நிர்த்தாட்சண்யமாகவும் சிரித்தவாறு ஆணவ மாக எழுந்து நடந்தார்.

காவில் இடறிய கைத்துப்பாக்கியை எற்றிவிட்டார். மேஜையில் கைகளை ஊன்றினார். கரணம் போடவா?

சாய்ந்தபடி, மேஜையிலே தென்பட்ட அந்தத் திருமணப்படம், மங்கலத்தாலி, பழுப்பேறிய கடிதங்கள், டைரி, புதியசேலை, இரவிக்கை ஆகியவற்றை மேலோட்ட மாகப் பார்த்ததுடன் நிறுத்திக்கொண்டு, தொடர்ந்த சிரிப்பை நிறுத்தாமல் தொடரலானார்; "மிஸ் ரேவதி, நீங்கள் பகல் கனவு காணுறீங்க."

ரேவதி நல்லதொரு வீணை செய்து மடியில் கிடத்திய வண்ணம், வண்ணம் நிரம்பின நரம்புகளில் ஆனந்த பைரவி ராகத்தை சங்கீத ரசனையுடன் மீட்டிப் பரவசத் தோடு ஆனந்தமாக அனுபவித்து மெய்ம்மறந்திருக் கையில், ஞானசீலனின் நையாண்டிப் பேச்சு காதுகளில் விழவே, தவித்துப்போய்க் கண்களை உருட்டி விழித்தாள். "அட பரிதாபமே! நான் காண்றது ராத்திரிக் கனவுங்க!" என்று சலனம் துளியுமின்றிச் சொன்னாள்.

இதைக் கேட்டதும், ஞானசீலன் பற்றறுத்துப் புன்னகை செய்தார். "ஜோக் அடிக்கிறதை நீங்கள் இன்னம்கூட மறக்கல்லையா?" என்று கேள்வி கேட்டார்.

"இத்தனை காலமும் ஜோக் அடிக்கிறதை அறவே மறந்துதான் போயிருந்தேன்; ஆனால், இப்ப உங்களைக்

கனவிலே கண்டமாதிரியே நேரிலேயும் கண்டதும், என்னையும் அறியாமலும், என்னையும் மீறிக்கிட்டும் மனம் கும்மாளம் போடவே, பழைய ஞாபகத்திலே என்னவோ சொன்னேன். அது மெய்யாகவே நல்ல ஜோக்காகவும் அமைஞ்சிபோச்சு!'' சோகமாக விடை சொன்னாள், ரேவதி.

''அட பாவமே!''

''அட புண்ணியமே!''

''ரேவதி...!''

''நான் வெறும் ரேவதி கிடையாது. நான் ரேவதி ஞானசீலனாக்கும்!'' மின்னித் தெறித்த தன்னம்பிக்கையின் பெருமிதத்தோடு சொல்லிவிட்டுக் கண்களை அவளுக்கே கைவந்த உயர்வான மனப்பாங்கோடு உயர்த்தி ஞானசீலனை ஊடுருவிப் பார்த்தாள், ரேவதி.

கொலை வெறி கொண்டவனைப்போல சிரித்தார் ஞானசீலன். ''ரேவதி'' என்று கூப்பிட்டார். ''ரேவதி, இந்தப் பிறவியில் நீங்கள் ரேவதி ஞானசீலனாக ஒரு நாளும் ஆகமுடியாது; ஆகவே முடியாது!'' என்று தீர்ப்புக் கூறினார்.

ரேவதி உருக்குலைந்தாள். நெஞ்செலும்பில் தூண்டில்முள் செருகிக்கொண்ட மாதிரி, அவள் துடித்தாள்; இரத்தமும் துடித்தது. அந்தத் துடிப்பில் அவளுடையதும் அவளுக்கே உரித்தானதுமான அந்த உயர்வு மனப்பான்மைத் தன்மையும் துடிதுடித்ததோ, என்னவோ? நான்...நான் பாரத சமுதாயத்தைச் சேர்ந்த சராசரிப் பெண் ரேவதி!...என்னோட பெண்மை பூரணத்வம் அடைஞ்சிட வேண்டாமா? எனக்கு அந்தப் பாக்கியம் கிடைக்கணும்னா, நான் ஞானசீலனோட உடன்பாடு செஞ்சுதான் தீரவேணும்!—இது என் சொந்த விஷயம்; இது என் பந்தப்பிரச்னை!...ஓ... ஞானசீலன் திரும்பி விட்டார் அல்லவா?...பேஷ்!

ஞானசீலன் சிரித்துக்கொண்டேயிருந்தார்.

''நீங்களேதான் சிரிக்கிறீர்களா?''

''பின்னே, விதிக்கா இத்தனை அர்த்தத்தோட சிரிக்கத் தெரியும் மிஸ் ரேவதி!''

''விதி சிரிச்சு நான் முன்னே பின்னே பார்த்திருந்தால் தானே—கேட்டிருந்தால்தானே—எனக்கு அந்தத் துப்புப் புரியும்?...''

''இப்பப் புரிஞ்சுக்கங்க. நானேதான் விதி!''

ஞானசீலனின் புது விதிச் சிரிப்பு திக்கெட்டும் முழங்கியது!...

''அத்தான்...!'' வீரிட்டாள், ரேவதி.

மறுகணம் அவள் ஞானசீலனின் கால்களிலே நெடுஞ்சாண் கிடையாகச் சரண் அடைந்தாள்.

தாலி கட்டின கணவனுக்கே தன் உயிரையும் உடலையும் ஆத்ம நிவேதனம் செய்துவிட்டவளைப்போல, ஞானசீலனின் காலடியில் விழுந்து கிடந்தாள், அவள்.

ஞானசீலன் பெரிய காரியத்தைச் சாதித்துவிட்டவராக அங்கேயிருந்து அப்பால் நகர்ந்தார். வெற்றியைத் தேடிய பயங்கரச் சிரிப்பு பயங்கரமாகவே தொடர்ந்தது.

எங்கிருந்தோ புதிய பாட்டு ஒன்று மிதந்து வந்து தவழ்ந்தது. என்ன பாட்டு அது? என்ன ராகம் அது?

ரேவதி மெல்ல மெல்லத் தலையை உயர்த்தினாள்.

ஒரு குழந்தையைப்போல, ஞானசீலனைப் பாசத்தின் வெறியோடு ஊடுருவினாள். அவள் கண்களின் மாயத் தாகம் இன்னமும் குறையக் காணோம்.

''அத்தான்! பெரிய மனசு பண்ணி, என்னை உங்கள் ரேவதி ஞானசீலனாக ஏற்று, உங்களோட பழைய ரேவதிக்குட்டியாக என்னை மறுபடியும் ஏற்றுக்கிட்டு,

என் மானத்தையும் மரியாதையையும் காப்பாத்துங்க, அத்தான்!'' என்று கெஞ்சி அலறிக் கதறினாள், அவள்!

ஞானசீலனிடம் ஆத்திரத்தீ அடங்காமல் கொழுந்து விட்டு எரிந்தது.

''மிஸ் ரேவதி!...''

''அத்தான், நான் ரேவதி ஞானசீலன்!...நான் ரேவதி ஞானசீலன், அத்தான்!''

சோகம், காட்டுத்தீயாகிவிடுமோ!

''உங்களுடைய அத்தான் ஞானசீலன்...மிஸ்டர் ஞான சீலன் செத்துப்போய் ஆண்டு பத்து ஓடிப் போயிடுச்சு, மிஸ் ரேவதி!...''

''ஐயையோ... அப்படிச் சொல்லாதீங்க! உங்கள் வாயிலே இன்னொரு தக்கம் அபசகுனமாட்டம் அப்படி யெல்லாம் சொல்லிப்பிடாதீங்க! உங்களுக்குக் கோடிப் புண்ணியம் கிடைக்குங்க!'' என்று ஓலமிட்டுக் கதறிய ரேவதி, கழுத்தில் எதையோ தேடினாள்; காணாமல் திடுக்கிட்டாள்.

## 15. விடை பெற்ற கண்ணீர்!

கழுத்தில் காணோம் என்றதும் கடுகளவு நேரத்தில் அதிகலங்கிப் போனாள், ரேவதி.

மயில் பதக்கம் மட்டுமே அவளது விரல்களில் சிக்கியது. அவள் தேடியதைக் காணோம்.

திடீர் என்று நினைவு வர மேசையைப் பார்த்தாள்.

அவள் கழற்றிப் போட்ட திருமாங்கல்யம் பரிதாப மாகக் கிடந்தது.

மேசையை நோக்கி விரைந்தாள். கைகள் நடுங்க, மாங்கல்யத்தை எடுத்துக் கழுத்தில் போட்டுக் கொண்டே திரும்பி வந்தாள்.

''மிஸ்டர் ஞானசீலன், இனியாகிலும் என்னை உங்கள் ரேவதி ஞானசீலனாக ஏற்றுக்கிடுங்கள்'' என்று கையெடுத்துக் கும்பிட்டாள்.

அவன் உதாசீனமாக நின்றான்.

உணர்ச்சிவசப்பட்டவளாக ஞானசீலனின் கைகளைப் பற்றித் தன் கண்களிலே ஒற்றிக் கொண்டு, ''ஐயோ, தெய்வமே!'' என்று கூக்குரலிட்டு அழுதாள், அவள்!

தெய்வம் வெறும் கல்லாக, மரமாக, உலோகமாக இருப்பதுதானே இயற்கை!

ஞானசீலன் கைகளை உதறிக் கொண்டே நகர்ந்தார். சிரித்தார். ஞானசீலனுக்கு என்று இப்படி ஒரு மாயச் சிரிப்பா?

காதுகளைப் பொத்திக் கொண்டு, ஞானசீலனுக்கு நேர் எதிரிலே வந்து நிற்கிறாள் ரேவதி. ''இனியும் அப்படிச் சிரிக்காதீங்க, ஞானசீலன்'' என்று கத்தினாள்.

''நான் எப்படிச் சிரிக்காமல் இருக்க முடியும், ரேவதி? இப்படி நீங்கள் அழுது கதறுவதைக் கேட்கவும் பார்க்கவும் தானே நான் இந்தப் பத்து ஆண்டு காலமாகத் தவம் கிடந்தேன்!''

''உங்கள் தவத்தைப் பலிக்கச் செஞ்சிட்டேன்தானே, நான்?''

''சந்தேகம் என்ன?''

சிரிப்பு இன்னமும் கொட்டி முழக்கியது.

''அப்படியானால் என் தவத்தைப் பலிதமடையச் செஞ்சிட வேண்டியது உங்கள் கடமை இல்லீங்களா, மிஸ்டர் ஞானசீலன்?''

''பிரமாதமா விவாதிக்கிறீங்க, டாக்டர் ரேவதி!''

''நீங்கள் கிளியானால், மறுதரமும் படிச்சுக் கொடுக்கிறேன். இப்போது உங்கள்கிட்டே விவாதம் பண்றது டாக்டர் ரேவதி இல்லே... ரேவதி ஞானசீலன்!''

''நீங்கள் உங்கள் பேரோட ஒட்டி உறவாட வச்சிருக்கிற அந்த ஞானசீலன்...''

''இதோ, என் கண் முன்னாலே நிதர்சனமா நிற்கிறார். ஞானசீலனுக்கு ஆயுசு நூறு!''

''பாவமே, ஞானசீலன்! அவனுக்கு அற்ப ஆயுசு தான்... எமன் ஏமாந்தால் அவனுக்கு நீங்கள் கோட்டை கட்டுறாப்பிலே, ஒருவேளை நூறு வயசு எழுதிப் போடலாம்!''

"சூ, மந்திரகாளி!... மிஸ்டர் எமதர்மராஜா ஏமாறக்கடவது!..."

"சாபமா?"

"நீங்களே கொஞ்சம் முந்தி உங்களுக்குச் சாபம் போட்டுக்கிட்டீங்களே அதுக்கு விமோசனம் செஞ்சேன்."

"உங்கள் பேச்சும் பிரமாதம்."

"உங்கள் பாராட்டு ஆத்மார்த்தமாக வந்தால், என் மகிழ்ச்சி உங்களுக்கு உரித்தாகுக!"

"உங்கள் மகிழ்ச்சி எனக்கு உரித்தாகிட்டுதுங்க!"

நாணம் சிலிர்க்க, முறுவல் பூத்தாள், ரேவதி. "நினைப்பு வர்றப்ப ஒரு சின்ன உண்மையை நினைப்பூட்ட வேண்டியது என் பொறுப்பு. நான் பிரமாதமாக விவாதம் பண்றதாகச் சொன்னீங்க. நான் வாதாடினது நியாயத்துக்காகத்தானுங்களே? உங்களை மாதிரி இல்லீங்களே?"

"என்ன சொல்றீங்க, நீங்கள்?"

"ஓர் அழகான பாசக் கனவு மாதிரி என் வயிற்றிலே வளர்ந்துக்கினு இருந்த என் குழந்தையை — உங்கள் குழந்தையை — நம் குழந்தையை வெறும் கனவாக ஆக்கிய முதல் குற்றவாளியே நீங்கள்தான்! மோக வெறி உங்கள் கண்களை மறைக்க, வாயும் வயிறுமாக இருந்த என்னை நெஞ்சிலே துளியத்தனை இரக்கம் இல்லாமல் எட்டித் தள்ளின பாவத்துக்குக் கேவலம் வாய்ப் பரிகாரம் கூடத் தேடிக்கிடலையே நீங்கள்..." ஆறாத துயரத்தை ரேவதியின் விழிகள் ஆற்ற முடியாமல் பேசின.

"நீங்கள் மாத்திரம் என்னவாம்? மனிதாபிமானத்தைக்கூட மறந்தும் துறந்தும் என்னை—உங்களுக்கு ஓர் அமீர்தயோகம் வெள்ளிக்கிழமையிலே, நான் கொண்ட முதல் காதலின் பேராலே, நேசத்தோட மூணு முடிச்சுப்

போட்ட என்னை விவாகரத்து செஞ்சிட்ட பாவம் மகத்தான குற்றம் இல்லையா?''

''பாவத்துக்கு மன்னிப்புக் கேட்டு உங்களுக்கு எழுதி வச்ச கடிதம் எல்லாம், உங்கள் முகவரி தெரியாததாலே, இன்று வரையிலும் என்கூடவே தங்கிப் போச்சு. இந்தா பாருங்க!''

பழுப்பேறிய கடிதங்களை ஞானசிலனிடம் காட்டினாள்.

''எல்லாத்துக்கும் நிவர்த்தி செஞ்சிடத்தான், உங்கள் பாதாரவிந்தங்களிலே தன்னை மறுபடியும் காணிக்கை வச்சிட்டாளே உங்கள் ரேவதி.''

''என் ரேவதி...!''

''ஊம், உங்கள் ரேவதி என்ன ஆனாள்?... அவளைச் சாகடிக்கிற புண்ணியத்தையும் கட்டிக்கிடப் போறீங்களா? அப்படின்னா, நம்ம முதலிரவிலே என் கையிலே செஞ்சி தந்த சத்தியம் என்னாகிறதாம்? உங்கள் வாழ்நாள் பரியந்தம் இந்த ரேவதி ஒருத்தியேதான் கடைசி வரைக்கும் உங்கள் நெஞ்சுக் கோயிலிலே கொலு வீற்றிருப்பான்னு நீங்கள் சொன்னதெல்லாம் பொய்தானா?''

''என் சத்தியமும் பொய் இல்லே; என்னோட அந்த ரேவதியும் பொய் ஆகமாட்டாள்!... ஆனால், இந்த ரேவதிதான் பொய் ஆகிட்டாங்க! அதாலேதான், இந்த ரேவதி மறுமணம் செஞ்சிக்கிடத் துணிந்து ஒரு சுயம்வரத்துக்கும் ஏற்பாடு செஞ்சிருக்காங்க!''

''இந்தப் பழி ரொம்பவும் பாவமானதுங்க, ஞானசிலன்! என் அந்தரங்கமான மனசைப் பகிரங்கமாகச் சோதனை செஞ்சு பார்க்கிறதுக்காக என் மனசாட்சி நடத்தின அக்கினிப் பரீட்சைதான் இப்படிப்பட்ட 'மணமகன் தேவை' நாடகம்! அன்றைக்கு நீங்கள் ராசாங்கம் நடத்தின என் நெஞ்சிலே இன்றைக்கும் நீங்களேதான்

ஆட்சி பண்றீங்க... என்னோட மனச்சாட்சியே நீங்கள் தான்னு எனக்கு அடிக்கடி எச்சரிக்கை செஞ்சு அனாமதேயக் கடிதங்களை அனுப்பிக்கிட்டிருந்த நீங்கள், என் மனசாட்சியை சோதிச்சும் பார்க்கிறீங்களா?... உடலாலே நீங்கள் கேடு கெட்டுப் போயிருந்தாலும்கூட, உள்ளத்தாலே எனக்கு மாத்திரம் சொந்தமும் பந்தமும் உறவும் உரிமையும் கொண்ட நீங்கள் கண்ணுக்குத் தெரியாத ஒரு தெய்வமாக என் இதயத்தில் குடியிருக்காமல் போனாலும், கண்ணுக்குத் தெரிஞ்ச ஒரு மனிதனாகக் கொலு இருக்கிற என்னோட பழைய ஞானசீலனைப் பார்க்கிறீங்களா?... இப்பவே என் நெஞ்சைத் திறந்து காண்பிப்பேனுங்க, அத்தான்!'' வைராக்கியமான ரோஷம் பீறிடச் சவால் விட்டாள் அவள்.

''ரே... வ...தி!''

''இன்னுமா உங்களுக்கு நல்ல புத்தி திரும்பல்லே, அத்தான்?...ஆத்தாளே, கருமாரி! நீயே சொல்; நீயே சொல்லிக் கொடு!...அத்தான், நான் வெறும் ரேவதி இல்லேங்க. நான் ரேவதி ஞானசீலனுங்க, அத்தானே!... உங்கள் தீர்ப்பைத் திருத்தி எழுதி வாசிங்க; என்னை உங்கள் ரேவதி ஞானசீலனாக அங்கீகரிச்சு, உங்கள் வாயாலே என்னை 'ரேவதி ஞானசீலன்' அப்படின்னு ஒரு வாட்டி, ஒரேயொரு வாட்டியாச்சும் அழையுங்க, அத்தான்!''

கண்ணீர் வெள்ளம் கரை புரண்டது.

''பரிசுத்தமான என்னோட இதயத்திலே மாயத் தேவதையாட்டம் கும்மாளம் போட்டுக்கிட்டு இருக்கிற அந்த ரேவதியைத்தான் என்னாலே ரேவதி ஞானசீலன்னு ஏற்றுக்கிடமுடியும்!''

சிரிப்பின் அலைகள் ஆர்ப்பரிக்கின்றன.

''அப்படின்னா, என்னை உங்கள் ரேவதி ஞானசீலனாக ஏற்றுக்கிட முடியாதுங்களா?''

''முடியாது!''

''முடியாதா?''

''முடியாது! முடியாது!...''

''அப்படியா? மகிழ்ச்சி, ரொம்ப மகிழ்ச்சி! என்னை நீங்கள் ரேவதி ஞானசீலனாக அங்கீகாரம் செய்யத் தேவையில்லே...எனது தூய அந்தரங்கத்திலே நேசத் தோடவும் பாசத்தோடவும், அன்போடவும், கருணை யோடவும் சிரிச்சுக் கூத்தாடிக்கிட்டு இருக்கிற என்னோட உண்மையான அத்தானாக பழைய ஞானசீலன் என்னை ரேவதி ஞானசீலனாக மனப்பூர்வமாக அங்கீகரிச்சு ஏற்றுக் கிட்டு பத்தாண்டு ஆகிடுச்சு! அது போதும் எனக்கு!'' புயல் கடந்த அமைதியில் நிதானமாகவே பேசி நிறுத்தி னாள், ரேவதி.

''நான் வர்றேன்...குட்பை!''

நகர்கிறார், ஞானசீலன்.

''மிஸ்டர் ஞானசீலன், ஒரு நிமிடம் நில்லுங்க!''

ஞானசீலன் நின்றார்.

மறுகணம்—

அங்கே, ரேவதி துப்பாக்கியும் கையுமாகத் தோன்றி னாள். ''இப்பிறப்பிலே உங்களைக் கண்ணுக்குக் கண்ணாகத் திருப்பிச் சந்திக்கவே வாய்க்காதின்னு ஆத்திரப்பட்டு, புத்தம் புதிசான இந்தத் துப்பாக்கியாலே என் உயிரை நானே குடிச்சிடத் துடிதுடிச்ச நேரத்திலே தான், நீங்கள் என் முன் வந்து நின்னீங்க!...தெய்வாதீன மாய் என்னைத் தேடிவந்து சேர்ந்த நீங்களோ விதியாக என்னைச் சோதிச்சிட்டீங்க! என்னை நிராகரிச்சிட்டீங்க! அப்புறம் உங்களுக்கு இந்த உலகத்திலே என்ன வேலை? மிஸ்டர் ஞானசீலன்...நான் ரேவதி ஞானசீலன்...டாக்டர் ரேவதி ஞானசீலன் ஆணையிடுகிறேன்...எஸ்...அட்டென் ஷன் ப்ளீஸ்!— ஒன்... டூ...!'' என்று வீரகர்ச்சனை செய் தாள். ஊழிக் கூத்தாடிய எல்லை சக்தியா அவள்?

''ரேவதி ஞானசீலன்! ... டாக்டர் ரேவதி ஞானசீலன்!''

வீறிட்டு அலறிக் கதறியவராகப் பொறி கலங்கிப் பாய்ந்து வந்த ஞானசீலன், அவளது கைகளை—அவ ளுடைய ரேவதியின் கைகளை கெட்டியாகப் பற்றிப் பிடித்துக் கொண்டார்.

துப்பாக்கி தரையைச் சரண் அடைந்தது!

ஞானசீலன் கண்ணீரைப் பெருக்கி விம்மினார். ''என் அன்பான ரேவதி ஞானசீலன்!...உன் ஆசை அத்தானுக்கு நீ வாழ்த்தின மாதிரி நிச்சயமா நூறு வயசு தானாக்கும்!''

மார்பகச் சேலை நழுவியதையும் உணராமல், வானத்துக்கும் பூமிக்குமாகக் குதிக்கிறாள், ரேவதி! ''ஆகா...நான் ரேவதி ஞானசீலன் ஆகிட்டேன்!...இந்த நல்ல நேரத்தைக் கொண்டாட, நான் உங்களுக்கு ஒரு விருந்து கொடுக்க வேணாமா? அங்கே பாருங்களேன், அத்தான். உங்களுக்குப் பிடித்தமான 'ராயல் சாலஞ்ச்' உங்களைக் கண்சிமிட்டி வரவேற்குதுங்க...ஊம்; முதலிலே நீங்கள் ஆரம்பிங்க; ஒரு நொடியிலே நானும் வந்து உங்களுக்குக் கம்பெனி கொடுக்கிறேனுங்க!'' என்று செரு மினாள், ரேவதி ஞானசீலன். மண்ணிலே வானம் தெரிந்திருக்குமோ?

புதிய மலர்ச்சி கண்ட மோகத்தை உச்சிமோந்த ஞானசீலன், 'ஓ கே' சொல்லி, பூக்கோப்பையில் ஊற்றிய மதுவைப் பாதி சுவைத்து, மீதிப் பாதியைத் தர்ம நியதிப் படி ரேவதிக்கு வழங்க ரேவதியைத் தேடினார்.

ரேவதி ஞானசீலன் நேரமான நல்ல நேரத்திலே என்ன தேடுகிறாளாம்? ஆருயிர் ரேவதியைக் கைகளைப் பிடித்து இழுத்து நெஞ்சோடு நெஞ்சாகக் கட்டி அணைத்துக் கொண்டு எச்சில் மதுவை அவள் வாயில் சொட்டுச் சொட்டாக ஊற்றினார். ஆப்பிள் கன்னங் களிலும், கொவ்வைக் கனி உதடுகளிலும் மாறி மாறி—

மாற்றி மாற்றி முத்தங்களைப் பதித்தார். "வெளிச்சத்தை இருட்டாக்கிட்டு, நாம இரண்டாவது முதலிரவைக் கொண்டாடினால்தான், நாம தொடங்கப் போற புது வாழ்க்கைக்குப் புதுமையான பொருள் கிடைக்கும். இல்லையா கண்ணே, கண்மணியே!"— கெஞ்சியும் கொஞ்சியும் கண்ணடித்துக் கண்களைச் சிமிட்டினார், ரேவதியின் ஞானசீலன்.

"நீங்கள் பேசறது உண்மைதான், அத்தான். இனிமேல் நீங்கள் பொய் பேசமாட்டீங்க. ராயல் சாலஞ்சிலே சாத்திரத்துக்காகத் துளி மிச்சம் வச்சிட்டு பாக்கி எல்லாத்தையும் நீங்கள் முடிச்சிடுங்க; இந்தா ஒரு நொடியிலே நான் வந்திடறேன்" என்று சொல்லி, அன்பின் பிடியினின்றும் திமிறி விடுதலை பெற்றாள்.

அவளை அவ்வளவு இலகுவிலே விட்டு விடுவாரா? "இனிமேல் உன்னை விட்டுட்டு ஒரு கணம்கூட என்னாலே பிரிஞ்சிருக்க முடியாது." முந்தானை தப்பி விட்டால் என்னவாம்? தாலி அகப்பட்டுக் கொண்டது. மறு வினாடியில், "ரேவதிப் பொண்ணே! அழுதியா, என்ன?" என்று உடல் அதிர, உள்ளம் அதிரக் கேட்டார், ஞானசீலன்.

"இது ஆனந்தக் கண்ணீர்" என்று சமாதானம் படித்தபின் மீண்டும் விடுதலை அடைந்தாள்.

நகர்ந்தவள் நின்றாள். கண்ணீர் பெருகியது. கொண்டவரை—உயிர் கொண்டவரை மீண்டும் மீண்டும் பார்த்தாள். "இதோ, வந்திடறேன்" என்று விடைபெறுகிறாள். கண்ணீர் மாத்திரம் விடைபெறவில்லை!

ஞானசீலனின் அழகான கண்கள் மேலும் சிவந்தன.

# 16. தூங்காத இரவு என்று ஒன்று

அடுத்த ஐந்தாவது வினாடியில்;

கைத்துப்பாக்கி வெடித்த சத்தம் எதிரொலித்தது.

வானத்துத் தேவதைக்கு இந்தப் பொல்லாத மண் கசந்து விட்டதோ?

நெஞ்சு வெடிக்கக் கதறினார், ஞானசீலன்!

ரேவதி தனக்குத்தானே சமர்ப்பித்துக்கொண்ட இரத்தக் காணிக்கையில் சல்லாபமாகச் சாய்ந்து கிடக்கிறாள். செக்கச் சிவந்த உதடுகள் துடித்துக் கொண்டிருந்தன.

''ரேவதி!'' வீரிட்டு அலறியவராக, அவளை அலுங்காமல் குலுங்காமல் வாரியெடுத்துத் தன்னுடைய மடியில் கிடத்திக் கொண்டார், ஞானசீலன். ''அவசரப் பட்டுட்டியேம்மா!'' அழுது புலம்பினார்; புலம்பி அழுதார்.

ரேவதியின் அழகான கண்கள் அழகாகத் திறக்கின்றன. ''அத்தான், என்னைப் பாருங்கள். இப்ப அந்தரங்க சுத்தியோட சொல்லுங்கள். நான் யாராம்?'' குறும்புப் புன்னகையுடன் வினவினாள்,

''நீ...நீ... என்னோட ரேவதி ஞானசீலன்... டாக்டர் ரேவதி ஞானசீலனாக்கும்!'' ஞானசீலன் கதறினார்! அலறினார்.

மார்புத்தாலி இரத்தச் சிலுவையென நிர்மலமாகத் தரிசனம் தந்தது.

ரேவதிக்கு ஆற்றாமை மேலிட்டிருக்க வேண்டும். ஓய்ந்து போய்விட்ட கைகளை உயர்த்த முயன்றாள். ஞானசீலனின் கண்ணீரைத் துடைக்கவா? முடியவில்லை.

ஒட்டிக் கிடந்த உயிரின் மூச்சைப் பிரயத்தனப்பட்டு உள்வசமாகத் தாங்கிக் கொண்டாள்; உதடுகளில் இரத்த வரிகள் கசிந்தன.

''சத்தியமாகச் சொல்றேனுங்க, அத்தான்; இப்பத் தான் என் மனசு உண்மையிலேயே சமாதானப் பட்டுச்சுங்க!... இந்த அளவுக்காச்சும் எனக்கு ஆறுதல் கிடைச்சுதே! — அந்த மட்டுக்கும் நான் கொடுத்து வச்சவள்தான்! என்னைப் பாருங்களேன்; நான் துளியானும் அழறேனா? என்னை மாதிரி நீங்களும் சமர்த்தாய் அழாமல் இருங்க அத்தான்! இந்த மகோன்னதமான நிம்மதியோட நான் புறப்பட்டாகணும். நான் மகா பாக்கியவதி. என்னை உயிராலும் உள்ளத் தாலும் ஆத்மார்த்தமாக நேசிச்ச புண்ணியவான் ஞானசீலனை நெஞ்சிலே சுமந்துக்கிட்டு, பூவோடும், போட்டோடும் உங்ககிட்டேயிருந்து விடைபெறக் கொடுத்து வச்ச நான் புண்ணியவதிதான்.

''பேச்சை நிறுத்திக் கொண்டதோடு நின்றிருக்கக் கூடாதா ரேவதி? மூச்சும் நின்றுவிட்டதே!... தெய்வமே!... தாயே!...''

''என்னோட கண் திறந்தப்ப, நீ கண்ணை மூடிக் கிட்டா எப்படி? இந்த அநியாயம் தெய்வத்துக்கே அடுக்காதே?... கண்ணைத் திற ரேவதி, கண்ணைத் திற!''

கண்கள் திறக்கவில்லை. ரேவதி ரோஷக்காரி!...

''கண்ணே ரேவதி!... கோபப்பட்டுடாதே... கோவிச் சுக்கிடாதே!... அம்மோடி ரேவதி ஞானசீலன்... இந்த

மண்ணிலே நீ இல்லாமல் போனப்புறம் நான் இருந்து என்ன பயன்? உன்னோட நானும் புறப்படுறேன்! அப்பத்தான், நமக்கு நாமே விதியாகி, வினையுமாகி விளையாடிக்கிட்ட நம்மளோட வாழ்க்கை விளையாட்டுக்கு உண்மையான அர்த்தமும் கிடைக்க முடியும்.''

கீழே கிடந்த துப்பாக்கியை கையில் எடுத்தார்.

மீண்டும் அது ஒலித்தது.

அதோ...

ஞானசீலனின் ரேவதியும், ரேவதியின் ஞானசீலனும் பளிங்குத் தரையிலே ஆனந்தமாகப் பள்ளி கொண்டிருக்கிறார்கள்!

தயவு செய்து, யாருமே அந்த விசித்திரத் தம்பதியை எழுப்பி விடாதீர்கள்!

# மணிவாசகர் பதிப்பகத்தின்

## சிறந்த நாவல்கள்

**சு. சமுத்திரம்**

ஊருக்குள் ஒரு புரட்சி
வளர்ப்பு மகள்
உயரத்தின் தாழ்வுகள்
புதிய திரிபுரங்கள்
இல்லந்தோறும் இதயங்கள்
நெருப்புத் தடயங்கள்
சத்திய ஆவேசம்
வெளிச்சத்தை நோக்கி
ஒரு கோட்டுக்கு வெளியே
வேரில் பழுத்த பலா

**நீல பத்மநாபன்**

பள்ளிகொண்டபுரம்

**எம். வி. வெங்கட்ராம்**

அரும்பு
வேள்வித் தீ

**கு. நாராயணன்**

மயிலாசனம்

**ப. கோ. கலியபெருமாள்**

கடலோரம்

**கமலா சடகோபன்**

வாரிசு

---

Wrapper Printed at Karpakam Achakam, Madras-600 002.